வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 13.08.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 246 | பக்கங்கள் : 20




07 தி. மு. கவுக்கு எதிரியாக உருவெடுக்கும் அண்ணாமலை!



08 தீர்வுக்கு எதிரான சக்திகளை வலுப்படுத்தும் ஜனாதிபதி



09 13இற்கு எதிராக சிங்கள பௌத்தத்தை அணிதிரட்டும் ரணிலின் உத்தி!




10 வல்லுநர்களின் வெளியேற்றமும் இலங்கை எதிர்நோக்கும் சவால்களும்!

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட

# தமிழ்க்கட்சிகள் ரணிலுடன் கைகோர்க்க வரவேண்டும்!

## அழைக்கிறார் பிரதமர் தினேஷ்



கொழும்பு, ஓக. 13

**“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஏனைய தமிழ்க் கட்சிகளும் கைகோர்த்துச் செயற்படமுன்வரவேண்டும்.” - இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார் பிரதமர் தினேஷ் குணவர்த்தன.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இது விவாதம் செய்யும் காலம் அல்ல. நாட்டுக்காக - மக்களுக்காக கட்சி வேறுபாடின்றி அனைவரும் ஒன்றிணைந்து செயற்படும் காலமே இது.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு தொடர்பான தனது முன்மொழிவுகளையும் எதிர்காலத் திட்டங்களையும் நாடாளுமன்றத்தில் முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட உரையாற்றியுள்ளார். இந்த உரை வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த உரை.

19



## அடிகாயங்களுடன் குடும்பஸ்தர் கல்வியங்காட்டில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 13

கல்வியங்காடு ஜி.பி.எஸ் விளையாட்டரங்கு வீதிக்கு அருகில் உள்ள வீடொன்றில் 52 வயதான குடும்பஸ்தர் மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குடும்பஸ்தரின் மனைவி நேற்று முன்தினம் திருமணச் சடங்குக்கு சென்றவேளை குடும்பஸ்தர் தனியாக வீட்டில் இருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை உறவினரொருவர் இவர்களது வீட்டுக்கு சென்று பார்த்தபோது குடும்பஸ்தர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதை அவதானித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில்

19

## அதிகாரப் பரவலாக்கலுக்கு எதிராக களமிறங்கும் விமல்

கொழும்பு, ஓக. 13

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டம் மற்றும் அதிகார பரவலாக்கல் தொடர்பான யோசனைகளாக ஜனாதிபதி அண்மையில் பாராளுமன்றத்தில் முன்வைத்த யோசனைகளை தோற்கடிக்க நாடு முழுவதும் மக்கள் சக்தியை உருவாக்க விமல் வீரவன்ஸ தலைமையிலான உத்தர லங்கா சபாகய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதியின் இந்த செயல்பாடுகள் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் கிடைக்கும் எனவும் இதன் மூலம் தமிழீழத்தின் ஊடாக செய்ய முடியாது போன விடயங்கள் இந்த யோசனைகள் மூலம்

19

## சர்வதேச நாணய நிதியத்துடனான மீளாய்வுக் கூட்டம் செப்ரெம்பரில்!

கொழும்பு, ஓக. 13

சர்வதேச நாணய நிதியத்துடனான மீளாய்வுக் கூட்டத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இதற்கமைய இந்தக் கூட்டம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி முதல் 19ஆம் திகதி வரை தொடர்ந்து 8 நாட்களுக்கு நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் இலங்கை, கோரப்பட்ட கடன் தொகையின் இரண்டாம் தவணையை பெற்றுக் கொள்ளும் என தாம் நம்புவதாக அவர் கூறினார்.

அத்துடன், இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதில் இலங்கை

19

## இலங்கைச் சொத்துக்கள் குறித்து சீன அதிகாரிகளுடன் ரணில் பேச்சு!

### பல்கலை மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஓக. 13

இலங்கையில் உள்ள சொத்துக்களை விற்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீன அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதற்கமைய அதிபர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் சீனாவுக்கான உத்தி யோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வசந்த முதலிகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அடுத்த மாதம்

19

## ‘13’ தொடர்பில் கோட்டாபய மௌனம் கலைக்கவேண்டும்

### சன்ன ஜெயசுமண கோரிக்கை

கொழும்பு, ஓக. 13

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சிகள் குறித்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது மௌனத்தை கலைக்க வேண்டும் என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜெயசுமண வேண்டுகோள் விடுத்துள்ளார்.

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஜனாதிபதியின் முயற்சிகளை மீண்டும் கடுமையாக கண்டித்துள்ள அவர், தேசத்தின் நலன்களுக்கு

19

## மின் உற்பத்தி மட்டுப்பாடு

கொழும்பு, ஓக. 13

சமனலவெவ மின் உற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி திறன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு வேகமாக குறைவடைகின்றமையே இதற்கான காரணமாகும்.

மின் உற்பத்தி நிலையத்தின் நுழைவாயிலில் நீர் சுழல் அபாயம் ஏற்பட்டுள்ளதால், மின் உற்பத்தித் திறனும் குறைந்துள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

தற்போது மின்னுற்பத்தி நிலையத்தின் மின்சார உற்பத்தி 80 மெகா வாட் ஆகும்.

இதனிடையே உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 5,751 ஏக்கர்

19

## மக்களின் பூர்வீக வாழ்விடங்களை அழிக்கும் அபிவிருத்தி தேவையற்றது

### சுண்ணக்கல் அகழ்வு தொடர்பில் சந்திரகுமார்

கிளிநொச்சி, ஓக. 13

மக்களின் பூர்வீக வாழ்விடங்களை இல்லாதொழிக்கும் வகையில் மேற்கொள்ளப்படுகின்ற எந்தவொரு அபிவிருத்தி திட்டங்களும் தேவையற்ற ஒன்றே.

அதனால் பன்னாட்டு நிறுவனங்கள் நன்மை பெறுவார்களே தவிர அந்த மக்கள் வாழ்விழந்து போவார்கள் என முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும், சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று வேரவில் பகுதியில் பத்தாவது நாளாக பொன் னாவெளி சுண்ணக் கல் அகழ்வுக்கு

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது

அந்தக் காலத்தில் தமிழக சஞ்சிகைகள் எல்லாமே யாழ்ப்பாணத்தில் கிடைக்கும்.

யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகக் கடையில் ஓடர் கொடுத்து விகடனையும் குமுதத்தையும் வாங்குபவர்கள் உள்ளூர் மல்லிகை சஞ்சிகையை கண்டு கொள்வதில்லை.

வாங்குகின்ற தமிழ் சஞ்சிகைகளில் வருகின்ற நல்ல விடயங்களை படிக்கிறார்களோ இல்லையோ அவற்றில் வரும் நகைச்சுவை துணுக்குகளை படிப்பதை யாரும் தவறவிடுவதில்லை. அதிகம் ஏன் அந்த துணுக்குகளை படிப்பதற்காகவே அவற்றை வாங்குபவர்களும் உண்டு.

அப்படி வாங்கி படித்த சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த துணுக்கு ஒன்று இன்று ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு கூட்டுறவு கடையில் நின்றுகொண்டிருந்த ஒருவர் கடையில் நின்றவரைக் கேட்டார்,

'என்னப்பா இது... அநியாயமா இருக்கு... பட்டப் பகலல்ல இப்படி மூட்டை மூட்டையா அவருக்கு அரிசி கொடுக்குறே..?'

அதற்கு ரேஷன் கடைக்காரர் சொல்வார்: 'பின்னே... அவரோட குடும்ப கார்டுல மொத்தம் 234 பேர் இருக்காங்களே...?' என்று.

யாழ்ப்பாணம் என்பது கூட்டுறவின் தலைநகரமாக இருந்தது ஒரு காலம். அமரர் வீரசிங்கம் கூட்டுறவின் தந்தை என்று வர்ணிக்கப்பட்டவர்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இயங்கிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நாட்டின் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே முன்மாதிரியாகச் செயல்பட்டன.

ஆனால், அதுவே பின்னர் அப்படியே மறுபக்கம் புரட்டிப்போட்டது. ஊழலின் மொத்த அடையாளம் என்பது கூட்டுறவுச் சங்கங்களாக மாறின. அதற்காக எல்லா சங்கங்களையும் சொல்கிறோம் என்பதல்ல. இன்றும் மிக முன்மாதிரியான சங்கங்கள் நம்மத்தியில் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. கிளிநொச்சி கரைச்சி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் பணிகள், முன்மாதிரிகள் பற்றி அண்மையில் ஒருவர் விதந்துரைத்ததைக் கேட்க முடிந்தது.

ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பல்வேறு விடயங்களில் பிரசித்தம் வாய்ந்தது. அதன் தலைவராக இருப்பவர் ஓர் அரசியல் கட்சியிலும் முக்கியஸ்தர்.

யுத்தகாலத்தில் நடந்த சம்பவம் ஒன்றால் அந்த சங்கம் பிரபல்யமானது மட்டுமல்ல அந்த விவகாரம் நீதிமன்றம் வரை சென்று வந்தது.

யுத்தம் நடந்து கொண்டிருந்த காலத்தில் ஏ 9 வீதியை அரசாங்கம் பூட்டி வைத்திருந்தது. இதனால் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு அத்தியாவசிய பொருட்கள் எடுத்து வருவதில் சிரமங்கள் ஏற்பட்டிருந்ததால் மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்காக அலறியடித்தகாலம் அது. அந்தப் பொருட்கள் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்க பல நூறு மடங்கு அதிக விலைக்கு விற்பனையாகியது.

அப்போது அரசாங்கம் பால்மா, அரிசி, சீனி ஆகிய அத்தியாவசிய தேவைப் பொருட்களை வறிய மக்களுக்கு கட்டுப்பாட்டுவிலையில் விற்பனைசெய்யச் சொல்லி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பி வைத்தது. அந்தப் பொருட்களோ வெளி சந்தையில் பல மடங்கு அதிகமாக விற்பனையாகிக் கொண்டிருந்தன.

அரசாங்கம் மக்களுக்கு விநியோகிப்பதற்காக அனுப்பிய பொருட்களை அந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது வாகனங்களில் ஏற்றி தனியார் கடைகளுக்கு விற்பனை செய்ததாக பின்னர் புகார் தெரிவிக்கப்பட்டு அது நீதிமன்றம் வரை சென்றிருந்தது.

அந்த சங்கத்தில் அப்போது முக்கிய பதவிகளில் இருந்தவர்கள்தான் இப்போதும் இருக்கிறார்கள்.

அதில் பணியாற்றிய பதினான்கு ஊழியர்கள் நீண்டகாலமாக நிரந்தரமாக்கப்படாமல் தொடர்ந்தும் தற்காலிக ஊழியர்களாகவே பணியாற்றி வந்தனர்.

அண்மையில் அவர்களில் ஐவரை தவிர்த்து 9 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருக்கின்றது.

அது என்ன பதினான்கு பேரில் ஒன்பது பேருக்கு மட்டும் நிரந்தர நியமனம் என்று விசாரித்தபோது தான் தெரியவந்தது. அவர்கள் ஐவரும் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது. அது என்ன பதினான்கு பேரில் அந்த குறிப்பிட்ட சமூகத்தினர் ஐந்து பேரையும் தவிர்த்து விட்டு நியமனம் வழங்கப்பட்டது என்பது தான் இன்று அந்த சங்கத்தில் பரபரப்பாக பேசப்படும் சங்கதி.

**- ஊர்க்குருவி.**

# அனைத்து தமிழர் தரப்புக்களும் இதயசுத்தியுடன் நடக்கவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்



கொழும்பு, ஒக. 13

தமிழ் மக்கள் இந்த நாட்டிலே கௌரவமாக வாழ்வதை உறுதிப்படுத்துவது மற்றும் அனைத்து வகையான உரிமைகளுக்கும் உரித்துடையவர்களாக்குவது போன்ற எதிர்பார்ப்புக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட விடுதலைப் போராட்டத்தை ஆரம்பித்தவர்களுள் ஒருவன் என்ற அடிப்படை யில், தற்போது உருவாகியுள்ள சூழலை முன்ன கர்த்துவதற்கு அனைத்து தமிழ் தரப்புக்களும் இதயசுத்தியுடன் செயற்படவேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தினை அமுல் படுத்துவது தொடர்பான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைய பாராளுமன்ற உரை மற்றும் அது தொடர்பாக பல்வேறு தமிழ் தரப்புக்களும் வெளியிட்டு வருகின்ற வியாக்கியானங்கள் தொடர்பாக நேற்று கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்ப்படுத்த வேண்டியதன் அவசியம் மற்றும் அதனை செழுமைப்படுத்துவதற்கான சில பரிந்துரைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டம் என்பது எமது அரசியலமைப்பில் ஏற்கனவே உள்ளடக்கப்பட்டிருக்கின்ற விடயம். தமிழ் தரப்புக்களின் தவறான அணுகுமுறை காரணமாகவே இதனை ஜனாதிபதி மீண்டும் பாராளுமன்றுக்கு கொண்டு வந்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தின் உருவாக்கம் மற்றும் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டமை போன்றவை சாதாரணமாக நிகழ்ந்தவை அல்ல.

தமிழ் மக்கள் மத்தியில் உருவாகிய ஆயுத ரீதியான விடுதலைப் போராட்ட அமைப்புக்கள் ஒவ்வொன்றிற்கும் பங்கு இருக்கின்றது.

ஆயுதப் போராட்ட அமைப்புக்களில் தம்மை இணைத்துக் கொண்ட ஒவ்வொருவரின் அர்ப்பணிப்புகளின் பயனாக உருவாகியதே இந்த 13 ஆவது திருத்தச் சட்டம். இதில் எமது மக்களுக்கு இருக்கின்ற தார்மீக உரிமையையும் புறந்தள்ளி விடமுடியாது.

ஆயுதப் போராட்டத்தை ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவனாக 13 ஆவது திருத்தச் சட்டத்தின் முக்கியத்துவத்தினையும் அதன் பெறுமதியையும் என்னால் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

அதேபோன்று, ஆயுதப் போராட்டத்தில் பங்கெடுத்து தம்மை அர்ப்பணித்தவர்களும், ஆயுதப் போராட்டத்திற்கான ஆத்மார்த்தமான ஆதரவை வழங்கியவர்களும் இதனை புரிந்து கொண்டிருப்பதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

இப்போது 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பான நம்பிக்கையீனங்களை வெளியிடுகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அரசியல் ஒட்டுண்ணிகளாகவே இருக்கின்றனர்.

அதாவது, 13 ஆவது திருத்தச் சட்டத்திற்காக எந்தவிதமான பங்களிப்பையும் வழங்காது, நெருக்கடியான கால கட்டங்களில் பாதுகாப்பான சுயவாழ்வியலை உறுதிப்படுத்தியவர்களாகவும், அவ்வாறானவர்களின் வாரிசுகளாகவுமே இருக்கின்றனர்.

இப்போது பாராளுமன்றத்தில் வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற வர்களை எடுத்துக் கொண்டால்கூட, என்னை தவிர நான்கு உறுப்பினர்கள் மாத்திரமே தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தவர்களாக இருக்கின்றனர்.

ஏனையவர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம், மற்றும் அந்தப் போராட்டம் இலங்கை - இந்திய உடன்படிக்கைக்கு பின்னர் தவறான திசையில் முன்னெடுக்கப் பட்டதால் ஏற்பட்ட அவலங்கள் ஆகியவற்றை வைத்து அரசியல் செய்யும் ஒட்டுண்ணிகளாகவே இருக்கின்றனர்.

இவ்வாறான அரசியல் ஒட்டுண்ணிகளே, தற்போது 13 ஆவது திருத்தச் சட்டத்தினை அமுலாக்குவது தொடர்பாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்புக்கள் தொடர்பாகவும், தமது சுயலாப அரசியலுக்காக நம்பிக்கையீனங்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஆனால், வரலாற்று தவறு ஒன்றினை இன்னொருமுறை செய்யாது, கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி தமிழ் மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதற்கு அனைவரும் இதயசுத்தியுடன் செயற்படவேண்டும் - என்றார்.

(அ)

# இத்தாலிக்கு அழைப்பதாகக் கூறி இளைஞனிடம் 25 இலட்சம் மோசடி

## யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக. 13

இளைஞனை இத்தாலிக்கு அழைப்பதாக கூறி 25 இலட்ச ரூபாய் மோசடி செய்யப்பட்டமை தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாரிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவரை, இத்தாலியில் வசிக்கும் நபர் தொடர்பு கொண்டு இளைஞனை இத்தாலிக்கு அழைப்பதாகவும், அதற்காக 25 இலட்ச ரூபாய் பணத்தை கையளிக்குமாறும் கூறியுள்ளார்.

இளைஞனும், அவரின் பேச்சை நம்பி , அவர் கூறிய நபரிடம் 25 இலட்ச ரூபாய் பணத்தைக் கையளித்த சில நாட்களில் இத்தாலி விசா என ஒன்றினை, இளைஞனிடம் பணத்தை பெற்றுக்கொண்ட நபர் கொடுத்துள்ளார்.

குறித்த விஸாவை இத்தாலித் தூதரகத்தில் இளைஞனை பரிசோதித்தபோது, அது போலி விஸா என அதிகாரிகள் கண்டறிந்து இளைஞனுக்கு கூறியுள்ளனர்.

அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்ட விடயத்தை இளைஞன் அறிந்து கொண்டு யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (அ)

# வறட்சியான காலநிலையால் பரவுகின்றது எலிக்காய்ச்சல்!

கொழும்பு, ஒக. 13

வறட்சியான காலநிலை காரணமாக எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த நீருடன் காணப்படும் ஏரிகளுக்கு மீன் பிடிப்பதற்கும், குளிப்பதற்கும் மக்கள் வருவதால் இவ்வாறு எலிக்காய்ச்சல் அதிகம் பரவும் ஆபத்து காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்

இதேவேளை, குருநாகல் கனேவத்த மகுல்வெள கிராமத்தைச் சேர்ந்த இருவர் எலிக்காய்ச்சலால் கடந்த 9ஆம் திகதி உயிரிழந்துள்ளனர். 38 மற்றும் 39 வயதுடைய குறித்த நபர்களே அப்பகுதியிலுள்ள கிரிந்தி வெல்மட குளத்தில் நீராடும் போது சுகவீனமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மகுல்வெள பிரதேசத்தைச் சேர்ந்த மேலும் 12 பேர் காய்ச்சலினால் குருநாகல் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# சீன போர்க்கப்பல் குறித்து இந்தியா அதிக அவதானம்



கொழும்பு, ஓக. 13

சீன மக்கள் குடியரசின் போர்க்கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்திற்கு வந்துள்ளமை தொடர்பில் இந்தியா அவதானம் செலுத்தியுள்ளது.

சீன இராணுவத்திற்கு சொந்தமான ஹாய் யங் 24 ஹோ எனும் போர்க்கப்பல் கடந்த 10 ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பல் நேற்று நாடு திரும்பிய நிலையில், கப்பலின் வருகை குறித்து இந்தியாவின் கவனம் திரும்பியுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பாதுகாப்பு நலன்களைப் பாதிக்கும் எந்தவொரு வளர்ச்சியையும் அரசாங்கம் கவனமாக கண்காணித்து வருவதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் அரிந்தம் பாக்சி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட அரிந்தம் பாக்சி, நாட்டின் பாதுகாப்பு நலன்களை பாதுகாக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு எடுத்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கைக்கு சீனக் கப்பலொன்று வருகை தந்துள்ளமை குறித்து ஊடகங்கள் வழியாக தாம் அறிந்ததாகவும் இந்திய வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதமும் சீன உளவுக் கப்பல் ஒன்று இலங்கைக்கு வருகை தந்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஈரானிய பிரஜைகள் மூவருக்கு அபராதம்!

கொழும்பு, ஓக. 13

சிங்கராஜ வனப்பகுதியில் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பாகங்களைச் சேகரித்த ஈரானிய பிரஜைகள் மூவருக்கு, உடுகம நீதவான் நீதிமன்றம் ஒரு கோடி முப்பத்திரண்டு இலட்சம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொருவருக்கும் தலா 44 இலட்சம் ரூபா அபராதம் விதித்து நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

ஈரானிய பிரஜைகள் மூவரும் அண்மையில் சிங்கராஜ வனப் பகுதியில் தாவர மற்றும் விலங்கு பாகங்களை சேகரித்துக் கொண்டிருந்தபோது, நெலுவ லங்காகம பிரதேசத்தில் வைத்து, வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# டிசெம்பருக்குள் ஒரு முட்டை 35 ரூபாய்க்கு வழங்கப்படும்

கொழும்பு, ஓக. 12

டிசெம்பர் மாதத்துக்குள் ஒரு முட்டையின் விலையை 35 ரூபாக்கு வழங்க முடியும் என அகில இலங்கை கோழிப் பண்ணை சம்மேளனம் தெரிவித்துள்ளது.

மக்காச்சோள இறக்குமதிக்கு அனுமதி வழங்கினால் இதனை துரிதப்படுத்த முடியும் என்றும் அச்சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

கட்டுப்பாட்டு விலை நீக்கம் காரணமாக தற்போது முட்டை விற்பனை வலையமைப்பு வலுவடைந்து வருவதாக அதன் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டார்.

மேலும், கோழி இறைச்சி ஒரு கிலோகிராம் 1,250 ரூபாயிற்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# நீர்கொழும்பில் துப்பாக்கிச்சூடு; இளைஞர் காயம்

கொழும்பு, ஓக. 13

கொழும்பு - துன்கல்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த அடையாளம் தெரியாத இரண்டு துப்பாக்கிதாரிகள், துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

சம்பவத்தில் 25 வயதான இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)



# வடக்கு ஆளுநர் சார்ள்ஸை சந்தித்த ஆஸி. எல்லைப் பாதுகாப்புப் படை!

யாழ்ப்பாணம், ஓக. 13

வடமாகாணத்தின் ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை அவுஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்புப் படையின் முதனிலை செயலாளர் பிராண்ட் இசண்ட மற்றும் அவர்களின் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இச்சந்திப்பு நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கை சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் எல்லைப் பாதுகாப்பு மற்றும் சட்ட விரோத பயணங்கள், கடல் எல்லைகளில் நடைபெறும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து பேசப்பட்டன.

அத்துடன் இலங்கை சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு அவுஸ்திரேலிய எல்லைப்பாதுகாப்பு படைப் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் புதிய தொழிநுட்பங்களை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் அவுஸ்திரேலியப் படையினர் தெரிவித்தனர்.

இதன்போது வடமாகாணத்திலிருந்து பலாலி விமான நிலையம் ஊடாக சென்னைக்கு நேரடியாக பிரயாணம் நடைபெறுவதாலும் இந்தியா-இலங்கை கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட இருப்பதனாலும் சுங்கத் திணைக்களத்தின் செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார். (அ)

## ஈஸ்டர் தாக்குதல் சம்பவம்

# 24 சந்தேக நபர்களுக்கு எதிராக 23,270 குற்றச்சாட்டுகள் தாக்கல்

கொழும்பு, ஓக. 13

நௌபர் மௌலவி உட்பட 24 பேருக்கு எதிராக ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத தாக்குதலுக்கு சதி மற்றும் உதவிய குற்றச்சாட்டின் கீழ் 23,270 குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கு தொடர்பான பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் மீதான விசாரணை கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே சட்டமா அதிபர் குற்றச்சாட்டுகளை தாக்கல் செய்தார்.

நௌபர் மவ்லவி, சஜித் மவ்லவி, மொஹமட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, மொஹமட் சனஸ்தீன் மற்றும் மொஹமட் ரிஸ்வான் உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகளில் கொலை சதி, உதவி செய்தல், ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளை சேகரித்தல் மற்றும் கொலை முயற்சி ஆகியவை அடங்கும்.

வழக்கின் அடுத்த கட்ட விசாரணை ஒக்ரோபர் 10ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட அதேநேரம் குற்றப் புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் பி. அம்பாவிலவுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

# மதுவரித் திணைக்களத்துக்கு 7 பில்லியன் ரூபா நிலுவையில்

கொழும்பு, ஓக. 13

மதுபானப் போத்தல்களில் ஒட்டப்படும் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களில் போலியானவற்றை வாடிக்கையாளர்களும், இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அதிகாரிகளும் இலகுவில் அடையாளம் காணும் வகையில் தற்பொழுதுள்ள கையடக்கத்தொலைபேசி செயலியை மேம்படுத்துமாறு பாராளுமன்ற வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, பாதுகாப்பு ஸ்ரிக்கர் தயாரிப்பு நிறுவனத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மதுவரித் திணைக்களத்துக்கு அண்மையில் கள விஜயத்தை மேற்கொண்டிருந்த இக்குழு, தற்பொழுது சந்தையில் உள்ள மதுபானப் போத்தல்களில் ஒட்டுப்பட்டுள்ள ஸ்ரிக்கர்கள் போலியானவையா அல்லது உண்மையானவையா என்பதைக் கண்டறிவதற்கு உரிய பொறிமுறை இல்லாமை குறித்து சுட்டிக் காட்டியிருந்தது.

இது குறித்து மேலும் விசாரிக்கும் நோக்கில் வழிவகைகள் பற்றிய குழு அதன் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியது.

இக்குழு முன்னிலையில் மதுவரித் திணைக்கள அதிகாரிகளும், பாதுகாப்பு ஸ்டிக்கர் தயாரிப்பு நிறுவனத்தின் பிரதிநிதியும் அழைக்கப்பட்டிருந்தனர்.

மதுபானப் போத்தல்களுக்கு பாதுகாப்பு ஸ்ரிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் நாட்டிலுள்ள அனைத்து மதுபானத் தயாரிப்பாளர்களாலும் இது பயன்படுத்தப்படாமை குறித்து குழு அதிருப்தியை வெளியிட்டிருந்தது. குறித்த ஸ்ரிக்கர்களைப் பயன்படுத்தாத நான்கு நிறுவனங்கள் இருப்பதாக திணைக்களத்தின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்தப் பாதுகாப்பு ஸ்ரிக்கர்களை அடையாளம் காண்பதற்கான 200 விசேட உபகரணங்கள் கடந்த மார்ச் மாதம் மதுவரித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளபோதும் அவை இதுவரை பயன்படுத்தப்படாமை குறித்தும் இங்கு தெரியவந்தது. இந்த உபகரணங்களைப் பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு ஏற்ற வகையில் தொழில்நுட்ப ரீதியில் மேம்படுத்தி 30/08/2023 திகதியாகும்போது பூரணப்படுத்துமாறும் குறித்த நிறுவனத்துக்கு குழுவின் தலைவர் பணிப்புரை வழங்கினார்.

அத்துடன், போலியான ஸ்ரிக்கர்கள் ஒட்டப்பட்ட மதுபானப் போத்தல்களை மீட்பதற்கு மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்புக்களின் விவரங்கள், கையகப்படுத்தப்பட்ட மதுபான உற்பத்தி மற்றும் விநியோகம் செய்த நபர்கள் தொடர்பில் 2023 செப்ரெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் நடவடிக்கை எடுக்குமாறும் குழுவின் தலைவரினால் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதேநேரம், பாதுகாப்பு ஸ்ரிக்கர் தொடர்பில் காணப்படும் சட்ட ஒழுங்கு விதிகள் குறித்து கேள்வியெழுப்பிய குழு, ஒரு சில நிறுவனங்கள் மாத்திரம் இந்த ஸ்ரிக்கரைப் பயன்படுத்தாதிருப்பதற்கு சட்டத்தில் காணப்படும் ஏற்பாடுகளைத் திருத்தி சகல நிறுவனங்களாலும் உற்பத்தி செய்யப்படும் மதுபானப் போத்தல்களிலும் ஸ்டிக்கர்களை ஒட்டப்படுவது கட்டாயப்படுத்தப்படவேண்டும் என்றும் தலைவர், திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், இலங்கை மதுவரித் திணைக்களத்தினால் இவ்வருடத்தில் மற்றும் கடந்த வருடங்களில் வசூலிக்கப்படவேண்டியுள்ள நிலுவைத் தொகையான 7 பில்லியன் ரூபாவை மீளப்பெறுவதற்கான திட்டத்தை எதிர்வரும் ஒக்ரோபர் 30ஆம் திகதிக்கு முன்னர் குழுவிடம் சமர்ப்பிக்குமாறும் வழிவகைகள் பற்றிய குழுவின் தலைவர் அறிவித்தார். அதேநேரம், நுவரெலியா பிரதேசத்தில் மதுவரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. (அ)

# மலையக மக்கள் உரிமையை வெல்லும்வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம்!

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 13

**"எங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிராக தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம்."**

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவ்வமைப்பால் விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எங்கள் மலையக தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றினை நினைவு கூரும் வகையில் இந்த வருடம் முழுவதும் பல்வேறு தரப்பினரால் பல நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு வருகிறன. 200 வருட நிகழ்வுகள் வெறுமனே நிகழ்வுகளாக முடிந்துவிடாமல் மலையக தமிழ் மக்களுக்கான ஒரு நிரந்தர தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டியதன் அவசியத்தினை அனைத்துத் தரப்பினரிடமும் வலியுறுத்துகிறோம்.

1980களின் பின் அவர்களுக்கான குடியுரிமை படிப்படியாக வழங்கப்பட்டதன் பின்னரே இச்சமூகத்தில் சில மாற்றங்கள் உருவாகின. தோட்டத்தொழிலாளர்களின் பிள்ளைகள் எத்தனையோ வறுமை, சமூக நெருக்கடி, துன்பங்களின் மத்தியிலும் கல்வியில் முன்னிலை வகிக்கின்றனர். அதற்கு சான்றாக எமது பல்கலைக்கழகத்தில் மலையக தமிழ் மாணவர்கள் அனைத்துத் துறைகளிலும் மிளிர்ந்து வருகின்றார்கள். படிப்படியாக அவர்கள் தமது சுய முயற்சியிலேயே முன்னேறி வந்துள்ளார்கள்.

ஆனால் தேசிய ரீதியான வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது இன்றுவரை அவர்களின் பிரச்னைகள் தீர்க்கப்படவில்லை. கடந்த 200 வருடத்தில் அடைந்தவை சில, அடைய வேண்டியவை பல என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

இருப்பினும் 200 வருட வரலாற்றை நினைவு கூரும் இந்த வருடத்தில் எம் மலையகத் தமிழ் மக்களின் பிரச்னைகள் சர்வதேசத்திலும் அரசியல் மற்றும் சிவில் சமூக மட்டத்திலும் பேசுபொருளாக உள்ளது. அந்த முன்னேற்றத்தை மலையக தமிழ் மக்களின் நிரந்தர தீர்வுக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழ் மக்களின் இனப்பிரச்னை பற்றிப் பேசும்போது எங்கள் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அடையாள மற்றும் சுயநிர்ணயம் பற்றியும் கூடுதல் கவனம் செலுத்தி அழுத்தம் கொடுக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

எங்கள் மலையகத் தமிழ் மக்கள் மீது அரசால் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள கட்டமைக்கப்பட்ட ஒடுக்கு முறைக்கு எதிராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாங்கள் என்றும் தொடர்ந்து போராடுவோம். எங்கள் தமிழ் மக்களின் உரிமையை வென்றெடுக்கும் வரை நாம் தோளோடு தோள் நின்று களமாடுவோம்." - என்றுள்ளது. (அ)

# 22 வயது யுவதி துஷ்பிரயோகம்; 17 வயதுடைய மாணவன் கைது

கொழும்பு, ஓக. 13

மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த பாடசாலை மாணவர் ஒருவர் ஜா-எல பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜா-எல நிவந்தம பிரதேசத்தில் வசிக்கும் 22 வயதுடைய யுவதியே துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மாணவர் அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதுடையவர் எனவும் இருவருக்கும் இடையில் காதல் தொடர்பு இருந்தமையும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவர் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# வறட்சியால் பாதித்தோர் ஒரு இலட்சமாக உயர்வு!

கொழும்பு, ஓக. 13

நாட்டில் நிலவும் வறட்சியால் ஒன்பது மாவட்டங்களில் சுமார் 100,000 பேர் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, இரத்தினபுரி, பதுளை, குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய பகுதிகளில் 30,862 குடும்பங்களைச் சேர்ந்த 99,594 பேர் வறட்சியால் குடிதண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் 69 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நபர்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சங்கானை பிரதேசம் ஜூன் மாதத்துக்குப் பிறகு மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஒக்ரோபர் வரை போதிய மழை பெய்யாது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை இந்த ஆண்டு இலங்கையில் போதிய மழையைப் பெறவில்லை, எல் நினோ விளைவு காரணமாக இருக்கலாம் என வானிலை ஆய்வு மையம் குறிப்பிட்டுள்ளது.

ஆண்டுதோறும் ஒக்ரோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் அதிக மழைப் பொழிவு பதிவாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

# விவசாயத்துறையில் விரைவில் புரட்சிகரமான மாற்றம் அவசியம்

## ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, ஓக. 13

விவசாய நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மூலம் நாட்டின் விவசாயத்துறையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தும் பணிகளை துரிதப்படுத்த வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

விவசாயம் தொடர்பான பிரச்னைகளை தீர்ப்பதற்கான செயலணியொன்றை உருவாக்கவுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, பெருந்தோட்ட, நீர்ப்பாசன, மாகாவலி அபிவிருத்தி அமைச்சுகளை இணைத்து, தனியார் துறையின் பங்கெடுப்புடன் செயலணியை நிறுவ எதிர்பார்த்துள்ளதாகவும் கூறியுள்ளார்.



"விவசாயத்துறை நவீனமயப்படுத்தல்" தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இந்த விடயங்களை தெரிவித்துள்ளார்.

விவசாய நவீன மயப்படுத்தலுக்கான செயலகமொன்றை ஸ்தாபிப்பதற்கான வரைவு மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிக்கையொன்றை இரு வாரங்களுக்குள் பெற்றுத்தருமாறு அதிகாரிகளுக்கு வலியுறுத்திய ஜனாதிபதி, தேவை ஏற்படுமாயின் அச்செயற்பாடுகளுக்காக பாராளுமன்ற குழுவொன்றை நியமிக்க முடியும் என்றும் குறிப்பிட்டார். (அ)

# இலங்கை - இந்தியா இடையே பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு திட்டம்!

கொழும்பு, ஓக. 13

இலங்கைக்கான இந்திய புதிய பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி சத்யாஞ்சல் பாண்டே , இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்னவை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பு ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டேயில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்றது.

பாதுகாப்பு அமைச்சிக்கு வருகை தந்த புதிய பிரதித் தூதுவரை பாதுகாப்புச் செயலாளர் வரவேற்றதுடன், பின்னர் இருதரப்பு பாதுகாப்பு விடயங்கள் குறித்து சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவதற்கு தனது முழு ஆதரவையும் வழங்குவதாக கலாநிதி பாண்டே இந்த சந்திப்பின் போது உறுதியளித்தார்.

அத்துடன் புதிதாக நியமனம் பெற்றுள்ள இந்திய பிரதி தூதுவரின் எதிர்கால நடவடிக்கைகள் சிறப்பாக அமைய பாதுகாப்புச் செயலாளர் தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் அவரது எதிர்கால முயற்சிகளுக்கு தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தார்.




இந்த சந்திப்பில் கொழும்பிலுள்ள இந்திய தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் கெப்டன் விகாஸ் சூட், உதவி பாதுகாப்பு ஆலோசகர் லெப்டினன்ட் கேர்ணல் புனீத் சுஷில் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் இராணுவ இணைப்பு அதிகாரி பிரிகேடியர் தம்மிக்க வெலகெதர ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை விரைவில் நிறுவுவதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 13

விளையாட்டுத் துறையில் தேர்ச்சியுடன் பட்டப்படிப்பை நிறைவு செய்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும் உத்தேச விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை துரிதமாக ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர் ரோஹன திஸாநாயக்க தெரிவித்தார்.

தியகமவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு வளாகத்தை அபிவிருத்தி செய்து, விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், பாடசாலை மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் திறமையான விளையாட்டு வீர, வீராங்கனைகளை அடையாளங் கண்டு, அவர்களின் திறமைகளை மேம்படுத்தத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இளைஞர்கள் தொடர்பில் பாரிய எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் வைத்திருப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். அதன்படி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் செயற்பாடுகளை பிரதேச ரீதியில் செயற்படுத்த ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் ஒரு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் இளைஞர், யுவதிகளின் பிரச்னைகள் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவுமஅவர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும், தேசிய இளைஞர் படையணி ஊடாகவும் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், முக்கியமாக இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதுடன் அவர்களுக்கு திறன்விருத்தி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள், சர்வதேச மொழிகளைக் கற்றுக்கொடுத்தல் மற்றும் சர்வதேச அளவில் சிறந்த வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்படுவதாகத் தெரிவித்தார்.

தேசிய ரீதியில் மத்திய அரசுக்கும் மாகாண விளையாட்டுத் துறைக்கும் இடையில் நிலவக்கூடிய முரண்பாடுகள் மற்றும் நிர்வாக சிக்கல்களைத் தீர்க்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் மத்திய, மாகாண என்ற வேறுபாடுகள் இன்றி எல்லோரும் ஒன்றிணைந்து இந்நாட்டு விளையாட்டுத் துறையின் மேப்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
13.08.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆடி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# கடும்போக்குவாதிகளின் இராவண அரசியல்?

தேசியவாதத்தின் எதிர்காலம் எப்போதும் கடந்த காலத்திலேயே நிலை கொண்டிருக்கும். கடந்தகாலம் இல்லையென்றால் தேசியவாதம் செத்துவிடும். இந்த பின்புலத்தில் தேசியவாதத்தை தங்களின் அரசியல் மூலதனமாகக் கொண்டிருப்பவர்களுக்கு கடந்தகாலம் தொடர்பான கற்பனைகள் தேவைப்படும். சிங்கள தேசியவாதிகளின் இராவண கதையும் அப்படியான ஒன்றுதான். ஆனால் இதிலுள்ள வேடிக்கையான விடயமென்னவென்றால், இராவணன் ஒரு சிவபக்தன் என்றவாறான கதைகளை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒரு சிவபக்தன் எவ்வாறு, சிங்கள தேசியவாதத்திற்கு சேவை செய்யமுடியும்? ஆனால் முடியு மென்கின்றனர் சிங்கள - பௌத்த தேசியவாதிகள். இராவண பலய என்னும் பெயரில் ஒரு சிங்கள பௌத்த அமைப்பும் உண்டு.

இராவண கதை உண்மையா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால், இலங்கையில் இராவண கதையானது, முரண்பாடான ஒன்றாகவே, இரண்டு சமூகங்களின் மத்தியிலும் காணப்படுகின்றது. வட இந்தியாவை பொறுத்தவரையில் இராவணன் ஒரு மோசமான நபர். இராமரின் மனைவியை கவர்ந்து சென்ற காமுகன். ஆனால் இலங்கையின் சிங்கள தேசியவாதிகளுக்கோ, இராவணன் ஒரு கதாநாயகன். இராவணன் பற்றிய முரண்பாடான கதைகள் இருந்தாலும், சிங்கள தேசியவாதிகள், இராவணனை வைத்து, தங்களுக்கான தேசியவாத அரசியலை கட்டமைக்க முற்படுகின்றனர்.

படித்தவர்கள் என்று கருதப்படுபவர்களிடமும் இவ்வாறான பார்வையுண்டு. கலாநிதி தயான் ஜயதிலக போன்றவர்களே, இது, இராவண தேசம் ஆனால் விபீசண பிரதமர் இருப்பதாக ஒரு முறை, ரணில் விக்கிரமசிங்கவை விமர்சித்திருந்தார். ஆனால் இராவணன் இலங்கையர் அல்லர் என்கிறார், சுப்பிரமணிய சுவாமி - இவ்வாறான முரண்பாடான கதைகளை கடந்தும், இராவணனை தேசியவாதிகள் கொண்டாடுகின்றனர். மறுபுறம், இராவணனை ஒரு தமிழராக நோக்கும் போக்கு, தமிழர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

புராணக் கதைகள் காலங்களை கடந்து எவ்வாறு அரசியலுக்கு பயன்படுகின்றது - என்பதற்கு இராமாயண கதை ஒரு சிறந்த உதாரணம். தேசியவாதத்தை புதிய சூழலுக்குள் தக்கவைக்க முடியாமல் போகின்றபோதே, புராண கதைகளை, தேசியவாதம் உள்வாங்கிக் கொள்கின்றது. இது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளுக்கு மட்டும் உரியதல்ல, தென் கிழக்காசிய நாடுகளுக்கும் இந்த புராண கதை வரலாறுகள், பெரியளவில் அரசியலில் பயன்படுத்தப்படுகின்றது.

சீன தேசியவாதத்தில், அதன் கடந்த காலக் கதைகள் பிரிக்க முடியாதவை. சீனாவின் பெருந்தலைவராக கருதப்படும் மாவோவின் தலைமையில் இடம்பெற்ற கலாசார புரட்சியின் போது, சீனாவின் பாரம்பரிய சிந்தனை முறைகள், சிந்தனையாளர்கள் முற்றிலுமாக நிராகரிக்கப்பட்டனர். நூல்கள் எரிக்கப்பட்டன. ஆனால் இன்றைய சீனத் தேசியவாதமோ, அன்று நிராகரிக்கப்பட்ட பழைய சிந்தனையாளர்களை தூக்கிப் பிடிக்கின்றது. கன்பூசியஸ் நிலையங்கள் என்னும் பெயரில் அதன் ராஜதந்திர நகர்வுகளை முன்னெடுக்கின்றது. ஏனெனில் தேசியவாதத்தை தூக்கி நிறுத்துவதற்கு எப்போதுமே கடந்தகாலத்திடமே சரணடைய நேரிடுகின்றது.

கோட்டாபயவின் வீழ்ச்சியால் நிலைகுலைந்து போன சிங்கள பௌத்த தேசியவாத தரப்புக்கள், இப்போது இராவணனை தூக்கிப்பிடிக்க முற்படுகின்றனர். 13வது திருத்தச்சட்டத்தை ஒரு புறம் கடுமையாக எதிர்த்து களமிறங்கும் சிங்கள தேசியவாதிகள் மறுபுறம் இந்தியாவின் புராணிய நம்பிக்கையில் வில்லனாக நோக்கப்படும் இராவணனை பயன்படுத்தி, சிங்கள தேசியவாதத்திற்கு புதிய இரத்தம் பாய்ச்ச முற்படுகின்றனர். ஆனால் இவ்வாறான விடயங்களில் தேவையில்லாமல், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விளக்கமளிக்க வேண்டியதில்லை.

# கிழக்கு மாகாண ஆளுநருக்கு எதிராக திருமலையில் பிக்குகள் போராட்டம்!

*திருமலை, ஓக. 13*

திருகோணமலை - நிலாவெளி, பெரியகுளம் கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் விகாரையின் நிர்மாணப் பணி இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து , பௌத்த பிக்குகள் சிலர் நேற்று முன்தினம் இலுப்பைக்குளம் பகுதியில் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“சிங்கள, தமிழ், முஸ்லிம் சகோதரத்துவத்தை குழப்புகின்ற ஆளுநரை அனுப்புவோம், புத்தசாசன அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்ட விகாரையின் நிர்மாணப் பணியை நிறுத்த சம்பந்தன் யார்? போன்ற பதாதைகளை ஏந்தியவாறு பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



நிலாவெளி பெரியகுளம் பகுதியில் 500 இற்கு மேற்பட்ட தமிழ் குடும்பங்களும், இரு சிங்களக் குடும்பங்களும் வசித்து வருகின்றன. இந் நிலையில் விகாரை நிர்மாணிப்புப் பணிகளை நிறுத்துமாறு அங்கு வாழும் தமிழ் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

விகாரை நிர்மாணப்பணி தொடருமாக இருந்தால் இப்பிரதேசத்தில் இன முறுகல் ஏற்படக்கூடும் என்பதால் கிழக்கு மாகாணத்தில் அனைத்து இன மக்களின் நலன்களை பேணும் ஆளுநர் என்ற அடிப்படையில் இனங்களுக்கிடையில் இனமுறுகல் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் முகமாக விகாரையின் நிர்மாணப் பணிகளை உடனடியாக நிறுத்துமாறு ஆளுநர் பணிப்புரை விடுத்துள்ளார் என ஆளுநரின் ஊடகப் பிரிவு விடுத்திருந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ)

# ஓய்வு பெற்ற ஆசிரியர்களை சேவையில் இணைக்க திட்டம்

## கல்வி அமைச்சர் சுசில்

*கொழும்பு, ஓக. 13*

ஆசிரியர் துறையிலிருந்து ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மாகாண பாடசாலைகளுக்கு மீளவும் இணைத்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்குமென கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வருடத்துக்கு ஒதுக்கப்பட்ட பணம் மாகாண சபைகளில் உள்ளதால் அந்த குழுவை இணைத்துக் கொள்ள முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி குமாரி விஜேரத்ன எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தவுடன் மாகாண சபைகளுக்கு அறிவிக்கப்படும் எனவும், இந்த ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டால் ஆசிரியர் பற்றாக்குறை ஓரளவு தவிர்க்கப்படும். எவ்வாறாயினும், இவர்கள் அனைவரும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னரும் 26 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படும் - என்றார். (ஐ)

# 73 நீர்த் தேக்கங்களில் நீர்மட்டம் குறைந்தது!

*கொழும்பு, ஓக. 13*

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 73 நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளதுடன், 9 இலட்சம் ஏக்கர் அங்குல நீர் கொள்ளளவு மாத்திரமே பயன்பாட்டுக்கு உள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர் கொள்ளளவில் 30.3 சதவீதம் மட்டுமே உள்ளதாகவும், பயன்படுத்த முடியும் என்றும் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 73 நீர்த்தேக்கங்களில், 10 சதவீதத்திற்கும் குறைவான நீர் கொள்ளளவு கொண்ட ஒன்பது நீர்த்தேக்கங்களும், 30 சதவீதத்துக்கும் குறைவான நீர் கொள்ளளவு கொண்ட 32 நீர்த்தேக்கங்களும் உள்ளன. மொத்த நீர்த் தேக்கங்களின் நீர் கொள்ளளவு 50 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது.

நீர்த்தேக்கங்களின் நீர்மட்டத்தைப் பின்பற்றுவதன் மூலம் நீண்ட கால ஆய்வுகளைக் கருத்திற் கொண்டு, தற்போதைய நீர்மட்டம் இரண்டு அல்லது மூன்று சதவிகிதம் தண்ணீரின் குறைவைக் காட்டுகிறது. அப்பகுதியில் நிலவும் வெப்பமான காலநிலை மிகவும் அதிகமாக உள்ளது, அதன் காரணமாக, நீர்த்தேக்கங்களில் நீர் ஆவியாதல் மிக அதிகமாக உள்ளது, அதை எங்களால் கட்டுப்படுத்த முடியாது,” என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் கணிப்பின்படி, ஒக்ரோபர் மாதத்துக்குள் மழையால் நீர்த்தேக்கங்கள் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -90

# பிடி அரிசித்தானம்

**கணபதி சர்வானந்தா**

தாரமும், குருவும் தலை விதிப்படி” என்பது ஒரு நல்ல பழமொழி. இருந்தும் தானமும் அவரவர் தலைவிதிப்படி என்றும் நான் நம்புகிறேன். பலரிடம் பொருள் இருக்கு, அதனைக் கொடுக்க மனமில்லை. சிலரிடம் மனம் இருக்கு, ஆனால் கொடுப்பதற்கு அவர்களிடம் எதுவும் இல்லை என்ற நிலையில் அவர்கள் ஏதோ ஒரு வழியில் ஒன்றைக் கொடுத்து தவுகிறார்கள். இது நடைமுறையில் நான் கண்ட உண்மை. அதனைப் பற்றியே இன்று நான் உங்களுடன் பகிரவிரும்புகிறேன்.

தானதருமம் செய்ய விருப்பந்தான் ஆனால் நாம் உழைப்பது நமக்கே போதாது என்ற நிலை. இதிலே தானதருமத்தைப் பற்றி எப்படி எண்ணுவது? என ஒருவர் என்னிடம் வினா எழுப்பினார். அவருக்கு நான் மேல் குறிப்பிட்ட, அந்தப் பகிரவிரும்பும் கதையைத்தான் உதாரணமாகச் சொன்னேன்.

எங்களுடைய கிராமம் சிறியது. பெரும்பாலும் விவசாய பூமியாகவே அது காணப்பட்டது.இடைநடுவே சில கோயில்கள். அந்தக் கோயில்களை மையப்படுத்தியே அனைத்து நடவடிக்கைகளும் நடைபெற்ற காலம் அது. கலை,கலாசாரம், பண்பாடு என்று எல்லாம் கோயில்களுக்கூடாக வளர்த்தெடுக்கப்பட்டன.

எங்கள் ஊரில் அப்போது ஆறுமுகம் என்று ஒரு மூத்தவர் ஒருவர் இருந்தார். கோயிலுக்கூடாகத் தொண்டாற்றிவர். அவரைப் பிடி அரிசி ஆறுமுகம் என்று சொல்லுவார்கள். அவரை ஆறுமுகம் அண்ணர் என்று எல்லோரும் அன்புடன் அழைப்பதைக் கேட்டிருக்கிறேன். தனது உழைப்புக்காக அவர் செலவிட்ட நேரம்போக கோயிலுக்குத் தொண்டாற்றுவது அவர் வழக்கம். அவர்வசம் பனையோலையால் சமைத்தெடுக்கப்பட்ட அடுக்குப் பெட்டியொன்று இருந்தது.அதுவே அவர் அடையாளம்.

அப்போது சங்கக் கடை என்று அழைக்கப்பட்ட பல நோக்குச் சங்கக் கடைகள் இருந்தன.அதனூடாகவே மக்களுக்கு அரசு இலவச அரிசி விநியோகத்தைச் செய்து வந்தது.

அத்தகைய கடைகள் இப்பொழுதும் அங்கொன்றும் இங்கொன்றுமாய் இயங்குவதைக் காணலாம். வாரம் ஒரு முறை கூப்பனுக்கு (குடும்ப அட்டைகள்) அரிசி வழங்கப்படுவது நடைமுறையாக இருந்த காலம். வாரத்தில் வரும் செய்வாய் அல்லது புதன் கிழமைகளில் ஆறுமுக அண்ணர் தனது அடுக்குப்பெட்டி சகிதம் ஊருக்குள் இறங்கிவிடுவார். பெரும்பாலும் மதிய உணவுச் சமையலுக்கு ஆயத்தப் படுத்துகின்ற நேரங்களில் அவர் வருவார்.

மதிய உணவுக்காக எடுத்த அரிசியில் ஒரு கைப்பிடி அளவு அரிசியை எடுத்து வைத்தபடி குடும்பத் தலைவிகள் அவர் வரவுக்காகக் காத்திருப்பர். அவர் வந்ததும் அந்த அரிசியை அவரிடம் கொடுப்பர். அந்த அரிசி என்ன ரகம் எனப் பார்த்து அந்த அடுக்குப்பெட்டியில் அவர் சேர்த்துக் கொள்ளுவார். அவற்றை எல்லாம் சேர்த்துக் கொண்டு ஆலயத்துக்கு விரையும் ஆறுமுக அண்ணர் அதனை கோயில் குருக்களிடம் சேர்ப்பார். குருக்கள் அதில் ஒரு பகுதியை நைவேத்தியத்துக்காக எடுத்துக் கொண்டு மிகுதியை விற்றுக் கோயில் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவார்.

இது ஒரு சிறிய செயற்பாடாகத் தென்பட்டாலும் கோயிலையும் மக்களையும் இணைத்துச் செயற்பட்ட ஒரு பெரிய சமூகப் பண்பாடாகவே இதனைப் பார்த்தேன். தமது அன்றாட உணவில் ஒரு பகுதியை ஒறுத்துச் சேமித்து வழங்குவதன் மூலம் மக்கள் தரும நடவடிக்கைகளில் பங்குகொண்டனர். கோயில்களுக்கூடாக அன்னதானம் வழங்கப்பட்டது.

இதனைத்தான் தான தருமங்களுக்காக விசேடமாக நாம் பொருளைச் சேர்க்க வேண்டியதில்லை. உழைக்க வேண்டியதில்லை என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன். கிடைப்பதில் ஒரு பகுதியை எடுத்துவைத்து அவற்றுக்காகச் செலவிடுவதன் மூலம் பெரிய பணிகளைச் செய்யலாம் என்று மேற்படி பிடிஅரிசித் தத்துவம் சொல்லுகிறது.

எமது கிராமத்தில் நடைபெற்ற ஒரு சமூகக் கலந்துரையாடலின்போது ஆறுமுகம் அண்ணரும் அவர் பிடி அரிசித் தத்துவமும் பேசப்பட்டது. அன்று தொட்டுப் பலர் அவ்வாறான நடவடிக்கைகளில் தாம் ஈடுபடத் தொடங்கிவிட்டனர் என்று பின்னர் சொல்லி மகிழ்ந்தனர்.

அதில் ஒருவர், தினமும் தான் காலைக் கடனை முடித்துவிட்டுச் செய்கின்ற கடவுள் வழிபாட்டின்போது ஐம்பது ரூபாவினை ஒரு உண்டியலில் பொதுக் காரியத்துக்காகச் சேர்ப்பதாகச் சொன்னார்.அதனை வருட முடிவில் சிறுவர் இல்லங்களுக்குக் கொடுத்துதவப் போவதாகவும் குறிப்பிட்டார். இன்னுமொரு வியாபாரி தினமும் ஐநூறு ரூபாயெடுத்து வைப்பதாகச் சொன்னார்.

இதனைப் பற்றிச் சொல்லும்போதுதான் எனக்கு ஒருவர் ஞாபகத்துக்கு வருகிறார். அவர் ஒரு அரச உத்தியோகத்தர். மாத முடிவில் கொப்பி பென்சிலுடன் அமர்ந்து கொள்வார். கடந்த மாதத்தில் நடைபெற்ற சம்பவங்களை ஒரு முறை நினைவு கூர்ந்து கொள்வார். ஒன்றும் நடைபெற்றிராது. இருந்தும் நோய் வந்தது மருந்து எடுத்தேன் எனக் கற்பனை செய்து கொண்டு ஒரு தொகையைக் குறித்துக் கொள்வார். வழிப்போக்கின் போது தொலைத்துவிட்டதாகக் கற்பனை செய்து ஒரு தொகையைக் குறித்துக் கொள்வார். கடந்த மாதத்தில் அவ்வாறு ஒன்றும் நடந்திராது இப்படிப் பலவற்றைக் கற்பனை செய்தவாறு சிறு சிறு தொகையைச் சேர்த்து கொண்டு அதனை சிறுவர்கள் கல்விக்காகப் பயன்படுத்துவது அவர் வழக்கம். நீண்டகாலமாக இவ்வாறு செய்துகொண்டு வருகின்ற அவருக்கு ஒரு நோயும் இல்லை, ஒரு நொடியும் இல்லை.இன்றும் ஆரோக்கியமாக அவர் வாழ்ந்து வருகிறார்.

எனது பாடசாலைத் தோழர்களில் பலர் புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். அவர்களில் சிலர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்கள் பலருக்கு உதவுகின்றனர். முன்பள்ளி தொட்டுப் பல்கலைக் கழகம்வரை அவர்கள் சேவை தொடர்கிறது. அவற்றுள் சில எனக்கூடாகவும் நடைபெறுகின்றன.

தான தருமத்துக்குப் பொருளிலும் விட முதலில் வேண்டுவது மனமே.அது மட்டுமல்லாது இருப்பதில் பகிர்ந்து உண்ணுவதையே உயர்ந்ததானமாகக் கருதுகின்றனர்.தனது விருப்பங்களை ஒறுத்து அதனைப் பிறருக்குக் கொடுத்துதவுவதே சிறந்த தானம் என்பது எனது அனுபவம். •

# இந்தவார ராசிபலன் 13.08.2023 - 19.08.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆடி 28
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திரயோதசி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

உத்தியோகத்தில் சிலருக்கு எதிர்பார்த்தபடியே இடமாற்றமும், பதவி உயர்வும் கிடைக்கலாம். அலுவலகம் பற்றி புதிய நபர்களிடம் பேசும்போது கவனம் தேவை. சொந்தத் தொழில் செய்பவர்கள், புதிய வாடிக்கையாளர்களின் மூலம் பணிகளைப் பெறுவீர்கள். ஏற்கனவே செய்து கொடுத்த வேலையில் ஏற்பட்ட குறைபாட்டினை சரிசெய்து கொடுக்க நேரிடும். கூட்டுத்தொழில் சுமாராக நடைபெற்றாலும், வழக்கமான லாபம் குறையாது.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

முக்கியமான நபர்களைச் சந்திக்க இயலாமல் போகக்கூடும். சில காரியங்களில் தளர்வுகளைச் சந்திக்க நேரிடும். வரவேண்டிய தனவரவுகள் சரியான நேரத்துக்கு கிடைத்தாலும், செலவுகளால் பற்றாக்குறை ஏற்படக்கூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உயரதிகாரிகளிடம் சுமுகமாக நடந்துகொள்ளாவிட்டால் பிரச்சினைகள் உருவாகும். சொந்தத் தொழிலில் புதிய நபர்களின் வருகையும், அவர்களால் பண வரவுகளும் வந்துசேரும். கொடுத்த வாக்கைக் காப்பற்ற முடியாமல் திணறுவீர்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

முயற்சியோடு செய்யும் செயல்களில் வெற்றி அடைவீர்கள். மிக முக்கியமான காரியங்களில் அதிகக் கவனத்துடன் செயல்பட வேண்டியது அவசியம். உத்தியோகத்தில் சிலருக்கு, அலுவலகத்தில் கிடைக்க வேண்டிய கடன் தொகைகள் கைக்கு வந்துசேரும். அதனைக் கொண்டு நிறுத்தியிருந்த பணிகளை தொடர்வீர்கள். சொந்தத் தொழிலில் வேலைப்பளு அதிகமாக இருக்கும். புதிய வாடிக்கையாளர்களின் அறிமுகமும், அவர்களால் தொழில் முன்னேற்றமும் ஏற்படும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

எதிலும் கவனம் தேவை. உங்கள் செயல்களில் முன்னேற்றமான பலன்களைப் பெறும் வாரம் இது. நண்பர்களும், உறவினர்களும் உங்கள் முயற்சிக்கு உறுதுணையாக இருப்பார்கள். எதிர்பார்க்கும் தன வரவுகள் வந்துசேரும். முக்கிய ஆன்மிக நிகழ்ச்சிக்குப் பண உதவி செய்யும் சந்தர்ப்பம் ஏற்படும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்பில் உள்ள பொருட்களைப் பாதுகாப்பாக வைத்துக்கொள்வது அவசியம்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

செயல்களில் சிறு சிறு தடைகள் ஏற்படும். என்றாலும் முடிவில் சில செயல்களில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். பணப் பரிவர்த்தனைகளை கவனத்துடன் செய்யுங்கள். நீண்ட காலமாக பிரிந்த நண்பரை சந்திக்கும் வாய்ப்பு உண்டாகும். உத்தியோகத்தில் பதவி உயர்வு சம்பந்தமாகச் செய்த முயற்சிகள் பயனளிக்கக் கூடும். சக ஊழியர்களுடன், வீண் பேச்சுகளைத் தவிர்ப்பது அவசியம்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

காரியங்களில் தடை ஏற்படக்கூடும். அதிக முயற்சிகளை மேற்கொண்டாலும் ஒரு சில காரியங்களில்தான் வெற்றி கிடைக்கும். நண்பர்களின் உதவிகளைப் பெற முற்படுவீர்கள். பிரியமானவர்களுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு அகலும். உத்தியோகத்தில் வழக்கத்திற்கு மாறாக, வேலைப் பளுவால் அவதிப்படுவீர்கள். பணியாளர்களுடன் சுமுக மாக நடந்து கொள்வது நல்லது. சொந்தத்தொழிலில் அதிக வேலை இருந்தாலும், வருமானம் போதுமானதாக இருக்காது. மூலப் பொருட்கள் பற்றாக்குறையால் தொழிலில் முன்னேற்றம் தடைபடும்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

பயணங்களை தவிர்க்கவும். தீவிர முயற்சியுடன் செயல்பட்டு வெற்றி அடைவீர்கள். திட்டமிட்ட பண வரவுகளும் தாமதித்தே வந்து சேரலாம். விடுமுறையில் உள்ள ஊழியர்களின் வேலையையும் சேர்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும். சொந்தத்தொழில் செய்பவர்கள், நவீனக் கருவிகளின் உதவியுடன் வேலையை விரைவில் செய்து முடிக்கலாம். கூட்டுத் தொழிலில் வியாபாரம் வழக்கம் போல நடைபெறும். வாடிக்கையாளர்களிடம் உள்ள பணத்தை வசூலிக்கத் தகுந்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நண்பர்கள் உதவியுடன் வெற்றிகளைக் குவிக்கும் வாரம் இது. எதிர்பார்க்கும் தன வரவுகள் திட்டமிட்டபடி வந்து சேர்ந்தாலும், செலவுகள் அதிகரிக்கும். தொல்லை கொடுத்து வந்த சிலர், மனம் மாறி தோள் கொடுக்க முன்வருவர். தேவையற்ற அலைச்சல்களை குறைத்துக் கொள்வீர்கள். தர்ம காரியங்களிலும், உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் விருப்பப்படி தள்ளி வைத்த வேலை ஒன்றை செய்து முடிப்பீர்கள்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

சில செயல்களில் முக்கிய நண்பர்களின் உதவி கிடைக்காமல் போகலாம். திட்டமிட்ட பண வரவுகளும் சிறிது தள்ளிப்போகும். பயணங்களில் கவனமாக இல்லாவிட்டால், இழப்புகளைச் சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் உங்கள் பொறுப்புகளில் கவனம் செலுத்தாவிட்டால் உயரதிகாரிகளுக்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும். சொந்தத் தொழிலில், செய்து கொடுத்த பணியில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொடுப்பீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

செயல்கள் பலவற்றில் முயற்சியுடன் ஈடுபட்டு முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். எதிர்பார்க்கும் பண வரவுகள் திட்டமிட்டபடி வந்துசேரும். பணம் வரும் முன்பாகவே செலவுகள் காத்திருக்கும். சிலருக்கு ஆதாயம் அதிகமுள்ள புதிய வேலைகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சிலருக்கு, பதவி உயர்வு ஏற்பட லாம். தள்ளி வைத்த வேலையை உடனடியாகச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகும். சொந்தத் தொழில்


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

செய்யும் செயல்கள் பலவற்றில் வெற்றிகரமான பலன்களை அடைவீர்கள். தளர்வடைந்த செயல்களை நண்பர்களின் உதவியோடு செய்து முடிப்பீர்கள். திட்டமிட்டபடி வரவேண்டிய பணம் வந்து சேரும். கடந்த காலத்தில் நடந்த இழப்பு ஒன்றை ஈடுகட்ட முயற்சிப்பீர்கள். உத்தியோகத்தில் சிலருக்கு அலுவலகத்தில் முக்கிய பொறுப்புகள் வந்து சேரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பு தருவர். சொந்தத் தொழிலில் முன்னேற்றமான போக்கு காணப்படும். புதிய நபர் ஒருவரால் வருமானம் அதிகரிக்கும்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் நீங்கள் முயற்சியோடு ஈடுபட்ட சில செயல்களில் முன்னேற்றமான போக்கை காண்பீர்கள். இருந்தாலும் உத்தியோகத்தில் உள்ளவர்கள் தங்கள் பொறுப்புகளில் கவனமாக இல்லாவிட்டால், உயரதிகாரிகளின் கோபப்பார்வைக்கு இலக்காக நேரிடும். சொந்தத் தொழில் செய்பவர்கள் வாடிக்கையாளர்களின் ரசனைகளைப் புரிந்து கொண்டு செயல்படுவது நல்லது. கூட்டுத் தொழில் வியாபாரத்தில் வழக்கமான லாபம் காணபடும். பணியாளர்களை அடிக்கடி கண்காணித்து அவர்களுக்குள் இருந்த மனவேறுபாடுகளை அகற்றுவீர்கள். குடும்பத்தில் ஏற்படும் சிறுசிறு பிரச்சினைகள் தோன்றி மறையும்.

# தி. மு. கவுக்கு பெரிய எதிரியாக உருவெடுக்கும் அண்ணாமலை!



சென்னை மடல்
-பகவான் சிங்-

“உங்களைப் பார்த்து வளர்ந்தேன். உங்கள் கொள்கையைப் பற்றி நடக்கிறேன். உங்கள் கனவுகளை நனவாக்குவேன்.” திராவிடக் கொள்கையின் ஜாம்பவானான தந்தை முத்துவேல் கருணாநிதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினமான ஒகஸ்ட் 7 அன்று அவருக்கு அஞ்சலி செலுத்திய மு க ஸ்டாலின் ட்விட்டரில் பதிவு செய்தது இது. அந்தப் புனித தினத்தன்று ஸ்டாலின், அண்ணா சாலையில் ஓமந்தூரார் அரசு வளாகத்தில் உள்ள கலைஞர் சிலையில் தொடங்கி, மெரினா கடற்கரையில் உள்ள கலைஞர் நினைவகம் வரையில் ஒரு மாபெரும் அமைதிப் பேரணியை நடத்தினார். இதில் திமுக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் பங்கு பெற்றனர்.

கலைஞரின் 99 ஆவது பிறந்த தினம் ஜூன் 3 அன்று கொண்டாடப்பட்டது. அவரது சிறப்பையும் புகழையும் கொண்டாடும் வகையில், ஆண்டு முழுவதற்குமான, தமிழகம் தழுவிய வண்ணமிகு நிகழ்வுகள் திட்டமிடப்பட்டன. அன்று ஸ்டாலின் வெளியிட்ட ஒரு ருவீட்டில், “பல்வேறு சமூக நலத் திட்டங்கள் மூலமாக நவீன தமிழ்நாட்டைச் செதுக்கிய சிற்பி” எனவும் பகுத்தறிவயும் சமூக நீதியையும் நிலைநாட்ட இறுதி வரை உழைத்தார் எனவும் கலைஞருக்குப் புகழாரம் சூட்டினார். சமூக நலன் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் கவனம் செலுத்திய தந்தையின் நிர்வாகத்தைப் பின்பற்றும் ஸ்டாலின், தனது கடந்த இரண்டாண்டு கால ஆட்சியில் ஏழைகள், பெண்கள், மூத்த குடிமக்கள் ஆகியோருக்கான பல்வேறு நலத் திட்டங்களைத் தொடங்கியதுடன், தமிழகத்தில் தொழிற்சாலைகளையும் அவற்றின் மூலம் வேலை வாய்ப்புகளையும் அதிகரிக்கும் வகையில், ஹூண்டாய் போன்ற பன்னாட்டுப் பெரு நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களைக் கையெழுத்திட்டு, பல பெரிய திட்டங்களை முன்னெடுத்து வருகிறார். 2024 பாராளுமன்றத் தேர்தலில் மூன்றாவது முறையாக நரேந்திர மோடி பிரதமராவதைத் தடுக்கும் நோக்கில், எதிரணி ஒன்றை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்து, அரசியல் ரீதியாகவும் அவர் சிறப்பாகச் செயல்படுகிறார். எதிர்க் கட்சிகளின் கூட்டணியை இறுதி செய்ததில் இவரது பங்கு அதிமுக்கியமானது. மாநிலத்தின் முக்கிய எதிர்க்கட்சியான அஇஅதிமுக, எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர் செல்வம் ஆகிய இரு முன்னாள் முதலமைச்சர்களின் மோதலால் பிளவு பட்டிருக்கும் நிலையில், இவர் தமிழக அரசியலில் மிகவும் நேர்த்தியான இடத்தில் இருக்கிறார். இந்த இரு தலைவர்களும் அம்மா ஜெயலலிதாவின் அரசியல் வாரிசு தான் தான் என்று உரிமை கோரியும் அம்மா மற்றும் எம் ஜி ஆர் ஆகியோரின் தொண்டர்களின் விசுவாசம் தனக்கே இருப்பதாகக் கூறியும் வருகிறார்கள்.

அதிமுக எப்போதுமே எம் ஜி ஆர், அவரது வாரிசு ஜெயலலிதா என்று ஒற்றைத் தலைமையைப் போற்றியே வளர்ந்த கட்சியானதால், இப்போது அப்படிப்பட்ட ஒரு மக்கள் செல்வாக்கு பெற்ற தலைவர் இல்லாத நிலையில், சமூக நீதி என்ற சமத்துவக் கொள்கை அடிப்படையில் அமைந்த திராவிடக் கட்சியான திமுகவுக்கு எந்த அச்சுறுத்தலும் இல்லை. தமிழகத்தைப் பல காலம் ஆண்ட கட்சியான அதிமுகவில், தற்சமயம் மிகவும் பரிதாபகரமான சூழல் நிலவுகிறது. காரணம், தமிழக அரசின் மேல் குற்றச்சாட்டுகளைக் குவித்து வரும் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை, திமுகவுக்கு பெரிய



எதிரியாக உருவெடுத்து வருகிறார். 2024 பாராளுமன்றத் தேர்தலில் பாஜகவுக்கு ஆதரவு திரட்ட, தமிழ்நாடு தழுவிய பாத யாத்திரை ஒன்றை அண்ணாமலை முன்னெடுத்துள்ளார். எனினும், பன்னெடுங்காலமாக பாஜக எதிர்ப்பு மனநிலையுடனே இருந்து வந்துள்ள இந்த திராவிட மாநிலத்தில் அது மிகப்பெரிய சவாலாகவே இருக்கும்.

மக்களவையில் எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த பிரதமர் நரேந்திர மோடி அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம், வியாழனன்று, எதிர்பார்த்தபடியே தோல்வியடைந்தது. 543 உறுப்பினர் கொண்ட அவையில் 301 என்ற எண்ணிக்கையுடன் அசுர பலம் பெற்றுள்ளது பாஜக. தங்களது நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுவிடும் என்று நன்றாகத் தெரிந்தும், மணிப்பூர் வன்முறை குறித்த பிரதமரின் மௌனத்தைக் கலைக்கும் ஒரே நோக்கில் தான் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக எதிர்க்கட்சிகள் கூறின. ஊடகங்கள், அரசியல் எதிரணி தவிரவும், சர்வதேச அளவிலும் மோடியின் இந்த நீண்ட மௌனம் கடும் விமர்சனத்துக்குள்ளானது என்பதைப் பற்றி எனது முந்தைய ஈழநாடு கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளேன்.



கருணாநிதியின் நினைவுதினத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் தி.மு.க.வினரின் மௌனப் பேரணி

மே மாதத் தொடக்கம் முதல், மணிப்பூரில், பெரும் பான்மை மெய்த்தி இனத்தவருக்கும் பழங்குடி குக்கி இனத்தவருக்கும் இடையில் ஏற்பட்ட இன மோதலில், 150க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர், ஆயிரக் கணக்கானோர் புலம் பெயர்ந்துள்ளனர். இரண்டு குக்கி இனப் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக இழுத்துச் சென்ற காணொலி, பல வாரங்களுக்குப் பின் வெளியாகி, சர்வதேச அளவில் அது கடும் கோபத்தை எழுப்பிய நிலையில் தான் பகிரங்கமாகத் தன் மணிப்பூர் மௌனத்தைக் கலைத்தார் மோடி, அதுவும் ஒரு சிறிய கண்டனக் கருத்தின் மூலம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்

## இலங்கையின் தந்திரத்தில் சிக்கும் இந்திய தலைமைகள்!

மீதான மூன்று நாள் வாதங்களின்போது ஆளும் கட்சி மற்றும் எதிர்க் கட்சிகளுக்கு இடையில் பல விரும்பத்தகாத கருத்துப் பரிமாற்றங்கள் இடம் பெற்றன. காங்கிரஸ் தலைவர் ராஹூல் காந்தி,பிரதமர்

மோடியை மணிப்பூரில் பாரத அன்னையைப் படுகொலை செய்து விட்டதாகக் குறிப்பிட்டு, மணிப்பூர் இந்தியாவின் அங்கம் என்று பிரதமர் கருதவில்லையா என்ற கேள்வியையும் எழுப்பினார்.

ஆனால், அடுத்த நாள், நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்குப் பிரதமர் தனது விரிவான விளக்கத்தை அளிக்கும் போது, எதிர்க்கட்சிகளைச் செக்கில் இட்டு ஆட்டிவிட்டார். எதிரணியினரின் குறைபாடுகள், ஒற்றுமையின்மை, சந்தர்ப்பவாதம், தேசிய உணர்வின்மை ஆகியவை குறித்து வழக்கமான தனது பாணியில் எள்ளி நகையாடினார். காங்கிரஸ் தலைமையிலான எதிரணி, அரசியல் வாரிசுரிமையை ஊக்குவிப்பதில் தான் அக்கறை கொண்டுள்ளதாக, ராஹூல் காந்தியைக் கிண்டல் செய்தார் மோடி.

தங்கள் புதிய கூட்டணியான ஐ.என்.டி.ஐ.ஏ-வின் துணையுடன் மணிப்பூர் குறித்துப் பிரதமரைப் பேச வைப்பதை விடுத்து, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம், மோடிக்குத் தங்கள் ஆட்சியின் ஒன்பது ஆண்டு காலத்தில், ஏழைகளுக்கான பல நலத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டது பற்றியும் சர்வதேச மேடையில் பாரதம் கொடிகட்டிப் பறப்பது பற்றியும் பட்டியலிட ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தன எதிர்க் கட்சிகள். இந்தியாவின் வளர்ச்சி குறித்தும் பொருளாதார மேம்பாடு குறித்தும் மட்டுமல்லாமல், தன்னை ஏழைகளின் காவலனாக நிலை நிறுத்திக்கொள்ளும் வாய்ப்பையும் மோடி தவ றாமல் பயன்படுத்திக் கொண்டார். மேலும் ஜம்மு காஷ்மீர் தொடர்பான அரசியல் சாசனத்தின் 370 ஆவது சட்டப்பிரிவு நீக்கம் போன்ற பல வரலாற்றுப் பிழைத் திருத்தங்களைத் தமது ஆட்சியில் மேற்கொண்டதாக அவர் பெருமைப்பட்டுக்கொண்டார். மொத்த உள் நாட்டு உற்பத்தி அடிப்படையில், இந்தியாவை உலகின் மூன்றாவது சிறந்த பொருளாதாரமாக உயர்த்த, தமது அரசு உறுதி பூண்டுள்ளது குறித்தும் 2024இல் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் நம்பிக்கையையும் அவர் வெளிப்படுத்தினார். நாட்டின் நலன் குறித்த அக்கறை இல்லாமல், ‘பிரதமராவேன்’ என்ற கனவு காணும் அனைவரும் சந்தர்ப்பவாதத்தால் ஒன்று கூடியுள்ள பொருந்தாக் கூட்டணியில் எதிர்க்கட்சித் தலைவர்கள் இணைந்துள்ளனர் என்று தமக்கே உரிய கிண்டலுடன் சாடினார் மோடி.

காங்கிரஸ் கட்சி, திமுக, தேசியவாத காங்கிரஸின் ஷரத் பவார் அணி ஆகியவை, மோடி பேசிக்கொண்டிருக்கும் போதே வெளி நடப்பு செய்தன. அதன் பிறகு அவர் மணிப்பூர் வன்முறை குறித்துப் பேசத் தொடங்கி, விரைவில் அங்கு அமைதி திரும்பும் என்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஏற்பட்டு, பெருமையான ஒரு ஆபரணமாக மணிப்பூர் உருவெடுக்கும் என்றும் உறுதி கூறினார். பொதுத் தேர்த லுக்குப் பத்து மாதங்களே இருக்கும் நிலையில், விரோத மனப்பான்மை கொண்ட சீனாவுக்கும் மியான்மருக்கும் இடையில் சிக்கியிருக்கும், மலை சூழ்ந்த இந்தச் சிறிய வடகிழக்கு மாநிலத்தில் தனது வாக்குறுதியை எப்படிக் காப்பாற்றப்போகிறார் என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு மோடி அளித்த காட்டமான பதிலடியின் போது அவர் கச்சத்தீவு

குறித்துப் பேசியதைக் குறிப்பிடவிட்டால், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான அனல் பறக்கும் விவாதங்களைப் பற்றிய எனது உரையாடல், முழுமையடையாது. இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது தாரை வார்க்கப்பட்ட கச்சத்தீவை மீட்டுத் தரக் கோரித் தனக்குக் கடிதம் எழுதும் திமுக தலைவர்கள், அந்த அம்மையாரின் காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருப்பது பற்றியும் கிண்டல் செய்தார்.

ராமேஸ்வரத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் உள்ள, யாரும் இல்லாத ஒரு சிறிய தீவு தான் கச்சதீவு என்பதைத் தாங்கள் அறிவீர்கள். பல ஆண்டுகளாக, திமுகவும் அதிமுகவும் போட்டி போட்டுக் கொண்டு, அந்தத் தீவை மீட்டுத் தருமாறு மத்திய அரசைக் கோரி வருகின்றன. ராமநாதபுரம் ஜமீந்தாரின் சொத்துகளில் கச்சதீவும் அடங்கியிருந்தது என்று தமிழக நில ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. 1974 இல் சிறிமாவோ பண்டாரநாயகே டில்லி வந்த போது, பாரதப்பிரதமர் இந்திரா காந்தி, சர்ச்சைக்குரிய சூழலில், ‘இந்திய-இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின் ஒரு பகுதி யாக, அந்தத் தீவின் உரிமையை இலங்கைக்கு மாற்றிக் கொடுத்தார். தந்திரமாக, சிங்கள அரசியல்வாதிகள், பல ஆண்டுகளாக, இந்தியத் லைமையைத் தங்கள் வழிக்குக் கொண்டு வரும் போக்குக்கு இது ஒரு உதாரணம். உங்கள் ஞாயிறு காலை டிபனை நீங்கள் சுவைப்பதை மேலும் தாமதப்படுத்த நான் விரும்பவில்லை. ராவணன் தமிழனா சிங்களனா என்று உங்கள் பாராளுமன்றத்தில் நடந்த விவாதம், ஞாயிறு டிபனுடன் பாயசமாக அமையக்கூடும். உங்களுக்கு ரஜினிகாந்தின் பழைய ஹிட் பாடல் நினைவிருக்கிறதா?

“ராமன் ஆண்டாலும் ராவணன் ஆண்டாலும் எனக்கொரு கவலையில்லை…” இதன் அடுத்த வரிகளைத் தற்போதைய சமூக-அரசியல் சூழலுக்கேற்ப, உங்கள் கற்பனைக் குதிரையைத் தட்டி விட்டு, நீங்களே இட்டு நிரப்பிக்கொள்ளுங்கள். ஆனால், ‘எமக்கொரு கவலையில்லை’ என்று மட்டும் உங்கள் கவிதையை முடிக்காதீர்கள்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# இனப்பிரச்னை தீர்வுக்கு எதிரான சக்திகளை மேலும் வலுப்படுத்தும் ஜனாதிபதியின் அணுகுமுறைகள்



**வீரகத்தி தனபாலசிங்கம்**

உண்மையில் அரசியலமைப்புக்கான 13 வது திருத்தம் குறித்து எழுதி அலுத்துப் போய்விட்டது என்றாலும் எழுதாமல் இருக்கவும் முடியவில்லை. நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஈழநாடு ஊர்க்குருவியும் அதன் சலிப்பை வெளியிட்டது.

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்புக்கு அது நடைமுறையில் இருந்துவரும் நான்கரை தசாப்தங்களுக்கும் அதிகமான காலகட்டத்தில் கொண்டுவரப்பட்ட இருபதுக்கும் அதிகமான திருத்தங்களில் வேறு எதுவும் 13 வது திருத்தம் போன்று பெரும் சர்ச்சைக்குள்ளாகியது இல்லை என்று இந்த பத்தியில் ஏற்கெனவே சில தடவைகள் குறிப்பிட்டிருந்தோம்.

கடந்த வருடம் நடுப்பகுதியில் ஜனாதி பதியாக பதவியேற்ற பிறகு இனப்பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வைக் காணப்போவதாகக் கூறிக்கொண்டு 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து ரணில் விக்கிரமசிங்க பேசத் தொடங்கிய நாள் முதல் அது தொடர்பில் அரசியல் சர்ச்சை தீவிரமடையத்தொடங்கியது. அரசியலமைப்பில் நீண்டகாலமாக இருந்துவரும் ஒரு திருத்தத்துக்கு எதிராக இலங்கையில் கிளம்பியிருக்கின்றதைப் போன்ற எதிர்ப்பை அண்மைய வரலாற்றில் உலக நாடுகளில் வேறு எங்கும் ஓர் அரசியலமைப்பு ஏற்பாடு சந்தித்ததாக நாம் இதுவரை அறியவில்லை.

அரசியலமைப்பு மீறப்படுவதற்கு எதிராகவே போராட்டங்கள் நடத்தப்படவேண்டும். ஆனால், எமது நாட்டில் நீண்டகாலமாக தொடரும் அரசியலமைப்பு மீறல் ஒன்றை தொடருமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி போராட்டங்கள் இடம்பெறுகின்றன. ஆசியாவின் பழமைவாய்ந்த ஜனநாயக நாடுகளில் ஒன்றின் அரசியல் சமுதாயத்தின் இனவாத அடிப்படையிலான கோணல் போக்கின் வெளிப்பாடு இது.

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு புறப்பட்ட ஜனாதிபதி விக்கிரமசிங்க இப்போது அதன் அதிகாரங்களைக் குறைக்கும் ஒரு செயன்முறையை, அறிந்தோ அறியாமலோ முடுக்கிவிட்டிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும்.

மாகாணங்களுக்கான பொலிஸ் அதிகாரங்களை நீக்கி அந்த திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் கருத்தொருமிப்பை எதிர்பார்த்து அரசியல் கட்சிகளிடம் அவர் நாளை மறுதினம் செவ்வாய்கிழமைக்கு முன்னதாக யோசனைகளைக் கோரியிருக்கும் நிலையில், சில கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகள் காணி அதிகாரம் குறித்தும் கேள்வியெழுப்பத் தொடங்கியிருப்பது கவனிக்கத்தக்கது.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரை தொடர்பில் முன்கூட்டியே பலத்த எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால், இந்திய விஜயத்தை முடித்துக்கொண்டுவந்து கடந்த மாத இறுதியில் (ஜூலை 26) அவர் கூட்டிய பாராளுமன்ற கட்சிகளின் மகாநாட்டில் ( சர்வகட்சி மகாநாடு) அவர் வெளியிட்ட கருத்துக்களுடன் ஒப்பிடும்போது சபையில் ஆற்றிய உரை சாராம்சத்தில் பெரிய வித்தியாசத்தைக் கொண்டிருக்கவில்லை எனலாம்.

13 வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பாக பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக கூறிய விக்கிரமசிங்க, ஒரு நாடு என்ற வகையில் நாம் முன்னோக்கிச் செல்வதற்கு இந்த பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண வேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார். நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்துக்கும் பொருத்தமான முறையில் அந்த திருத்தத்தை நடைமுறைப் படுத்த வேண்டியது அவசியம் என்று கூறிய அவர் திறந்த மனதுடனான விரிவான பேச்சுவார்த்தைகள், கலந்தாலேசனைகள் மூலம் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் கருத்தொருமிப்புக்கு வந்தால் மாத்திரமே அதைச் சாதிக்கமுடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

ஜூலை 26 சர்வகட்சி மகாநாடு பற்றி குறிப்பிட்ட ஜனாதிபதி 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் குறிக்கோள் தொடர்பில் அன்றைய தினம் கருத்தொருமிப்பு எதுவும் காணப்படவில்லை என்பதையும் அதிகாரப்பரவலாக்கப் பொறிமுறை குறித்து எந்த கருத்தும் வெளிப்படையாக முன்வைக்கவில்லை என்பதையும் ஒத்துக்கொண்டார்.

சில கட்சிகள் அவற்றின் கருத்துக்களை முன்வைப்பதற்கு தயக்கம் காட்டுகின்றன. வேறு சில கட்சிகள் அவநம்பிக்கையுடனேயே மகாநாட்டுக்கு வந்தன. கடந்த கால சர்வகட்சி மகாநாடுகளின் எதிர்மறையான அனுபவங்கள் அதற்கு காரணமாக இருக்கலாம். இனிமேல் இந்த நிலைமையை மாற்றுவோம் என்று கூறிய விக்கிரம சிங்க, அரசாங்கத்தின் சகல செயற்பாடுகளையும் எதிர்ப்பதே எதிர்க்கட்சியின் பங்கு என்று நோக்கும் மரபில் இருந்தும் எதிர்க்கட்சியின் கருத்துக்களை பொருட்படுத்தாமல் அரசாங்கம் செயற்படும் வழக்கத்தில் இருந்தும் விலகியிருப்போம் என்று ஒரு புதிய அரசியல் கலாசாரம் பற்றியும் பிரசங்கம் செய்தார்.



பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடன் மாகாணசபைகள் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும் புதிய சட்டங்களை கொண்டு வருவதற்குமான திட்டங்கள் குறித்து பேசிய அவர் உத்தேச மாற்றங்களில் வாக்களிப்புக்கு மாவட்ட விகிதாசார முறையை கடைப்பிடித்தல், பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை தேர்தல்களில் போட்டியிடுவதற்கு வகைசெய்தல், பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 சதவீதமாக அல்லது அதற்கும் கூடுதலாக அதிகரித்தல் போன்ற நோக்கங்கள் அடங்குவதாக குறிப்பிட்டார்.

இலங்கை அரசியல் விவகாரங்கள் குறித்து இடையறாது எழுதிவரும் இந்திய மூத்த அரசியல் ஆய்வாளரான என். சத்தியமூர்த்தி ஜனாதிபதியின் பாராளுமன்ற உரை குறித்து கருத்து வெளியிடுகையில், "13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது நாட்டின் அபிவிருத்திக்கும் எதிர்காலத்துக்கும் அவசியம் என்று கூறிய விக்கிரமசிங்க, அதை எவ்வாறு என்று விளக்கிக் கூறவில்லை. அதேபோன்றே அதன் நடைமுறைப் படுத்தலுக்கு அரசியலமைப்பு திருத்தங்களும் மாகாணசபைகள் சட்டங்களில் மாற்றங்களும் தேவை என்று குறிப்பிட்டார். ஆனால் அது குறித்தும் விளக்கமாக கூறவில்லை. அவர் இதுவரையில் கூறியதெல்லாம் மாகாணசபைகள் பொலிஸ் அதிகாரங்களை எதிர்பார்க்கமுடியாது என்பதேயாகும். ஆனால் மாகாணசபைகளுக்கான பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களே இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் மையக்கூறாகவும் 13 வது திருத்தத்தின் அடிப்படையாகவும் அமைந்தன" என்று கூறியிருக்கிறார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, விக்கிரமசிங்க தனதுரையில் "கடந்த 36 வருடங்களாக 13 வது திருத்தத்தின் மூலமாக மாகாணசபைகளை நடைமுறைப் படுத்துவதில் நாம் வெற்றி கண்டிருக்கின்றோமா? அல்லது அது ஒரு தோல்வியாகப் போய்விட்டதா? இந்த விளைவுகளுக்கும் பங்களிப்புச் செய்த காரணிகள் எவை?" என்று ஏதோ எதுவும் அறியாதவர் போன்று கேள்விகளை வேறு கிளப்பியிருக்கிறார்.

இப்போது இறுதியாக 13 வது திருத்தத்தை அதன் அதிகாரங்களில் குறைப்புச்செய்தாவது நடைமுறைப் படுத்துவதை முற்றுமுழுதாக பாராளுமன்றத்தின் பொறுப்பில் ஜனாதிபதி விட்டுவிட்டார்.

பாராளுமன்றத்தினால் தெரிவுசெய்யப்பட்ட காரணத்தினால் மாத்திரமல்ல, முன்னைய எந்தவொரு ஜனாதிபதியையும் போன்று இல்லாமல் பாராளுமன்றத்தில் அடிக்கடி உரையாற்றிவரும் ஜனாதிபதியாகவும் விக்கிரமசிங்க விளங்குவதால் அவரை "பாராளுமன்ற ஜனாதிபதி" என்று அரசியல் விமர்சகர்கள் சிலர் வர்ணிக்கிறார்கள். அவரும் சட்டரீதியாக தன்னால் செய்யக்கூடிய பல கடமைகளையும் கூட பாராளுமன்றத்தின் பொறுப்பில் விட்டுவிட்டு தனக்கு சேதம் இல்லாத ஒரு வலயத்திற்குள் நின்றுகொள்கிறார்.

> **13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப் புறப்பட்ட விக்கிரமசிங்க இறுதியில் அறிந்தோ அறியாமலோ அந்த திருத்தத்தின் அதிகாரங்களை மேலும் குறைப்பதற்கான செயன்முறையொன்றை முடுக்கிவிட்டிருக்கிறார் என்றே கூறவேண்டியிருக்கிறது.**

இந்நிலையில், ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை பெரும்பான்மையாகக் கொண்ட தற்போதைய பாராளுமன்றத்தினால் 13 வது திருத்தம் தொடர்பில் காணப்படக்கூடிய கருத்தொருமிப்பின் இலட்சணம் எவ்வாறிருக்கும் என்பதை விளங்கிக்கொள்வதில் எவருக்கும் சிரமம் இல்லை.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை, 13 வது திருத்தம் தொடர்பில் கிளம்பியிருக்கும் சர்ச்சையில் ஒரு புறத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புகின்ற ஒரு தலைவராகவும் அதேவேளை மறுபுறத்தில் சிங்கள தேசியவாத சக்திகளின் அக்கறைகளை கருத்தில் எடுத்து செயற்படுகின்ற தலைவராகவும் தன்னை காட்சிப்படுத்தக்கூடிய அணுகுமுறைகளை கடைப்பிடிக்கிறார்.

13 வது திருத்தத்தை நடைமுறைப் படுத்தும் விவகாரத்தில் சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கக் கூடிய அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க எவரும் இல்லை. விக்கிரமசிங்கவும் கூட தனது நிலைப்பாட்டை மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்கு முயற்சிக்கப்போவதில்லை. அதேவேளை அந்த திருத்தத்துக்கு எதிரான சக்திகளே முன்னெப்போதையும் விட வலுவடைந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் உள்ள சிங்கள கட்சிகளில் எதுவுமே கருத்தொருமிப்பைக் காண ஒத்துழைப்பதற்கு பதிலாக அடுத்துவரக்கூடிய தேர்தல்களில் சிங்கள மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக முன்னரையும் விட கூடுதலான அளவுக்கு சிறுபான்மை இனங்களின் அரசியல் அபிலாசைகளுக்கு எதிரான தேசியவாத நிலைப்பாடுகளை எடுப்பதிலேயே அக்கறை காட்டும்.

13 வது திருத்தத்தை அரசியலமைப்பில் இருந்து முற்றாக நீக்கிவிடவேண்டும் என்ற கோரிக்கை தென்னிலங்கையில் ஓங்கி ஒலிக்கத்தொடங்கிவிட்டது. அடுத்துவரக்கூடிய எந்தவொரு தேர்தலிலும் தென்னிலங்கையில் சிங்கள தேசியவாத அரசியல் நிகழ்ச்சி நிரலே முன்னுரிமை பெறக்கூடிய சூழ்நிலை தோற்றுவிக்கப்படுகிறது. உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் முக்கிய பங்கு வகித்த இராணுவ அதிகாரிகளை 13 வது திருத்தத்துக்கு எதிராக தூண்டிவிடும் செயற்பாடுகளையும் சிங்கள தேசியவாத அரசியல் சக்திகள் முன்னெடுக்கின்றன.

அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முயற்சிப்பது நாட்டுப்பிரிவினையை தடுக்க தங்கள் உயிர்களை தியாகம் செய்த படைவீரர்களுக்கு செய்யும் துரோகம் என்று கூறி மீண்டும் அரசியலில் இராணுவவாதப் போக்கிற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் முயற்சிகள் இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக்காண்பதற்கு ஆதரவான சக்திகளை வலுப்படுத்துவதற்கு பதிலாக அதற்கு எதிரான சக்திகள் முழுவீச்சில் களத்தில் இறங்குவற்கு வாய்ப்பான சூழலையே இறுதியில் தென்னிலங்கையில் உருவாக்கியிருக்கின்றன. அது அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பெரும்பாலும் அவருக்கு பாதகமாகவே அமையக்கூடும். ●

# 13இற்கு எதிராக சிங்கள பௌத்தத்தை அணிதிரட்டும் ரணிலின் உத்தி!

**பனங்காட்டான்**

இன்றைய பத்தியை எழுத ஆரம்பிக்கும்போது "இதற்குத்தான் ஆசைப்பட்டாயா ரணிலகுமாரா" என்ற வரிகளை வாய்க்குள் முணுமுணுப்பது தவிர்க்க முடியாதுள்ளது.

பதின்மூன்று பதின்மூன்று என்று வாய்ப்பாடாகச் சொல்லப்படும் அரசியல் திருத்தத்தை சிங்கள பௌத்த நெருக்கடிக்குள் தள்ளி, அதில் குளிர் காய்ந்து, எப்படியாவது முழுமையாக இல்லாமற் செய்ய வேண்டுமென்பதையே குறியாகக் கொண்டு ரணில் எடுத்துள்ள முயற்சி திசை தவறாது நகர ஆரம்பித்துள்ளதை ஒவ்வொரு கணமும் பார்க்க முடிகிறது.

பதின்மூன்றுக்கு எதிராக சிங்களப் பெரும்பான்மையை, பௌத்த பீடத்தின் தலைமையில் அணி திரட்ட வேண்டுமென்ற ரணிலின் உத்தி வெற்றிகரமாக அதன் ஓட்டத்துக்கு தயாராகிறது.

முன்னர் பல தடவை பதின்மூன்றாம் திருத்தத்தின் மூலம் பற்றி குறிப்பிட்டாயிற்று. ரணிலும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ஒருவரையொருவர் மடக்கும் முனைப்பில் மேற்கொள்ளப்பட்ட 1987 யூலை ஒப்பந்தத்தில் கருவறைக் குழந்தை பதின்மூன்றாம் திருத்தம். இதிலிருந்து உருவானது மாகாண சபை முறைமை.

இந்த ஒப்பந்தத்தில் ஜே.ஆர். கையொப்பமிடும்போது சிங்களத் தரப்பில் அவருக்கு பலமான எதிர்ப்பு இருந்தது. முக்கியமாக அவரது பிரதமர் ஆர். பிரேமதாச, தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி ஆகியோர் ராஜிவின் இலங்கை விஜயத்தையே புறக்கணித்தார்கள். ராஜிவ் மீதான கொலை முயற்சியும் கொழும்பில் இடம்பெற்றது. அப்போது விமல் வீரவன்ச தலைமையில் இயங்கிய ஜே.வி.பி. இந்த ஒப்பந்தத்தை தீவிரமாக எதிர்த்து கொலைகளையும், தமிழர் வணிக நிலையங்களை அடித்து நொருக்கி தீமூட்டியும் வந்தது.

எனினும் வடக்கையும் கிழக்கையும் இணைக்க நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்பு நிச்சயம் தோல்வியடையும் என்ற பூரண நம்பிக்கையில் இந்த ஒப்பந்தத்தில் தாம் கைச்சாத்திட்டதாக ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமது சுயசரிதையான 'மென் அன்ட் மெமரீஸ்' (Men and Memories) என்ற நூலின் 109ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். "கிழக்கு மாகாணத்தில் சிங்களவரும் முஸ்லிம்களும் இணைந்து அறுபது வீதமாக உள்ளனர். இவர்கள் வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டார்கள். இதனால் சர்வஜன வாக்கெடுப்பு வெற்றி பெறாது" என்று ஜே.ஆர். தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

1987ல் அறுபது வீதமாக இருந்து கிழக்கின் சிங்கள முஸ்லிம் சனத்தொகை அதன் பின்னைய 35 ஆண்டுகளில் இடம்பெற்ற திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களால் எழுபது வீதத்தை தாண்டிவிட்டது என்பதையும், 2016ம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பினால் நிரந்தர இணைப்பு ரத்தாகி விட்டது என்பதையும், இன்று சர்வஜன வாக்கெடுப்பு கோரும் தமிழ் தலைமைகள் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

மறுபுறத்தில், ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பின்னர் புதுடில்லி திரும்பும் வழியில் சென்னை மரீனா கடற்கரையில் மாபெரும் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்த ராஜிவ் காந்தி அதில் உரையாற்றினார். "தமிழ்நாட்டில் நீங்கள் அனுபவிக்கும் உரிமைகளிலும் பார்க்க கூடுதலானவற்றை இலங்கைவாழ் தமிழர்களுக்கு பெற்றுக் கொடுத்துவிட்டு உங்கள் முன்னால் வந்துள்ளேன்" என்று அவர் தெரிவித்தபோது கடல் அலையை மேவிய கையொலி எழுந்தது.

நடந்தது என்ன? பதின்மூன்றாம் திருத்தமும் மாகாண சபையும் மெல்லிழையில் ஊசலாடுகின்றன. முன்னர் ஒரு தடவை கூறியது போன்று குரங்கு அப்பம் பங்கிட்ட கதைபோல பதின்மூன்றாம் திருத்தத்தில் கூறப்பட்டவைகளை பிய்த்துப் பிடுங்கும் போக்கில் பொலிஸ் அதிகாரத்தை முழுமையாக இல்லாமற் செய்ய ரணில் நடவடிக்கை எடுத்துள்ளார்.



இலங்கையின் பிரதான சிங்கள கட்சிகள் அனைத்திலும் அமைச்சர் பதவிகளை வகித்து, இன்று எந்தக் கட்சியும் இல்லாது நிற்கும் ஜி.எல்.பீரிஸ் முதன்முறையாக ஓர் உண்மையை சில நாட்களுக்கு முன்னர் வாய் திறந்து கூறியுள்ளார். "பதின்மூன்றாவது திருத்தம் என்பது இலங்கையின் அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்த நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டியதில்லை" என்ற அவரது கூற்று ரணிலை அப்பட்டமான பொய்யர் என்று அம்பலப்படுத்தும் அரசியல் நோக்கத்துக்கானதாயினும் சொல்லப்பட்ட விடயம் நூற்றுக்கு நூறு உண்மையானது.

1978ல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தபோது அமலாக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு அவர் ஓய்வு பெற்ற 1988க்கு முன்னரான பதினொரு வருடங்களுக்குள் பதினேழு திருத்தங்களைக் கண்டன. பதினெட்டு முதல் இருத்தொன்று வரையான திருத்தங்கள் அதன் பின்னர் நிறைவேற்றப்பட்டவை. இவை அனைத்தும் நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டு சட்டமாக்கப்பட்டவை.

எனவே இவைகளை நடைமுறைப் படுத்தும் முழுமையான அதிகாரம் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ரணிலுக்கு உண்டு. அரசியலமைப்பு விதிகளுக்கு உட்பட்ட வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவான இவர் அமைச்சரவை நியமனங்கள், அமைச்சரவை மாற்றங்கள், வெளிநாடுகளுடனான ஒப்பந்தங்கள் அனைத்திலும் தமது அதிகாரங்களை பூரணமாக பயன்படுத்தி வருகிறார்.

ஜனநாயக வரம்புக்குட்பட்ட தொழிற்சங்கங்களின் போராட்டங்கள், மாணவர் போராட்டங்கள் போன்றவற்றை பாதுகாப்பு படையின் பலத்தை பயன்படுத்தி முறியடிக்கும் சர்வாதிகார செயற்பாடுகளிலும் ஜனாதிபதி என்ற பதவி வழி வந்த நிறைவேற்று அதிகாரத்தையே பயன்படுத்தி வருகிறார்.

ஆனால், பதின்மூன்றாம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது என்று வரும்போது மட்டும், நாடாளுமன்றமே முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டது என்றும், தம்மை ஒரு றப்பர் முத்திரை போலவும் காட்டிக் கொள்வது உலுத்தத்தனமான அரசியல்.

> **தமிழருக்கான அதிகாரப் பகிர்வையும், அரைகுறை அதிகார மாகாண சபை முறைமையையும் முற்றாக ஒழித்துக் கட்டுவதற்காகவே பதின்மூன்றாம் திருத்தத்தை மீண்டும் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு எடுத்துச் செல்ல முனைவதுடன், சகல கட்சிகளினதும் ஆலோசனையைக் கோரியுள்ள ரணிலின் இலக்கு இலகுவாக எட்டப்படுகிறதா?**

கடந்தாண்டு டிசம்பர் மாதத்துக்கு முன்னர் தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காணப்போவதாக அறிவித்தபோது நாடாளுமன்ற அங்கீகாரம் பற்றி எதுவும் இவர் கூறவில்லை. பெப்ரவரி 4ம் திகதி சுதந்திர தினத்துக்கு முன்னர் தீர்வு காணப்படும் என்று அறிவித்தபோது நாடாளுமன்ற அங்கீகாரம் பற்றி எதுவும் சொல்லவில்லை. தமிழ் அரசியல் கட்சிகளை அழைத்து பேச்சை ஆரம்பித்தபோதும் நாடாளுமன்ற அங்கீகாரம் பற்றி மூச்சு விடவில்லை.

சகல கட்சிகளையும் இணைத்து பேச்சு நடத்தும்போது திடீரென தாம் அதிகாரமற்றவர் போன்றும், நாடாளுமன்றமே அதியுயர் பீடம் என்பது போலவும் காட்ட வேண்டிய தேவை எவ்வாறு ஏற்பட்டது.

இந்தியா புறப்படும் முன்னர் இடம்பெற்ற அரசியல் கட்சிகளுடனான பேச்சின்போது பொலிஸ் அதிகார நீக்கம் பற்றிச் சொன்னார். இல்லாத ஒன்றை நீக்கப்போவதாக அவர் சொன்னபோது இருக்கும் அதிகாரங்களுடன் மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறு சகலரும் கேட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் இதில் அடக்கம். ஆனால், மழுப்பல் பதிலளித்துவிட்டு கூட்டத்தை முடித்துக் கொண்டார்.

இந்தியப் பிரதமரை சந்தித்தபோது பிரச்சனைத் தீர்வுக்கான தமது முன்மொழிவை அரசியல் கட்சிகளிடம் சமர்ப்பித்துவிட்டதாகவும், நாடு திரும்பியதும் அவ்விடயம் தொடரும் எனவும் அவரிடம் தெரிவித்ததாக ஊடகச் செய்திகள் வந்தன. ஆனால், தமிழ்க் கட்சிகளை சந்தித்த கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் பதின்மூன்றாம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தவும், மாகாண சபை தேர்தலை விரைவாக நடத்தவும் ரணிலிடம் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியதாகத் தெரிவித்தார்.

நாடு திரும்பிய ரணில் சகல அரசியல் கட்சிகளிடமும் பதின்மூன்றாம் திருத்தம் தொடர்பான ஆலோசனைகளை இந்த மாதம் பதினைந்தாம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் வேண்டினார். அதற்கிடையில் கடந்த 9ம் திகதி இது தொடர்பான உரை ஒன்றை நாடாளு மன்றத்தில் நிகழ்த்தியபோது நாட்டின் அபிவிருத்திக்கு பதின்மூன்றாம் திருத்த நடைமுறை அவசியமானது என்று பெரும் குண்டொன்றை தூக்கி வீசிய தோடு இதற்குத் தேவையான ஆலோசனைகளை அரசியல் கட்சிகளிடம் கேட்டார்.

இவைகளை கூட்டிக் கழித்துப் பார்க்கும்போது, பதின்மூன்றாம் திருத்தம் வெட்டித் தள்ளி சீரழிக்கப்படப் போகிறது அல்லது இதற்குப் பதிலாக இன்னொன்று உப்புச் சப்பில்லாததாக உருவாகப் போகிறது என்பது வெளிச்சமாகத் தெரிகிறது. வழமைபோன்று தேசிய நல்லிணக்கம், அபிவிருத்திக்கான துரித நடவடிக்கைகள் என சர்வதேசத்தை வளைத்துப்போடும் சொல்லாட்சிகளை தமதுரையில் தாராளமாக பயன்படுத்தியுள்ளார்.

அதேசமயம், மாகாண சபைத் தேர்தலுக்கு சட்டம் தயாரிக்கப்படுவது, மாகாண சபைகள் செயற்படும்வரை ஆளுனர்களுக்கு ஆலோசனை வழங்க சபைகள் அமைக்கப்படுவது, மாகாணத் தேர்தல் வாக்களிப்பில் மாவட்ட விகிதாசார முறைமையை நடைமுறைப்படுத்துவது, மாகாண சபைத்தேர்தலில் நாடாளுமன்ற உறுப்பினர்களை சேர்த்துக் கொள்வது என்பவை இவரது உத்தேச திட்டத்தில் உள்ளன என்பது தெரியவந்துள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பதின்மூன்றாம் திருத்தம் நாட்டைப் பிளக்கும் என்ற அறிவிப்பை பௌத்த மகாநாயக்கர்கள் பகிரங்கப்படுத்தி பதின்மூன்றாம் திருத்த சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டுமென்ற கோரிக்கையையும் முன்வைத்துள்ளனர். இதற்கு ஆதரவான குரல்கள் தெற்கிலிருந்து ஒலிக்க ஆரம்பித்துள்ளன.

ரணில் எதனை எதிர்பார்த்து காய்களை நகர்த்தினாரோ அது அதுவாக இயங்க ஆரம்பித்துள்ளது. நாட்டின் அபிவிருத்திக்கு பதின்மூன்றாம் திருத்தம் அவசியமென ரணில் கூறியபோது சகல பிரச்சனைகளின் தீர்வுக்கும் இதனையே சர்வரோக நிவாரணியாக அவர் நினைத்ததுபோல கருத இடமளித்தது. ஆனால், சகல பிரச்சனைகளையும் ஒரேயடியாக தீர்த்துக்கட்ட பதின்மூன்றை ரணில் கையில் எடுத்தாரென்பது இப்போது பரகசியமாகியுள்ளது.

சந்தர்ப்பத்தைப் பார்த்திருந்த சிங்கள பௌத்த மேலாண்மையை, பதின்மூன்றை ஆயுதமாக்கி எழுப்பியுள்ளார் ரணில். இன்னும் எத்தனை 'கறுப்பு' மாதங்களை தமிழர் காணவேண்டும் தீர்வுக்காக!


# தொழில் வல்லுநர்களின் வெளியேற்றமும் இலங்கை எதிர்நோக்கும் சவால்களும்!

கந்தையா அருந்தவபாலன்

கொவிட் பெருந்தொற்றும் அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் குழப்பங்களும் நாட்டின்பொருளா தாரத்தையும் மக்களின் இயல்பான வாழ்க்கை முறையையும் பெருமளவு பாதித்தது மட்டுமன்றி நாட்டின் எதிர் காலம் தொடர்பாக நிச்சயமற்ற ஒரு நிலைமையும் தோற்றுவித்தது. இவை நாட்டின் உள்நாட்டு உற்பத்தி, வெளிநாட்டு வர்த்தகம், உள்நாட்டு வெளிநாட்டு முதலீடு, வங்கி மற்றும் நிதிநிறுவனங்கள், பொது விலைமட்டம்,செலவாணிக்கையிருப்பு, நாணய மாற்று வீதம் போன்ற பேரினப்பொருளாதாரத் தளங்களில் சடுதியாக எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தியதுடன் வேலையிழப்பு, வருமான வீழ்ச்சி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பொருள் தட்டுப்பாடு, வறுமை நிலைஉயர்வு, கல்வி, சுகாதாரம் போன்ற அத்தியாவசிய சேவைகளின் சுருக்கம் போன்றவற்றினால் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் பெருமளவு பாதிப்படையச் செய்துள்ளது. இதன்காரணமாக மக்கள் தமது எதிர் காலம் தொடர்பாக நம்பிக்கையற்றவர்களாக ஒருவித விரக்தி நிலையிலே உள்ளனர். குறிப்பாக இந்நிலை கல்விகற்ற, தமது எதிர்கால உயர்வு பற்றி அதிகம் அக்கறைப்படுகின்ற மத்திய தர மற்றும் மேற்றர மக்கள் மத்தியில் அதிகம் காணப்படுகிறது. இவர்களின் நம்பிக்கையை மீளக் கட்டி வளர்க்கக்கூடியவாறான உறுதியான அரசியல் பொருளாதார சீராக்கங்கள் ஏற்படுத்தப் படுவதாகவும் தோன்றவில்லை. பதிலாகச் சர்வதேச நாணய நிதியத்தின் கடனுக்கான கடன் மறுசீரமைப்பும் அக்கடனுக்கான நிபந்தனைகளை நிறைவேற்றும் நோக்கில் மக்கள் மீது மென்மேலும் சுமைகளை ஏற்றுவதுமான ஒரு தற்காலிகத் தீர்வுப் பொறிமுறையே கையாளப் படுகிறது. அதேவேளை தற்போதைய நிலையில் தேவைப்படும் உறுதியான பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களை ஏற்படுத்துவதக்கூடிய உறுதியான அரசாங்கமும் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போதிருக்கும் பாராளுமன்றமும் ஜனாதிபதியும் அரசியலமைப்பு ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் கூட உண்மையில் மக்களால் நிராகரிக்கப்பட்வர்களின் கூட்டுக்கலவையான அரசாங்கமாகவே நோக்கப்படுகிறது. அது மட்டுமன்றி எதிர்காலத்தில் தேர்தல் நடந்தாலும் உறுதியான அரசாங்கமொன்று அமைவதற்கான சாத்தியப்பாடுதொடர்பாகவும் நம்பிக்கை கொள்ள முடியாதுள்ளது. இவ்வாறான களநிலைமையொன்றில் வாய்ப்புள்ளவர்கள் தமது வளமான எதிர்காலத்துக்காக நாட்டைவிட்டு வெளியேறுவது இயல்பானதே. இவ்வாறானதொரு குடியகல்வையே தற்போது இலங்கை எதிர்கொள்கிறது.

இலங்கையில் நிகழ்ந்து வரும் வழமையான குடியகல்வுக்கு மேலாக கூர்ப்பான குடியகல்வுப் போக்கு ஏலவே இருமுறை நிகழ்ந்துள்ளதை அவதானிக்கலாம். முதலாவது 1956 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்தும் ஏற்பட்டது. 1956 இல் இலங்கை அரசாங்கம் சிங்கள மொழிச் சட்டத்தைக் கொண்டுவந்ததைத் தொடர்ந்து நாட்டில் வாழ்ந்து வந்த பறங்கி இனத்தவர்கள் நாட்டைவிட்டு அதிகளவில் வெளியேறியமையே அது. இலங்கையை ஆட்சி செய்த காலனித்துவ ஆட்சியாளர்களான போத்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் போன்றோரின் வம்சாவளியினரே பறங்கியர் என அழைக்கப்பட்டனர். இவர்களில் பெரும்பாலானோர் உள்நாட்டு சிங்களவர் மற்றும் தமிழர்களுடனான திருமணக்கலப்புகளின் மூலம் உருவான சந்ததியினராவர். இரண்டாவது அதிகரித்த குடியகல்வு 1983ஆம் ஆண்டில் அரசாங்கத்தினால் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்ட தமிழர்களுக்கெதிரான வன்முறை (இது 83 இனக்கலவரம் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் உண்மையில் திட்டமிட்ட இன ஒடுக்கலாகவே கொள்ளப்பட வேண்டும்.)யைத் தொடர்ந்து ஏற்பட்டது. இதன்போது இலட்சக் கணக்கான தமிழர்கள் ஐரோபிய நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் சட்டரீதியாகவும் சட்டரீதியற்ற முறையிலும் குடிபெயர்ந்தனர். இவ்விரு கட்டங்களிலும் சிங்களவர்கள் தவிர்ந்த ஏனைய இனத்தினரே குடிபெயர்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது நிகழும் மூன்றா வது கட்ட அதிகரித்த குடிப்பெயர்வில் சிங்களவர்களே அதிகமாக இருப்பதுடன் அவர்களுள் கணிசமானோர் தொழில் வல்லுனர்களாக உள்ளனர். அதாவது பொறியியலாளர்கள், வைத்தியர்கள், தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர்கள், கணக்காளர்கள், நிதித்துறை மேலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கைத்தொழில் வல்லுநர்கள் போன்ற வாண்மைத் தொழிலாளர்களாக உள்ளனர்.

இலங்கையிலிருந்து வழமையாக குடிபெயரும் தொழிலாளர்களில் பெரும்பாலானவர்கள் பயிற்சி பெறாத மற்றும் ஓரளவு பயிற்சி பெற்ற தொழிலாளர்களே அதிகளவில் இருப்பதுடன் இவர்களில் 90 சதவீதத்துக்கு மேலானவர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கே செல்கின்றனர். இதில் தொழில் வல்லுநர்களின் அளவு மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகிறது. ஆனால் சென்ற ஆண்டிலும் இந்த ஆண்டின் கடந்த மாதங்களிலும் தொழில் வல்லுநர்களின் வெளியேற்றத்தில் செங்குத்தான அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அப்பெயர்வு மேற்குலகை நோக்கியதாகவும் உள்ளது. சர்வதேச நாணயநிதியத்தின் ஆலோசனைக்கு அமைவாக அரச துறையில் காணப்படும் மிகை ஊழியரைக் குறைத்தல், அந்நியச் செலவாணி உட்பாய்ச்சலைக் கூட்டுதல் போன்ற நோக்கங்களுக்காக ஓய்வூதியப் பாதிப்பின்றி ஐந்து வருடங்களுக்கு விடுப்பு வழங்கும் அரசின் அறிவிப்பும் இத்தகைய தொழில் வல்லுநர்களின் வெளியேற்றத்தை மேலும்




**பெருமளவிலான தொழில்வல்லுநர்களின் வெளியேற்றம் இலங்கையின் உற்பத்தி இயலளவை மேலும் குறையச் செய்யும். இதுநாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேலும் பாதிப்பதுடன் சுகாதார மருத்துவப் பணிகள், வறுமையகற்றல் என்பன பெருமளவு பாதிக்கப்படுவதுடன் மாணவர்களின் உயர்கல்வியின் தரமும் பாதிப்படையக் கூடும். இவற்றைச் சீர்செய்வதற்கான வழிமுறைகளைத் தேடிப் பயணிப்பதற்குப் பதிலாக நாட்டின் தலைவர்கள் தேர்தலை நோக்கிப்பயணித்துக் கொண்டிருக்கிறார்கள்**

ஊக்குவித்துள்ளது.

உத்தியோகபூர்வ தரவுகளின்படி 2022 ஆம் ஆண்டில் மட்டும் மூன்று இலட்சம் இலங்கையர்கள் நாட்டை விட்டு வெளியாறியுள்ளனர். அத்துடன் இந்த ஆண்டின் முதல் மூன்று மாதங்களில் 73,000 பேர் வெளியேறியுள்ளனர். இவர்களில் கணிசமானோர் தொழில் வல்லுநர்களாவர். கடந்த ஆண்டில் மட்டும் 700 வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இதில் துறைசார் சிறப்பு நிபுணர்களும் அடங்குகின்றனர். இதேபோல இவ்வாண்டும் மேலும் 800 வைத்தியர்கள் வெளியேற உள்ளதாகவும் அவர்களுள் 300 நிபுணர்களும் அடங்குவதாக தகவல்கள் கூறுகின்றன. எடுத்துக் காட்டாக இலங்கையில் மொத்தமாக இருந்த 40 சிறுநீரக வைத்திய நிபுணர்களில் 10பேர் அதாவது 25 வீதத்தினர் இதுவரை வெளியேறி விட்டனர். இதேபோலவே ஏனைய துறைகளிலுள்ள சிறப்பு வைத்திய நிபுணர்களின் வெளியேற்றத்தினால் திட்டமிடப்பட்ட சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாமல் வைத்தியசாலைகள் திணறி வருகின்றன. இதே போலவே அரச துறையில் பணியாற்றிவரும் 1,536 பொறியியலாளர்களில் 436 பேர் ஏற்கனவே வெளியேறிவிட்டனர். கிட்டத்தட்ட இதேயளவு பொறியியலாளர்கள் தனியார் துறையிலிருந்து வெளியேறியுள்ளதாகவும் கூறப்படுகிறது. அதேவேளை அரச துறையிலுள்ள மேலும் 300 பேர் இவ்வாண்டு வெளியறவுள்ளதாகக் கருதப்படுகிறது. இதேவேளை நவீன பொருளாதாரத்தின் முக்கிய துறையாக விளங்கும் தொடர்பாடல் தொழில் நுட்பத் துறையிலிருந்த பல்வேறு தரத்திலுமான 10,000 க்கு மேற்பட்ட வல்லுநர்கள் நாட்டைவிட்டு வெளியேறி விட்டனர். அதேபோல இலங்கை அரச பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களில் 2,000 பேர் வரையில் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். இவர்களில் 70 பேர் பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அரச பல்கலைக்கழகங்களில் மொத்தமாக இருக்க வேண்டிய சுமார் 11,000 விரிவுரையாளர்களில் 6,000பேர் மட்டுமே தற்போது உள்ளதாக பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு தெரிவிக்கின்றது. வல்லுநர்களின் குடிப்பெயர்வு தொடர்பான மேற்காட்டியவை உத்தியோக பூர்வத் தரவுகளாகும். இவற்றுடன் வெளிப் படுத்தாமல் சென்ற வல்லுநர்களையும் சேர்த்தால் வெளியேறிவர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகமாகே இருக்கும்.

இவ்வாறான தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதன் மூலம் இலங்கை பிரதானமாக இரு நன்மைகளை எதிர்பார்க்கிறது. ஒன்று அவர்கள் அனுப்பும் பணத்தின் மூலம் அந்நியச் செலாவணி உட்பாய்ச்சல்கள் அதிகரிக்கும் என்பது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகப் பற்றாக்குறையில் 80 வீதம் இவ்வாறான தொழிலாளர்கள் அனுப்புகின்ற வெளிநாட்டு நாணயங்கள் மூலமே ஈடுசெய்யப்படுகிறது. இதனால் இது இலங்கைக்கு மிக முக்கியமான மூலமாக அமைந்துள்ளது. இரண்டாவது வெளிநாடுகளில் வேலை செய்துவிட்டு நாடு திரும்பும் போது அவர்களின் மேம்பட்ட ஊழியத் திறனை நாடு பெற முடியுமென்பது. ஆனால் தற்போது இலங்கையிலிருந்து குடிபெயரும் வல்லுநர்கள் மூலம் இவை எவ்வளவு தூரம் சாத்தியமென்பது கேள்விக்குறியே. ஏனெனில் இவர்களுள் பெரும்பாலானோர் இலங்கையில் தமக்கும் பிள்ளைகளுக்கும் வளமான எதிர்காலம் அமையாது என்ற தீர்மானத்தில் நாட்டை வெறுத்தே வெளியேறுகின்றனர். உண்மையில் இந்நாட்டில் பல்வேறு சலுகைகளுடன் உயர் பதவிகளில் இருந்தவர்கள் வெளிநாடுகளில் அதைவிடக் குறைவான நிலையிலேயே தமது வாழ்க்கையை ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்று தெரிந்து கொண்டேசெல்வதன் நோக்கம் தமது பிள்ளைகளின் வளமான எதிர்காலம் நோக்கியதே. எனவே இவர்கள் நாடுதிரும்புவார்கள் என்பதற்கும் பணம் அனுப்புவார்கள் என்பதற்கும் எந்த உத்தரவாதமுமில்லை. எதிர்பார்க்கும் நன்மைக்குப் பதிலாக கூடியளவு பாதிப்புகளையே நாடு அடையவுள்ளது. அப்பாதிப்புகள் ஏற்கனவே நாட்டின் சுகாதாரத் துறையில் வெளிப்படத் தொடங்கி விட்டன. படிப்படியாக ஏனைய துறைகளிலும் அதன் தாக்கத்தை விரைவில் எதிர்பார்க்க முடியும்.

வல்லுநர்களின் வெளியேற்றம் என்பது நாட்டுக்குச் சொந்தமான மனித மூலதனத்தை ஏற்றுமதி செய்வதாகும். இதன்மூலம் குறைந்த எண்ணிக்கைகளில் வல்லுநர்களைக் கொண்டிருக்கும் இலங்கைபோன்ற நாடுகளுக்கு கிடைக்கும் நன்மைகளைவிட கூடுதலான பாதிப்புகளே ஏற்படும். அதுவும் ஏலவே முடங்கியிருக்கும் நாட்டின் பொருளாதாரம் மேலும் மோசமடைவதற்கான சாத்தியங்களை நிராகரிக்க முடியாது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படும் பொருளாதார வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளில் இறங்குமுகமாக மாறியதுடன் எதிர்க் கணிய நிலையைஅடைந்துள்ளது. அதாவது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சிக்குப் பதிலாக சுருக்கமடைந்து வருகிறது. 2022 ஆம் ஆண்டில் 7.82 வீதத்தால் சுருங்கிய நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதம் இவ்வாண்டின் முதல்காலாண்டில் மேலும் 11.5 வீதத்தால் மேலும் சுருக்கமடைந்துள்ளது. இவ்வாறு அமைந்தால் 2023இற்குசர்வதேச நாணய நிதியத்தின் எதிர்வு கூறலான 3 வீத பொருளாதாரச் சுருக்கத்தை விட கூடுதலாகவே பொருளாதாரம் சுருங்குவதற்கு வாய்ப்புள்ளது. இவ்வாறான ஒரு நிலையில் பெருமளவிலான தொழில் வல்லுநர்களின் வெளியேற்றம் இலங்கையின் உற்பத்தி இயலளவை மேலும் குறையச் செய்யும். இதுநாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேலும் பாதிப்பதுடன் வேலையின்மை, தனிநபர் வருமான வீழ்ச்சி, பொருள் தட்டுப்பாடு, விலையுயர்வு,வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வறுமை, போசாக்கின்மை வாழ்க்கைத்தர வீழ்ச்சி போன்றவற்றுடன் இறக்குமதி தூண்டப்படல், ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைதல் போன்ற பல்வேறு நச்சு விளைவுகளை ஏற்படுத்தக் கூடும். அதேவேளை அரச நலன்புரிப் பணிகளான சுகாதார மருத்துவப் பணிகள், வறுமையகற்றல் என்பன பெருமளவு பாதிக்கப் படுவதுடன் மாணவர்களின் உயர்கல்வியின் தரமும் பாதிப்படையக் கூடும். ஆனால் இவற்றைச் சீர்செய்வதற்கான வழிமுறைகளைத் தேடிப் பயணிப்பதற்குப் பதிலாக நாட்டின் தலைவர்கள் தேர்தலை நோக்கிப்பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே வேதனையான விடயம்.

# இந்தியாவின் இரட்டைக் கொள்கையும் பிறிக்ஸ் மாநாடும்

அ.நிக்ஸன்

பிறிக்ஸ் மாநாட்டில் எடுக்கப்படவுள்ள தீர்மானங்கள் பலவற்றில் இந்தியா உடன்படக்கூடிய வாய்ப்புகள் இல்லை, இருந்தாலும் பிறிக்ஸ் கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவ நாடான சீனாவுடன் முரண்பாட்டில் உடன்பாடு என்ற அணுகுமுறையை உருவாக்கிச் செயற்படுத்த இந்தியா திரைமறைவு நகர்வுகளில் ஈடுபடுகின்றது.

ரஷ்யாவுடன் மரபுவழி உறவின் மூலமாக சீனாவுடன் அணுகும் முறையை இந்தியா ஏற்கனவே பின்பற்றியிருந்தாலும் பிறிக்ஸ் நாடுகளிடையேயான பொதுநாணய உருவாக்கத்தில் இந்தியா உடன்பட மறுத்த பின்னரான சூழலில் பிறிக்ஸ் மாநாடு நடைபெறவுள்ளது.

“இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அதன் தகுதியின் அடிப்படையில் இந்தியப் பொருளாதாரம் சிறப்பாகச் செயல்படுகின்றது. இதனால் இந்தியாவுக்குப் பிறிக்ஸ் நாணயம் தேவையில்லை. அப்படியொரு பொது நாணயப் பயன்பாடு பற்றி இந்தியா உரையாட விரும்பவில்லை” என்று இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் புதுடில்லியில் செய்தியாளர் மாநாட்டில் விபரித்ததாக ரைம்ஸ் ஒப் இந்தியா நாளிதழ் கூறுகிறது.

பில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகம் மற்றும் இராணுவ ஒப்பந்தங்களுடன் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவுடன் இந்தியா, நல்லுறவைக் கொண்டுள்ளது. இன்னும் வெளியிடப்படாத பிறிக்ஸ் நாணயத்தை நம்பி, மேற்கத்திய நாடுகளுடன் தனது வர்த்தக உறவைப் பணயம் வைக்க இந்தியா விரும்பவில்லை என்று ரைம்ஸ்ஒப்இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

உலக விவகாரங்களில் அமெரிக்கா தலைமையிலான மேற்குலகின் மேலாதிக்கத்தை ஈடுகட்டுவதை நோக்கமாகக் கொண்ட பிறிக்ஸ் கூட்டமைப்பின் விரிவாக்கம் குறித்து சீனாவும் ரஷ்யாவும் கடந்த சில வாரங்களாக மிகத் தீவிரமாக விவாதித்து வருகின்றன.

குறிப்பாகப் பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் அதிக உறுப்பு நாடுகளை ஏற்றுக்கொள்வது என்று சீனாவும், ரஷ்யாவும் முனவைத்த பரிந்துரைகளுக்கு இந்தியா சில வரையறைகளை விதித்துள்ளது.

இது குறித்து சென்ற வியாழக்கிழமை தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவுடன் நரேந்திர மோடி தொலைபேசியில் உரையாடியதாக ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டுள்ளது. இந்த உரையாடலின் பின்னரே பிறிக்ஸ் கூட்டமைப்புக்குள் சற்று விரிசல் உருவாகியுள்ளது.

பிரேசில், ரஷ்யா, இந்தியா மற்றும் சீனாவை உள்ளடக்கிய பிறிக்ஸ் கூட்டமைப்பு 2010 இல் தென்னாபிரிக்காவை சேர்த்ததிலிருந்து அதன் செயற்பாடுகள் விரிவடையவில்லை என்ற கடும் விமர்சனங்கள் உறுப்பு நாடுகள் மத்தியில் உண்டு.

இப் பின்னணியில் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்பில் சேர விருப்பம் தெரிவித்துள்ளன. சீனாவும் ரஷ்யாவும் கையாளும், பரந்த தேசிய வளங்களை மையமாகக் கொண்டு சேர விரும்பும் இந்த நாடுகள், தமக்குரிய பொருளாதாரப் பலன்களையே கூடுதலாக எதிர்பார்க்கின்றன.

ஆனால் இந்த நாடுகள் பிறிக்ஸ் கூட்டமைப்பில் இணைந்தால் அமெரிக்க மேலாதிக்கத்திற்குச் சீனாவும் ரஷ்யாவும் மேலும் சவால்விடும் நிலை உருவாகும். இதன் காரணமாகவே புதிய உறுப்பு நாடுகளைச் சேர்க்கும் சீன - ரஷ்ய நகர்வுக்கு இந்தியா சில வரையறைகளை விதித்துள்ளது என்பது கண்கூடு.

ஆகவே மாநாடு ஆரம்பிப்பதற்கு இன்னமும் இரண்டு வாரங்கள் உள்ள நிலையில் இந்தியா மீண்டும் தன்னுடைய இரட்டைக் கொள்கையைப் பகிரங்கப்படுத்துகின்றது போல் தெரிகிறது.

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் சார்ந்து நிற்பதா அல்லது சீனாவையும் ரஷ்யாவையும் மையப்படுத்திய அரசியல் பொருளாதாரக் கூட்டில் நிற்பதா என்று இந்தியா இதுவரையும் முடிவெடுத்ததாகக் கூற முடியாது.

ஆனால் மிகச் சிறிய தீவான இலங்கை, அமெரிக்கா அல்லது சீனா ஆகிய இரண்டிலும் ஏதேனும் ஒன்றிடம் முழுமையான பிடியில் சிக்கிவிடாமல் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான உத்தியை மாத்திரம் இந்தியா கன கச்சிதமாக வகுத்து வருகிறது.

1983 இல் இந்திரா காந்தி காலத்தில் அணிசேராக் கொள்கை என்று கூறிக் கொண்டு அப்போதைய சோவியத் யூனியன் நாட்டுடன் இந்தியா திரைமறைவில் உறவைப் பேணியிருந்தது. அன்று ஆரம்பித்த இந்தியாவின் இந்த இரண்டு வகையான சர்வதேசக் கொள்கை இன்றுவரை தொடருகின்றது.

குறிப்பாகச் சீனாவுடன் அதிகளவு வர்த்தக உறவுகள் மற்றும் ரஷ்யாவுடன் அரசியல் இராணுவ உறவுகள் ஆகியவற்றைப் பேணிக் கொண்டு அமெரிக்க மேற்குச் சார்பு நிலையையும் இந்தியா பின்பற்றுகிறது.

புதுடில்லியில் உள்ள சில பிரதான ஊடகங்கள் இந்தியாவின் இக் கொள்கையை நியாயப்படுத்தி உலக அரசியல் பொருளாதார செயற்பாடுகளில் முன்னுதாரணமாகவும் சித்தரிக்க முற்படுகின்றன.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலக வல்லரசு அந்தஸ்தை அனுபவித்த அமெரிக்கா, இன்று பிறிக்ஸ் கூட்டமைப்பினால் சவாலுக்கு உள்ளாகி வருகிறது என்பது உண்மை. குறிப்பாக 2050ஆம் ஆண்டுக்குள் உலக வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்தும் இலக்குடன் பிறிக்ஸ் கூட்டமைப்பை விரிவுபடுத்தும் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன. சீன - ரஷ்ய கூட்டு இதற்கு முதன்மைக் காரணி என்பது புதுடில்லிக்குப் புரியாததல்ல.




அதேநேரம் பிறிக்ஸ் மாநாடு பற்றி மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் அச்சமடைந்திருப்பதை சர்வதேச நாளிதழ்கள் செய்தி இணையத் தளங்கள் வெளிப்படுத்தி வருகின்றன. உலகப் பொருளாதார அமைப்பியல் மாறி வருகின்றது. ரஷ்ய - உக்ரெயன் போர் மற்றும் பிற நாடுகளுக்கு எதிரான மேற்கத்திய பொருளாதாரத் தடைகள் காரணமாக உலகளாவிய அரசியல் - பொருளாதார அதிகார சமநிலையும் குழப்பமடைந்துள்ளது.

இந்த நிலையில் சர்வதேசச் சந்தையில் அமெரிக்க டொலர் ஆதிக்கம் செலுத்தும் நிதி முறைக்கு பிறிக்ஸ் கூட்டமைப்பு, மாற்றாக இருக்கும் என்று பிறிலினியர் சிற்றங் என்ற ஜேர்மன் நாளிதழ் தெரிவிக்கின்றது.

பிறிக்ஸின் இலக்கு டொலருக்கு மாற்றாக வேறு

> **பிறிக்ஸ் கூட்டமைப்பைக் கடந்து இந்தியா தொடர்பான நம்பிக்கை அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு இன்னமும் உண்டு. குறிப்பாக இந்தோ - பசுபிக் விவகாரம் உள்ளிட்ட உலக அரசியல் ஒழுங்கு முறைகள் மற்றும் ஜனநாயகச் செயற்பாடுகளில் இந்தியா விரும்பியோ விரும்பாமலோ தம்முடன் நிற்கும் என முழுமையாக அமெரிக்கா நம்புகிறது. அதாவது மேற்கு மற்றும் ஐரோப்பிய முகமும் இந்தியாவிடம் உண்டு. இலங்கை தொடர்ந்தும் செல்லப்பிள்ளைதான்**

நாணயத்தைக் கண்டுபிடிப்பதாக இருக்க முடியாது. ஆனாலும் டொலர் பயன்பாட்டை பிறிக்ஸ் விரும்புவதாக இல்லை என்று உலகப் பொருளாதார உறவுகளின் நிபுணரும் ஆலோசகருமான கலாநிதி டான் ஸ்டெய்ன்போக் கூறியதாக ஜேர்மன் நாளிதழ் விபரிக்கிறது.

அதாவது தற்போதைய உலகப் பொருளாதாரத்துடன் ஒத்துப்போகும் பணவியல் அமைப்பின் பல்வகைப்படுத்தல் பற்றி பிறிக்ஸ் கூட்டமைப்பு முடிவு செய்யக்கூடிய ஏது நிலை இருப்பதாகவே அந்த நாளிதழ் பலமாக நம்புகிறது.

பிறிக்ஸ் கூட்டமைப்புடன் இணைந்து செயலாற்ற இருபது நாடுகள் விரும்புகின்றன. இலங்கை போன்ற சில சிறிய நாடுகளும் பிறிக்ஸ் நாடுகளின் பொருளாதார வியூகங்களுக்குள் இந்திய ஒத்துழைப்புடன் நகரக் காத்திருக்கின்றன என்ற கருத்து மிகச் சமீபகாலமாக இந்திய ஊடகப் பரப்பில் பேசப்படுகின்றது.

அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளில் ஏற்பட்ட நிதி நெருக்கடி மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் நிலையற்ற பொருளாதாரத் தன்மைக்கு வழிவகுத்தது. அத்துடன் அமெரிக்கா இன்னும் தீவிரமாக டொலரை தனது அமெரிக்க நலன்களை மாத்திரம் முன்னேற்ற ஒரு ஆயுதமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது.

இதன் காரணமாகவே பிறிக்ஸ் கூட்டமைப்பின் பொருளாதார வியூகங்கள் மேலும் வலுப்பெறக் காரணமாகியது என்ற முடிவுக்கு வரலாம்.

மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பலவீனமான பொருளாதாரச் செயற்பாடுகள் காரணமாக 2008 ஆம் ஆண்டில் இருந்து பிறிக்ஸ் கையாண்டு வரும் பொருளாதார உத்தி இம்முறை வலுப்பெற்றுள்ளது என்ற கருத்தும் உண்டு.

ரஷ்ய - உக்ரெயன் போர்ச் சூழல் சமகால உலகப் பொருளாதார நெருக்கடிக்குப் பிரதான காரணம். இந்த நிலையில் இந்த மாதம் இருபத்தியிரண்டாம் திகதியில் இருந்து இருபத்தி நான்காம் திகதி வரை தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள பிறிக்ஸ் மாநாடு சீன - இந்திய, ரஷ்ய - சீன உறவுகளுக்கு வலுச் சேர்ப்பதுடன், சர்வதேச சந்தையில் அமெரிக்க டொலருக்கு எதிரான புதிய வர்த்தக நடைமுறைகளை உருவாக்கும் என்ற அச்சம் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்பட்டுள்ளதையே அமெரிக்கச் சார்பு ஊடகங்கள் வெளிப்படுத்துகின்றன.

குறிப்பாக நிதி முறையின் முக்கிய நன்மை பண முறையின் அதிக பல் வகைப்படுத்தலாக இருக்கும் என்ற அச்சம் கலந்த தொனி மேற்கு மற்றும் ஐரோப்பிய ஊடகங்களில் வெளிப்படுகின்றன.

அதேநேரம் உலக நடைமுறை விவகாரங்கள் சிலவற்றில் அமெரிக்காவுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகள் குறிப்பாக ஜீ -7 அங்கத்துவ நாடுகளிடையே உருவாகி வரும் முரண்பாடுகளும் பிறிக்ஸ் கூட்டமைப்பின் செயற்பாட்டுக்கு உத்வேகம் அளித்துள்ளதாகவும் கூறலாம்.

இந்த இடத்திலேதான் அமெரிக்காவுடனும் மற்றும் ரஷ்யா சீனா ஆகிய நாடுகளுடனும் உறவைப் பேணி வரும் இந்தியாவின் இரட்டைக் கொள்கை அல்லது சர்வதேச தேவைக்கு ஏற்ப இசைந்து செயற்படும் அரசியல் - பொருளாதார அணுகுமுறை பிறிக்ஸ் மாநாட்டில் முக்கியம் பெறுமா அல்லது சீனாவின் பொருளாதார ஆதிக்கத்துக்குள் இந்திய நிலைப்பாடு முடங்குமா என்பதை அவதானிக்க வேண்டும்.

இந்தோ - பசுபிக் விவகாரத்தில் இந்தியா தமக்குப் போட்டியல்ல என்றும் அமெரிக்கா வலிந்து உள்நுழைவதுதான் தமக்குப் பிரச்சினை எனவும் சீனாவின் அதிகாரபூர்வ ஆங்கில செய்தித் தளமான குளோபல் ரைம்ஸ் சுட்டிக்காட்டி வரும் நிலையில், சீனாதான் இந்தோ - பசுபிக் பிராந்தியத்தில் தமக்குப் பிரச்சினை என்றும் போட்டி எனவும் இந்தியா மார்தட்டுகிறது.

ஆனால் சீனாவின் வளர்ச்சிக்கு ஈடுகொடுக்க முடியாத ஒரு நிலையில்தான் இந்தியாவும் சர்வதேச அரங்கில் இரட்டைக் கொள்கையைப் பின்பற்றுகிற என்பது பகிரங்கமான உண்மை. அதாவது மேற்கு மற்றும் ஐரோப்பிய முகமும் இந்தியாவிடம் இருப்பதை மறுக்க முடியாது.

ஆகவே ரஷ்ய - உக்ரெயன் போரினால் ரஷ்யப் பொருளாதாரத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுசெய்ய, இந்திய ரூபாவைச் சர்வதேச வர்த்தகத்தில் ரஷ்யாவின் ஒத்துழைப்புடன் ஈடுபடுத்த முற்படும் இந்தியாவின் பொருளாதார அணுகுமுறை முழு அளவில் வெற்றியளிக்க வேண்டுமானால் சீனா ஒத்துழைக்க வேண்டும். ரஷ்யாவும் அதனை மனதார விரும்ப வேண்டும்.

ஆனால் இந்திய ரூபாவுக்குச் சர்வதேச அங்கீகாரத்தை முழு அளவில் வழங்க சீனா இணங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் இல்லை. இந்த நிலையில்தான் சர்வதே அணுகுமுறை பற்றிய இந்திய இரட்டைக் கொள்கை அம்பலப்படலாம்.

பிறிக்ஸில் இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்பு பிரதானமாக இருந்தாலும் மூலோபாய ஒழுங்குமுறையில் ரஷ்யாவும் சீனாவும் பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக ஒன்றிணைவது மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்குச் சவாலாகவே இருக்கும்.


ஆனாலும் பிறிக்ஸ் கூட்டமைப்பைக் கடந்து இந்தியா தொடர்பான நம்பிக்கை அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளுக்கு இன்னமும் உண்டு. குறிப்பாக இந்தோ - பசுபிக் விவகாரம் உள்ளிட்ட உலக அரசியல் ஒழுங்கு முறைகள் மற்றும் ஜனநாயகச் செயற்பாடுகளில் இந்தியா விரும்பியோ விரும்பாமலோ தம்முடன் நிற்கும் என்ற முழு நம்பிக்கை அமெரிக்காவுக்கு உண்டு.

இந்தியாவின் இந்த இரட்டைப் போக்கு அரசியல் நன்கு தெரிந்த நிலையிலேதான் சீனா இந்தியாவைக் கிண்டலாகப் பார்க்கிறது. ரஷ்யாவும் இராணுவ ரீதியாக இந்தியாவைப் பலப்படுத்த விரும்பவில்லை. இந்தியாவுக்கும் சீனாவைவிட ரஷ்யா பற்றிய முன் எச்சரிக்கை இல்லாமலில்லை.

இந்த இடத்தில்தான் பிறிக்ஸ் மாநாட்டில் எடுக்கப்படும் பொருளாதாரம் தொடர்பான முழுமையான உடன்பாட்டுக்கு இந்தியா செல்லுமா என்ற கேள்விகள் விஞ்சியுள்ளன. ஆனால் இந்தியாவின் இத் தளம்பல் நிலை இலங்கைக்கு அரசியல் பொருளாதார ரீதியில் மேலும் சாதகமான சூழலை உருவாக்கும்.

குறிப்பாக சீன - இந்திய அரசுகளின் செல்லப்பிள்ளையாக இலங்கை தொடர்ந்து பயணிக்கும். இந்தியாவைக் கடந்து அமெரிக்காவும் இலங்கைக்கு அவ்வப்போது செல்லம் கொடுக்கும். இது ஈழத்தமிழர்களுக்கு மாறாத வலியாகவும் இருக்கும்.

மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் பௌத்த மயமாக்கலின் பின்னணியில், தமது லாப நட்டங்கள் கருதி வல்லாதிக்க நாடுகள் அமைதியாக இருக்கின்றமையும் பட்டவர்த்தனம். (சமகளம்)




**திரைப்படம் - ஜெயிலர்**
**நடிப்பு : ரஜினிகாந்த், ரம்யா கிருஷ்ணன், தமன்னா, வசந்த் ரவி, மிர்ணா, ஜாக்கி ஷெராப், விநாயகன், யோகிபாபு மேலும் பலர்**
**இயக்கம் : நெல்சன் திலிப்குமார்**
**இசை : அனிருத்**

ரஜினிகாந்த் படம் எப்படி இருக்க வேண்டும் என்று ரசிகர்கள் எதிர்பார்ப் பார்களோ அப்படி ஒரு படத்தைக் கொடுத்து ரசிகர்களை முழுமையாக திருப்திப்படுத்தியிருக்கிறார் இயக்குநர் நெல்சன். படத்தின் ஆரம்பம் முதல் கடைசி வரை ரஜினிகாந்த் வரும் ஒவ்வொரு காட்சியிலும் அவருடைய ஸ்டைலிஷ் ஆன நடிப்பைக் கொடுத்து அசத்தியிருக்கி றார்.

நெல்சன் இதற்கு முன் இயக்கிய அவரின் படங்களில் அவருக்கென ஒரு திரைக்கதை அமைப்பை உருவாக்கி இருந்தார். அந்த அமைப்பிலேயே ரஜினி கதாபாத்திரத்தையும் உருவாக்கி அதில் என்னவெல்லாம் விசயங்களை சேர்க்க வேண்டுமோ அதை சரியாகச் செய்திருக்கிறார்.

ரஜினிகாந்த் ஓர் ஓய்வு பெற்ற ஜெயிலர். அவருடைய மகன் வசந்த் ரவி, உதவி ஆணையாளர் சிலை கடத்தல் வழக்கு ஒன்றை விசாரணைக்கு எடுத்து அதில் தீவிரமாக இறங்குகிறார். சிலை கடத்தலை செய்யும் விநாயகம் ஆளான சரவணனை கைது செய்து விசாரிக்கிறார். இதனால் ஆத்திரமடை யும் விநாயகம் வசந்த் ரவியை கடத்தி விடுகிறார். ஆனால், வசந்த் ரவி கொலை செய்யப்பட்டு விட்டதாக காவல்துறை தரப்பு தெரிவிக்கிறது. ரஜினியின் குடும்பத்தினரையும் கொல்ல வில்லன் விநாயகம் முயற்சிக்கிறார். தன் மகனைக் கொன்றவர்களைப் பழிவாங்கி தனது குடும்பத்தினரை காப்பாற்றும் முயற்சியில் இறங்குகிறார் ரஜினி காந்த். இதன் பின் என்ன நடக்கி றது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்தின் ஆரம்பம் முதல் இடைவேளை வரை ரஜினி ரசிகர்களை மனதில் வைத்து காட்சிகளை உருவாக்கி இருக்கிறார் இயக்குநர் நெல்சன். நெல்சன் எண்ணங்களுக்கு தனது நடிப்பால் ரசிகர்களை காட்சிக்கு காட்சி அலப்பறை செய்ய வைக்கிறார் ரஜினிகாந்த். கடந்த சில படங்களாக ரஜினி ரசிகர்களை திருப்திப் படுத்தும் அளவுக்கு அவரின் படங்கள் அமையவில்லை. ஆனால், இந்தப் படத்தில் அந்தக் குறை எதுவும் இல்லை. இத்தனை வயதிலும் தன்னுடைய நடிப்பிலும், ஸ்டைலிலும் ரஜினி அப்படியே இருப்பது ரசிகர் களுக்கு ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி.

ஆரம்பத்தில் அப்பாவியான மனிதராக, பேரனுக்கு பயந்தவ ராக இருக்கிறார். மகனைக் காணவில்லை என்றதும் களத்தில் இறங்குகிறார். பின்வரும் காட்சிகள் கொஞ்ச நேரமே வந்தாலும் இளமை யான ரஜினிகாந்த் அதிரடி காட்டுகி றார். ரஜினியின் வயதுக்குரிய கதாபாத்திரம் அமைத்திருப் பது சிறப்பு.

மோகன்லால், சிவராஜ்குமார், ஜாக்கி ஷெ ராப் ஆகியோர் கேமியோ கதாபாத்திரங்களில் வந்தாலும் ரஜினியின் நண்பர்களாக சரியாக பயன்படுத்தப்பட்டு இருக்கி றார்கள்.

இடைவேளை வரை படத்தை கலகலப்பாகக் கொண்டு செல்பவர் யோகிபாபு. அவருக்கும் ரஜினிக்குமான காட்சிகள் எல்லாம் நெல்சன் ஸ்ரைல் நகைச்சுவை. இடைவேளைக்கு பின் தெலுங்கு நடிகர் சுனில் காட்சிகள் படத்துக்கு வேகத் தடை. அந்த தொய்வை உச்சக்கட் டத்தில் சரி செய்து விட்டார் நெல்சன்.

படத்தில் கதாநாயகி என்று யாரும் கிடை யாது. ஒரே ஒரு பாடலுக்கும் ஒரு சில காட்சிகளுக்கும் மட் டும் வந்து போகிறார் தமன்னா. ரம்யா கிருஷ்ணன், மிர்ணா, மாஸ்டர் ரித்விக் ஆகியோர் சில காட்சிகளில் மட்டுமே வந்து போகின்றனர்.

மலையாள நடிகர் விநாயகம் படத்தின் பிரதான வில்லன். கொலைகளை செய்வதில் கொடூரமாகவும் வில்லத்தனத்தில் மாறுபட்டும் தெரிகிறார்.

அனிருத் இசையில் காவலா பாடல் ஆட்டம் போட வைக்கிறது. மற்ற பாடல்கள் ஈர்க்கவில்லை. பின்னணி இசை ஓகே. ரஜினியின் நாயகத்தன வசனத்துக்கு தனி முக்கியத்துவம் கொடுத்து எழுதி இருக்கிறார் இயக்குநர் நெல்சன்.

இடைவேளை வரை கலகலப்பா கவும் உணர்ச்சிகரமாகவும் நகர்கிறது படம். இடைவேளைக்குப் பின் ஒரு சில காட்சிகள் சுவாரஸ்யம் இல்லாமல் நகர்ந்து பொறுமையை சோதிக்கிறது. போதைப்பொருள் கடத்தலில் இருந்து சிலை கடத்த லுக்கு மாறி இருக்கிறார் இயக்குநர் நெல்சன். உச்சக்காட்சியில் ரஜினிகாந்த் சுருட்டு பிடிக்கும் காட்சி கள் அமைந்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

ரஜினி பாணி படமாக ரசிகர்களை திருப்திப்படுத்துகிறது படம்.






# வசூலில் சாதனை

ரஜினிகாந்த் நடித் துள்ள 'ஜெயிலர்' படம் வெளி யான முதல் நாளில் இந்தியா முழுவதும் 52 கோடி இந்திய ரூபாயை வசூலித்துள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

இந்தப்படம் கடந்த வியாழக்கிழமை வெளியா னது. முதல் நாளில் இந்தியா முழுவதும் ரூ. 52 கோடி வசூலித்துள்ள தாக தகவல் வெளியாகியுள்ளது.

இதில் தமிழகத்தில் ரூ.23 கோடி, கர்நாடகாவில் ரூ.11 கோடி, ஆந் திரா மற்றும் தெலுங் கானாவில் ரூ.10 கோடி, கேரளாவில் ரூ. 5 கோடி, மற்ற மாநிலங் களில் ரூ. 3 கோடி இப்படம் வசூலித்துள்ளது. இதன் மூலம் 'பொன்னியின் செல்வன் 2' படத்தின் வசூலை (ரூ. 32 கோடி) 'ஜெயிலர்' முறியடித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரளாவில் 2023ஆம் ஆண்டு இதுவரை வெளியான படங்களில் 'ஜெயிலர்' அதி கம் வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# வருகிறது 'நா நா'




சலீம் பட இயக்கு நர் நிர்மல் குமார் இயக்கத்தில் சசி குமார், சரத்குமார் இணைந்து நடித் துள்ள படம் "நா நா". ஹர்ஷவர்தன் இசையமைத்து ள்ளார். 2019இல் அறிவிக்கப்பட்ட இந்த படம் சென்னை, மும்பை ஆகிய இடங்களில் படப்பிடிப்பு நடத்தப்பட்டது.

இப்படம் முழுவதும் முடிவடைந்தும் ஒரு சில காரணங்களால் கிடப்பில் போடப்பட்டது. சசிகுமார் நடித்து வெளிவந்த படங்களும் தொடர் தோல்விகளை சந்தித்து வந்தது. சமீபத்தில் வெளிவந்த அயோத்தி திரைப்படம் வெற்றிபெற்றது. இந்நிலையில் கிடப்பில் போடப்பட்டு கிடந்த நா நா படத்தின் முன்னோட்டம் நேற்று முன்தினம் வெளியானது. விரைவில் படம் வெளியாகவுள்ளது.

# எம்மீது மட்டும் பழி ஏன்?



ஆடுகளம் திரைப்படம் மூலமாக பிரபலமானவர் டாப்ஸி. தற்போது ஹிந்தியில் முன்னணி கதாநாயகியாக அவர் உள்ளார்.

அவர் அண்மையில், "நான் நடித்த சில தென்னிந்திய படங்கள் தோல்வி அடைந்தன. குறிப்பாக தெலுங்கு படங்களே தோல்வியடைந்தன. இதனால், எல்லோரும் என்னை விமர்சித்தனர்.

படம் வெற்றி பெறாமல் தோல்வி அடைந்தால் கதாநாயகிகள் மீது ஏன் குற்றம் சுமத்தவேண்டும். படங்களில் சில காட்சிகளிலும் பாடல் காட்சிகளிலும் மட்டுமே கதாநாயகி இருப்பார். அப்படி இருக்கும் போது தோல்விக்கு அவர்கள்தான் காரணம் என்று பழிசொல்வது என்று தவறு என் விசயத்தில் ஆரம்பத்தி லும் இதுதான் நடந்தது", என்று கூறியுள்ளார்.

# சிவாவுடன் மிருனாள்?




நடிகர் சிவகார்த்தி கேயன் இயக்குநர் முருகதாஸ் இயக்கத்தில் ஒரு படத்தில் நடிக்க வுள்ளார்.

இந்தப் படத்தில் அவருக்கு நாயகியாக நடிக்கவைக்க மிருனாள் தாகூரிடம் பேசி வரு கிறார்கள்.

மிருனாள் ஹிந்தியில் பிரபல நடிகையாக இருக்கிறார். துல்கர் சல்மானுடன் அவர் இணைந்து நடித்த சீதாராமம் திரைப்படம் அவருக்குப் பெரும் பெயரைப் பெற்றுக் கொடுத்தது.

# ஹொலிவூட்டில் அலியா



பொலிவூட்டின் முன் னணி நாயகிகளில் ஒரு வர் அலியா பட். இவர் அண்மையில் நடித்த ராக்கி அவுர் ராணி கி பிரேம் கஹானி படத் துக்காக பலராலும் பாராட்டப்பட்டார். தற்போது இவர் ஹொலிவூட்டிலும் அறிமுகமாகவுள்ளார்.

ரொம் ஹார்பெர் இயக்கும் ஹார்ட் ஒவ் ஸ்ரோன் என்ற அதிரடிப் படத்தில் அலியா பட் நடித்துக் கொண்டிருக்கி றார்.



# நாயகனானார் புகழ்

தொலைக்காட்சி நிகழ்ச்சி மூலம் பிரபலமானவர் புகழ். இவர் 'வலிமை', 'எதற்கும் துணிந்தவன்', 'டி.எஸ். பி', 'யானை', 'ஏஜெண்ட் கண்ணாயிரம்' உட்பட பல படங்களில் நகைச்சுவை வேடங்களில் நடித்துள்ளார்.

தற்போது 'துடிக்கிறது மீசை' என்ற படம் மூலம் கதாநாயகனாகி உள்ளார். இதில் வர்ஷினி, அக்ஷதா ஆகியோர் நாயகிகளாக நடிக்கின்றனர். முருகதாஸ், மாறன், யோகிதா ஆகியோரும் முக்கிய கதாபாத்திரங் களில் நடிக்கிறார்கள். இந்த படத்தை எம். ஜே. இளன் இயக்குகிறார்.

# வசூல் ராஜாக்கள்!

இன்ஸ்ட்ராகிராம் சமூக வலைதளம் மூலம் அதிக வருமானம் ஈட்டும் விளையாட்டுப் பிரபலங்களில் மூன்றாவது நபராக விராட் கோலி உள்ளார். முதல் இரண்டு இடங்களில் உதைபந்தாட்ட வீரர்கள் ரொனால்டோ மற்றும் மெஸ்ஸி ஆகியோர் உள்ளனர். இந்த தகவலை ஹொப்பர் எச். க்யூ எனும் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

புகைப்படம் மற்றும் காணொலிகளை பகிர்வு செய்ய பயன்பட்டு வருகிறது சமூக வலைதளமான இன்ஸ்ட்ராகிராம். இது மெட்டா நிறுவனத்தின் வசம் உள்ளது. இதில் பிரபலங்கள் தொடங்கி சாமானியர்கள் வரையில் பலரும் பயனர்களாக உள்ளனர். இவர்களில் அதிக பின்தொடர்வோரை பெற்றவராக உள்ளார் போர்த்துக்கல் நாட்டைச் சேர்ந்த ரொனால்டோ. சுமார் 59,68,48,846 பேர் அவரை இந்த தளத்தில் பின்தொடர்கின்றனர்.

ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த மெஸ்ஸியை 47,92,68,484 பேர் இன்ஸ்டாவில் பின்தொடர்ந்து வருகின்றனர். கோலியை, 25,52,69,526 பேர் பின்தொடர்ந்து வருகின்றனர். பிரபலங்கள் அனைவரும் இன்ஸ்ட்ராகிராம் தளத்தில் தாங்கள் பகிரும் சில பதிவுகளுக்கு அனுசரணை பெறுவது உண்டு. அதன் மூலம் அவர்களுக்கு வருமானமும் கிடைக்கும். அந்த வகையில் இன்ஸ்ட்ரா மூலம் அதிக வருமானம் ஈட்டும் பிரபலங்கள் குறித்த விவரம் வெளியாகி உள்ளது.

இதில் விளையாட்டுப் பிரபலங்களில் முதல் மூன்று இடங்களில் ரொனால்டோ, மெஸ்ஸி மற்றும் கோலி உள்ளனர். ரொனால்டோ, ஒரு பதிவுக்கு சுமார் 120.42 கோடி இலங்கை ரூபாய் ஈட்டுகிறார். மெஸ்ஸி 96. 70 கோடி ரூபாய் ஈட்டுகிறார். கோலி, ஒரு பதிவுக்கு ரூ. 51.52 கோடி ரூபாய் ஈட்டுகிறார்.




# முதன் முதலாக...!




பல நாடுகளில் ஹிஜாப் என்பது பெரும் சர்ச்சைக்குரிய விசயமாகவே இருந்து வருகிறது.

கல்வி வளாகங்கள், வேலை செய்யும் நிறுவனங்கள், விளையாட்டு உள்ளிட்ட இடங்களில் இஸ்லாமியப் பெண்கள் ஹிஜாப் அணிவது என்பது பெரும் விவாதங்களையும், சர்ச்சைகளையும் ஏற்படுத்திய வண்ணம் இருக்கின்றன.

குறிப்பாக, விளையாடும்போது வீராங்கனைகள் ஹிஜாப் அணியக்கூடாது. அது அசௌகரியமானது என்று உலகெங்கிலும் பல நாடுகளின் விளையாட்டுத்துறை அமைப்புகள் ஹிஜாப் அணிவதற்கு அனுமதி மறுத்துள்ளன.

அந்த வகையில், உலக உதைபந்தாட்டக் கூட்டமைப்பான “பிபா“வும் 2007ஆம் ஆண்டு முதல், ”விளையாட்டு வீரர்கள் மைதானத்தில் விளையாடும்போது தங்களுக்கோ அல்லது பிறருக்கோ காயம் ஏற்படுத்தும் வகையில் எந்தவொரு உடைகளையும் அணிகலன்களையும் அணியக்கூடாது. அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது அனுமதியளிக்கப்பட்டுள்ள உடைகளையும், உபகரணங்களை மட்டுமே அணிய வேண்டும்” என்று கூறி ஹிஜாப் அணிவதற்குத் தடை விதித்திருந்தது.

பிபாவின் இந்த ஹிஜாப் தடை இஸ்லாமியர்களின் உரிமையைப் பறிப்பதாகவும் இஸ்லாமியப் பெண்கள் உதைபந்தாட்டப் போட்டிகளில் விளையாடும் வாய்ப்பை மறுப்பதாகவும் பெரும் எதிர்ப்புகளும் போராட்டங்களும் எழுந்தன. இதையடுத்து 2014ஆம் ஆண்டு இந்தத் தடை நீக்கப்பட்டது.

இந்நிலையில் தற்போது நடைபெற்று வரும் “2023 பிபா பெண்கள் உலகக் கிண்ண“ தொடரில் கடந்த ஜூலை 24ஆம் திகதி ஜெர்மனிக்கு எதிரான போட்டியில் மொராக்கோ அணியைச் சேர்ந்த உதைபந்தாட்ட வீராங்கனையான “நௌஹைலா பென்சினா” ஹிஜாப் அணிந்து களத்தில் இறங்குவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அப்போட்டியில் அவர் களமிறங்கவில்லை. இதையடுத்து கடந்த ஜூலை 30ஆம் திகதி தென் கொரியாவுக்கு எதிரான போட்டியில் ஹிஜாப் அணிந்து களத்தில் விளையாடினார்.

இதன்மூலம், பிபா உதைபந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில் ஹிஜாப் அணிந்து விளையாடும் முதல் வீராங்கனையானார் 25 வயதாகும் நௌஹைலா பென்சினா.

# மீண்டும் வருவேன்

ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வரும் செப்ரெம் பர் 23ஆம் திகதி தொடங்கி ஒக்ரோபர் 8ஆம் திகதி வரை சீனாவின் ஹாங்சோவ் நகரில் நடைபெற இருக்கிறது.

இதில் பங்கேற்கும் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களின் பட்டியலை சமீபத்தில் அந்தக் கிரிக்கெட் நிர்வாகம் வெளியிட்டிருந்தது. அந்தப் பட்டியலில் ஷிகர் தவானின் பெயர் இடம் பெறும் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் பெயர் இந்திய அணியில் இடம்பெறவில்லை. மௌனம் காத்து வந்த ஷிகர் தவான் தற்போது இதுகுறித்துப் பேசியிருக்கிறார்.

“ஆசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்திய அணியில் என்னுடைய பெயர் இல்லாததைப் பார்த்து நான் முதலில் அதிர்ச்சி அடைந்தேன். பிறகு அவர்கள் வேறேதும் திட்டங்கள் வைத்திருக்கலாம் என்று நினைத்தேன். ருதுராஜ் அணியை வழிநடத்துவது மகிழ்ச்சியாக இருக்கிறது. அணியில் இளம்வீரர்கள் இருக்கின்றனர். அவர்கள் சிறப்பாக செயல்படுவார்கள் என்று நினைக்கிறேன். நிச்சயம் இந்திய அணிக்குள் மீண்டும் வருவேன்.

அந்த நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மீண்டும் வருவதற்கான வாய்ப்பு ஒரு சதவிகிதமோ அல்லது 20 சதவீதமோ தெரியவில்லை ஆனால் வாய்ப்பு இருக்கிறது. நான் விளையாட்டை ரசிக்கிறேன். பயிற்சியை விடாமல் தொடர்ந்து செய்து வருகிறேன். எந்த முடிவுகள் எடுக்கப்பட்டாலும் நான் அதை மதிப்பேன்” என்று தெரிவித்திருக்கிறார்.




# இவர்களுக்கே வாய்ப்பு



இதுவரை இந்தியாவில் 1987, 1996, மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் ஐ. சி. சி. 50 ஓவர் உலகக் கிண்ணத் தொடர் நடைபெற்று இருக்கிறது.

அதில் 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றி வரலாறு படைத்தது. அதன் பிறகு நடத்த எந்தவோர் ஐ. சி. சி. 50 ஓவர் உலகக்கிண்ணப் போட்டியிலும் இந்திய அணி கிண்ணத்தைக் கைப்பற்றவில்லை. இதனால் இந்த ஆண்டு சொந்த மண்ணில் நடக்கும் இந்த உலகக்கிண்ணத்தை வென்றுவிட வேண்டும் என்று அந்த அணி முனைப்பு காட்டி வருகிறது. ஒக்ரோபர் 5ஆம் திகதி தொடங்கி நவம்பர் 19ஆம் திகதி வரை போட்டிகள் நடைபெறவுள்ளது.

இலங்கை, இந்தியா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல நாட்டு அணிகள் பங்கேற்க உள்ள இந்தத் தொடரில் எந்தெந்த அணிகள் அரையிறுதி போட்டிக்கு முன்னேறும், கிண்ணத்தை வெல்லப்போவது யார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடையே எழுந்துள்ளது. முன்னாள் கிரிக்கெட் வீரர்களும், விமர்சகர்களும் தங்களது கணிப்புகளைக் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் இந்திய அணியின் முன்னாள் வீரரான வீரேந்திர சேவாக் இந்த உலகக் கிண்ணத் தொடரில் எந்த நான்கு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும் என்று தனது கணிப்பைத் தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து பேசிய வீரேந்திர சேவாக், “என்னைப் பொறுத்தவரை இந்த முறை நிச்சயம் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகள்தான் அரையிறுதி போட்டிக்குத் தகுதி பெறும். அதிலும் குறிப்பாக அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் சிறப்பாக உள்ளன. காரணம் அவர்கள் வழக்கத்துக்கு மாறான ஷொட்களையும், தனித்துவமாகவும் விளையாடுகின்றனர்” என்று தெரிவித்திருக்கிறார்.

## வடக்கு – கிழக்கு மக்கள்

# 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையான தீர்வாக ஒருபோதும் கருதவில்லை !



அலசுவது இராஜதந்திரி

இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் குறித்து ஜனாதிபதி தமது பாராளுமன்ற உரையில் நேற்று முன்தினம் விலாவாரியாக குறிப் பிட்டிருந்தார். அவரது உரையின் மூலம் தென்னிலங்கை அரசியல் தரப்பில் நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக இருக்கின்ற போதிலும் தென்னிலங்கையின் தீவிரவாத அரசியல்வாதிகளிடமிருந்து அவர் எதிர் நோக்குகின்ற சவால்களையே நன்கறிய முடிந்திருந்தது.

13ஆவது திருத்தச்சட்டம் 1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அதன் அமுலாக்கம் தொடர்பில் ஆரம்பத்திலேயே பல சவால்களுக்கு அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன முகங்கொடுத்திருந்தார்.

இதேவேளை, 13ஆவது திருத்தச்சட்டம் அரசியல் ரீதியாக ஒரு முழுமையான தீர்வைக் கொண்டுவராவிட்டாலும் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான ஒரு பரந்துபட்ட அரசியல் தீர்வுக்குரிய முதற்படி என்று குறிப்பிடுமளவுக்கு இருப்பதையே அவதானிக்க முடிகின்றது. அத்துடன் ஏற்கனவே ஒரு குறிப்பிட்ட காலம் 13ஆவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபையும் இயங்கியிருந்தது.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அழுத்தம் காரணமாக முதலாவதாக செயல்பட்ட மாகாண சபை வலுவிழந்திருந்தது.



இத்தகைய பின்னணியில் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான இரு வேறு மாகாண சபைகள் கடந்த காலங்களில் இயங்கிய போதிலும் தற்சமயம் இந்த இரு மாகாணங்களுக்குமான மாகாண சபைகள் வலுவற்றவையாகவே இருக்கின்றன.

இந்நிலையில் மீளவும் வடக்கு - கிழக்கில் ஓர் அரசியல் ரீதியான நிர்வாகம் ஏற்படுவதற்கு 13ஆவது திருத்தச்சட்டம் இன்றியமையாதிருப்பதையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பாராளுமன்ற உரை சுட்டிக்காட்டியிருந்தது.

தென்னிலங்கை மக்களுக்கு 13ஆவது திருத்தச்சட்டத்தின் இன்றியமையாமையை ஜனாதிபதி எடுத்துக்கூறியிருக்கலாம். ஆனால் மறுபுறத்தே 13ஆவது திருத்தச்சட்டம் எவ்வகையிலும் ஒரு முழுமையான அரசியல் தீர்வல்ல என் பதே வடக்கு - கிழக்கு மக்களின் நிலைப் பாடாகும்.

பொலிஸ், காணி அதிகாரங்கள் என்பவற்றை வழங்குவது தொடர்பிலும் ஒரு தளம்பலான போக்கே காணப்படு கின்றது. எனவே வடக்கு - கிழக்கு தமிழர்களும் 13ஆவது திருத்தச்சட்டத்தை ஒரு முற்று முழுதான தீர்வாக ஏற்பார்கள் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இதேவேளை இலங்கையின் வடக்கு- கிழக்கு விவகாரம் தொடர்பாக தனது அவதானத்தை வெளியிட்டுவரும் இந்தியா 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுலாக்குவதன் மூலமே வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வை எட்டுவதற்கு அடித்தளமிடமுடியும் என்று எதிர்பார்க்கின்றது.

எனவே இந்தியா மட்டுமல்ல. சர்வதேச சமூகமும் 13ஆவது திருத்தச்சட்டத்தின் மூலமாகவே வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்ற அபிப்பிராயத்தை கொண்டுள்ள நிலையிலேயே 13ஆவது திருத்தச்சட்டம் அமுலாக்கப்படுவது அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை பொருளாதார ரீதியாக பல இடர்பாடுகளை சந்தித்துள்ளது. அரசியல் ரீதியான ஒரு உறுதிப்பாடே பொரு ளாதார உறுதிப்பாட்டுக்கு அத்திபார மிட முடியும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை தற்போது பொருளாதார உறுதிப்பாடும் காணப்படவில்லை. அரசியல் ரீதியான உறுதிப்பாடும் காணப்படவில்லை.

அத்துடன் தென்னிலங்கை சிங்கள-பௌத்த பேரினவாதம் மீளவும் தலை யெடுக்க ஆரம்பித்துள்ளதுடன் வடக்கி லும் அதன் தாக்கம் பிரதிபலிக்க ஆரம் பித்துள்ளது.

வடக்கு - கிழக்கில் சிங்கள-பௌத்த தீவிரவாதம் மீளவும் அதன் நச்சுத்தன்மையை வெளியேற்ற ஆரம்பித்தால் வேதாளம் மீண்டும் முருங்கையில் ஏறக் கூடிய சூழ்நிலைகளே பலமடையும் என்று எதிர்பார்க்கலாம்.

இத்தகைய அசாதாரண நிலைமை ஏற்படுவதிலிருந்தும் விலகி நாட்டை அமைதி வழியில் கொண்டு செல்வதற்குரிய ஓர் மிதவையாகவே 13ஆவது திருத்தச்சட்டம் இருக்கின்றது. இது குறித்து தென்னிலங்கை மக்கள் மேலும் விரிவான புரிந்துணர்வை கொண்டிருக்க வேண்டியவர்களாகின்றனர். 13ஆவது திருத்தச்சட்ட அமுலாக்கம் மற்றும் நாட்டின் பொருளாதார உறுதிப்பாடு என்பவற்றை மேற்கொள்ளக்கூடிய அரசியல் பக்குவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளதென ஒரு புறம் வடக்கு - கிழக்கு மக்களும் மறுபுறத்தே தென்னிலங்கை மக்களும் கருதுகின்றனர். இதன் வெளிப்பாடாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் பாராளுமன்றில் நிகழ்த்திய உரை விளங்கியிருந்தது.

இருந்தபோதிலும் ஜனாதிபதி ரணிலினால் தமது நிப்பாடு தொடர்பாக நாட்டு மக்களின் பரந்து பட்ட ஆதரவை பெறமுடியும் என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

---



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

## வியுக்தியார் பதில்கள்

**குணம் சுதர்சன், எமில்நகர், மன்னார்.**

**கேள்வி:** இராவணன் தமிழனா சிங்களவனா என்று பாராளுமன்றத்தில் புதிய விவாதத்தை தொடக்கி வைத்திருக்கின்றனரே. இப்போதாவது பாராளுமன்றம் ஒரு நல்ல விசயத்தை விவாதமாக்கியிருக்கின்றது என்று சொல்லலாமா?

**வியுக்தியார்:** இலங்கை சிங்களவருடைய நாடு என்று சொல்லிக்கொண்டிருக்கும் சிங்கள பெரும்பான்மையினர், இராவணன் என்ற மன்னன் இலங்கையில் வாழ்ந்ததை மகாவம்சம் சொல்லவில்லை என்ற கவலையில் இருந்தவர்கள். மகாவம்சம் சொல்லாத இராவணன் இலங்கையில் வாழவில்லை என்று சொல்லமுடியாது அல்லவா. அதனால் அவனையும் சிங்களவன் ஆக்கிவிட்டால் போதும் என்று நினைத்துத்தான், இராவண பலவய என்ற தீவிர சிங்கள கடும்கோட்பாட்டு அமைப்பு ஒன்றை பல வருடங்களாக நடத்தி வருகின்றார்கள். கதிர்காமத்தில் முருகனையும் தங்கள் கடவுளாக்கியவர்களுக்கு இது எல்லாம் ஒரு பொருட்டே அல்ல. இனி என்ன இராவணேஸ்வரன் என்ற பெயர் இராவணேச என்று மாற்றுவார்களோ என்னவோ?

---

**இரா.கேசவன், எல்லை வீதி, மட்டக்களப்பு.**

**கேள்வி:** பதின்மூன்று தீர்வுக்கான ஆரம்பப்புள்ளியுமல்ல, தீர்வு மல்ல. தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஷ்டியே இனப்பிரச்னையை தீர்க்க ஒரேவழியாகும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளதே.

**வியுக்தியார்:** நோர்வே அனுசரணையில் நடந்த பேச்சுவார்த்தையைத் தொடந்து நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் வெளியிடப்பட்ட பிரகடனத்தில் சமஷ்டியை வழங்க இலங்கை அரசாங்கம் முன்வந்தபோது அதனை புலிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரை ஒரு கூட்டத்தில் வைத்து 'அவரே இப்போது தேசியத் தலைவர்" என்று அவர்களின் கட்சிக்காரர் ஒருவர் பேசியது ஞாபகம். ஆக, அவர்களும் சமஷ்டியையும் ஏற்றுக்கொள்கிறார்களோ தெரியவில்லை. ஆனால் தமிழ் ஈழம்தான் தீர்வு என்று சொன்னால் பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தபோது பிரிவினைக்கு ஆதரவாக செயற்படமாட்டேன் என்று செய்துகொடுத்த சத்தியத்தை மீறுவதாக போய்விடுமே என்பதற்காகத்தான் அவர்கள் சமஷ்டி என்று கூறுகின்றார்கள் என்றுதான் நினைக்கின்றேன்.

---

**இ. அஜந்தன் மண்கும்பான், வேலணை.**

**கேள்வி:** "அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் மற்றும் அதிகாரப் பகிர்வின் அவசியம் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய விசேட உரையை முழுமையாகக் கேட்டேன். ஆனால், அவரின் உரை தொடர்பில் அவசரப்பட்டு பதிலளிக்க விரும்பவில்லை. உரிய நேரத்தில் பதில் வழங்குவேன்." என்று தமிழ் அரசின் பெரும்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கிறாரே. அது என்ன உரிய நேரம் என்று உங்களுக்கு புரிகிறதா?

**வியுக்தியார்:** ரணிலின் அந்தப் பேச்சை அவர் கேட்டிருந்தாலும், அதுபற்றி அவரது கட்சியின் பேச்சாளர் என்ன நினைக்கிறார் என்று அறிவதற்கு முதலில் அவரிடம் யாரோ கருத்துக் கேட்டிருக்கிறார்கள் போலும். அவர் எதையாவது சொல்லப்போக, பின்னர் கட்சியின் பேச்சாளர் வேறு எதையாவது சொல்லிவிட்டால் வீண் பிரச்சினை ஆகிவிடுமே என்று சம்பந்தன் ஐயா நினைத்தாரோ தெரியவில்லை. அது தொடர்பாக அவரது அறிக்கை வந்த பின்னர் சொல்கிறேன் அது என்ன உரிய நேரம் என்று.

---

**பி.துசியந்தன் கோவில் வீதி, நல்லூர்.**

**கேள்வி:** 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப் படுத்தக்கூடாது என்றும், இது நாட்டைப் பிளவு படுத்தும் நடவடிக்கை என்பதால், இந்தச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்றும் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனரே.

**வியுக்தியார்:** ஒரு விடயத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது இதுவரை காலமும் கடந்த முப்பத்தியேழு வருடங்களாக பதின்மூன்றின் கீழ் இயங்கிய மாகாணசபைகள் முழுமையாக இயங்கவில்லை என்பதை சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தினால், நாடு பிளவடையும் என்றால், நாடு ஒன்பதாக அல்லவா பிளவடையும்?. எங்கள் தலைவர்கள் தமிழ்ஈழம் கேட்டபோது (புலி களை சொல்லவில்லை) ஈழம் கிடைக்காது என்பது தெரியும், ஆனால் அப்படிக் கேட்டால்தான் சமஷ்டியோ அல்லது மாகாண ஆட்சியோ கிடைக்கும் என்று நம்பிக்கொண்டு தமிழ் ஈழம் கேட்டதுபோலத்தான், 13ஐ முழுமையாக நீக்கவேண்டும் என்று கேட்டால்தான் அதிலிருந்து பலவற்றை நீக்கலாம் என்று மகாநாயக்கர் கள் நினைக்கிறார்கள் போலும்.

---

**எம். விபூசன், காரைதீவு, அம்பாறை.**

**கேள்வி:** தமிழர்கள் தனித்து செல்ல விரும்புகிறார்களா, சமஷ்டி அடிப்படையில் வாழ விரும்புகிறார்களா என்பதை அறிய வடக்கு-கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள் மற்றும் கொழும்பில் வாழும் தமிழர்களிடம் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த நீங்கள் தயாரா என யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் ஜனாதிபதியிடம் நேரில் சவால் விடுத்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** இதுவரை காலமும் நாம் தனிநாடு கேட்பது வடக்கு கிழக்கை இணைத்த பகுதியைத்தான் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்போதுதான், அது மலையம் கொழும்பையும் சேர்த்தது என்பது தெரிந்தது. நல்லவேளை முதலில் கொழும்பில் போட்டியிட்டு நீங்கள் பாராளுமன்றம் வாருங்கள் என்று ரணில் சவால் விடுக்கவில்லை.

# மனிதம்



கே.எஸ்.சுதாகர்

காற்று அனலாக வீசிக் கொண்டிருந்தது. புழுதியை வாரி வேப்பமரங்களில் இறைத்துவிட்டு, பெருவெளியெங்கும் ஓடி வீதிக்கு விரைந்தது. நெடுஞ்சாலையில் ஒன்றிரண்டு வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன. நேரம் மதியம் தாண்டி இரண்டை எட்டிப்பிடிக்கிறது.

இன்னும் எவ்வளவோ வேலைகள் இருக்கு. இப்படியே படுத்திருந்தால்?" மனைவி வயிற்றைப் பிடித்துக்கொண்டு எட்டிப் பார்த்தாள்.

இன்னும் பத்து நாட்களில் நியூசிலாந்து நாட்டுக்குப் புறப்படவேண்டும். இந்தப் புலம் பெயர்வு விரும்பி ஏற்றுக்கொண்டதல்ல. என்னுடைய நண்பர்களில் பலர் முன்னதாகவே, இலங்கையை விட்டுப் புறப்பட்டு பல்வேறு நாடுகளுக்கும் சிதறுண்டு போய் விட்டார்கள். நாட்டு நிலைமைகள் மிகவும் மோசமடையவே நானும் புறப்படுவதற்கு ஆயத்தமானேன். இதுவரை சொந்த நாட்டுக் குள்ளேயே நான்கு இடங்கள் இடம்பெயர்ந்து விட்டேன். வடபகுதிக்குள் இரண்டு இடங்கள், பின்னர் தலைநகரம் கொழும்பு, இப்போ இறுதியாக வன்னி.

எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டு விட்டன. மனைவி ஏழு மாதக் கர்ப்பிணி. முதலாவது பிரசவம். இனியும் தாமதித்தால் அவரை விமானத்தில் ஏற்ற மாட்டார்கள். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் பின்னடைவையே தரும்.

வீட்டு முகப்பில் சைக்கிள் பெல் சத்தம் கேட்கின்றது. மனைவி ஜன்னலிற்குள்ளால் எட்டிப் பார்த்துவிட்டு, “யோகன் வந்திருக்கின்றான்” என்றார். பாயைச் சுருட்டி வைத்து விட்டு வெளியே வருகின்றேன்.

“சார்... உங்களைத் தேடி பாங்கில் வேலை செய்யும் தேவலிங்கம் எண்டவர் வந்திட்டுப் போனார். அவசரமா சந்திக்க வேணுமாம்.”

“சரி... ஒஃபிஸ் வரேக்கை சந்திச்சுட்டு வாறன்.”

யாராக இருக்கும்? மனம் கணக்குப் போடுகின்றது. தினம் தினம் வேலை விஷயமாகப் பலரும் வந்து போகின்றார்கள்.

வேலைக்கான உடுப்புகளை அணிந்து கொள்கின்றேன். ஹோலிற்குள் வீட்டுச் சாமான்கள் அடுக்கிவைக்கப்பட்ட பெட்டிகள் காலிற்குள் இடறுபடுகின்றன. வாடகை வீட்டில் இருக்கின்றபடியால் பொருட்கள் குறைவு. பெரிய பொருட்களை வீட்டுச் சொந்தக் காரருக்கே குடுத்து விடுவதெனத் தீர்மானித்திருந்தோம்.

“நாளைக்குப் பின்நேரம் ஐஞ்சரைக்கு கொழும்பு றெயின். கடைசி வரைக்கும் ஒண்டையும் வைச்சிராதையுங்கோ! வரேக்கை இரவுச் சாப்பாட்டையும் வாங்கியாங்கோ” சைக்கிள் ஏறும்போது மனைவி எச்சரித்தாள்.

வேலை எட்டு மணித்தியாலங்கள் என்ற போதும், ஒருபோதும் சரியான நேரத்திற்கு வீட்டிற்கு வரமுடிவதில்லை. சிலவேளைகளில் இரவு எட்டுமணிகூட ஆகும். அதனால், வீட்டிற்கு வந்து, மதியம் சாப்பிட்டு, சிறிது உறங்கிப் போவதை வழமையாக்கிக் கொண்டேன்.

எமது டிப்போ நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான இயந்திரங்களையும் உபகரணங் களையும் வாடகைக்குக் கொடுப்பதாகும். அவற்றை இயக்கும் தொழிலாளர்களையும் வாகனங்களுடன் அனுப்பி வைப்போம். பெரிய ஹெவி ரக், டோசர்,லோடர், டிராக்டர் கள், ரோலர்கள். தண்ணீர் வழங்கும் பவுசர்கள், கல்லுடைக்கும் மெஷின் போன்றவை காணிக்குள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காட்சியே அழகு தான். முப்பதுக்கும் மேற்பட்ட வன்னியைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலை செய்கின்றார்கள். நாட்டில் இதைப்போன்று ஐம்பது டிப்போக்கள் இருக்கின்றன. தவிர வாகனங்களையும் உபகரணங்களையும் பழுதுபார்க்கவும், சேவிஸ் செய்யவும் என மூன்று மெயின்ரனன்ஸ் டிப்போக்கள். தலைமை அலுவலகம் கொழும்பில் இருந்தது.

வவனியா டிப்போ ஆரம்பிக்கும் போது ஜனா, காசிநாதன் என்று என்னுடன் மூன்று பொறியியலாளர்கள் வேலை செய்தனர்.

நாதன்... காசிநாதன்... பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்தவன். ஜனா சீனியர். ஜனா தற்போது கொழும்பில், கொலன்னாவ என்னும் இடத்திலுள்ள மெயின்ரனன்ஸ் டிப்போ வில் வேலை செய்கின்றார். ஜனா இல்லாதது எனது வலதுகரம் முறிந்தது மாதிரி.

நாதனைப் பற்றி ஒரு சொல்லில் சொல்வதென்றாலும் பல பெயர்கள் தேவைப்படும். சகுனி, எட்டப்பன், திருகுதாளி,போக்கிரி இன்னும் என்னவெல்லாம்... என் தோளை ஒரு கை அணைத்திருக்கையில், முதுகின் பின்னாலே மறுகையில் கத்தி நீண்டிருக்கும். அவன் வவனியா வாசி. நான் யாழ்ப்பாணத்தான். வன்னியில் பிறந்து வளர்ந்ததை ஒரு காரணமாக வைத்துக் கொண்டு, “இவன் யாழ்ப்பாணத் தான். எப்படி வன்னியில் வந்து வேலை செய்யலாம்?” என தொழிலாளர்களுக்கு என்னைப் பற்றி நஞ்சை விதைப்பவன்.

“நீங்கள் எல்லோரும் நான் சொல்வதைக் கேட்டு நடந்தால், உங்களுக்கு நன்மைகள் காத்திருக்கும்” என்று சொல்லி தொழிலாளர் களைத் தன் பக்கம் ஈர்த்து வைத்திருந்தான். அவர்களும் மந்திரித்து விடப்பட்டவர்கள் போலத் திரிந்தார்கள். வாகனங்களைக் கூடிய நேரத்திற்கு வாடகைக்குக் கொடுத்துவிட்டு, நேரத்தைக் குறைவாகப் பதிவேட்டில் பதிவு செய்வான். காசை வாங்கிப் பொக்கற்றுக்குள் போட்டுக் கொள்வான். சமூக அக்கறை என்பது துளிகூடக் கிடையாது. இருப்பினும் என்னுடன் ஒரு போதும் நேரிடையாகச் சண்டை போட்டதில்லை.

வங்கிக்கு முன்னால் சைக்கிளை நிப்பாட்டினேன்.

செக்கியூரிட்டியிடம் தேவலிங்கத்தைச் சந்திப்பதற்காக வந்திருக்கின்றேன் என்ற தகவலைத் தெரிவித்தேன். உதவி மானேஜரான தேவலிங்கம் சில நிமிடங்களில் வந்து என்னை உள்ளே கூட்டிச் சென்றார். எதிரே இருந்த ஆசனத்தில் அமரச் சொன்னார்.

“ஒரு துக்ககரமான செய்தி. மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள்” சொல்லியபடி என் முகத்தைப் பார்த்தார்.

“உங்கள் அம்மா இரண்டுகிழமைகளுக்கு முன்பதாக இறந்துவிட்டார்.”

நெஞ்சு திக்கென்றது.

“உங்கள் அண்ணா கொழும்பிலிருந்து தொலைபேசியில் சொன்னார். இருங்கள் அண்ணாவுடன் கதைப்பதற்கு செல்போன் எடுத்துத் தருகின்றேன்.”

மனம் பதைபதைத்தது. இது எப்படி? அம்மா நலமாகத்தானே இருந்தார்!

“இரண்டு மூண்டு தரம் ஒஃபிஷிற்கு ரெலி போன் எடுத்தன். ஒருத்தரும் எடுக்கேல்லை” மறுமுனையில் அண்ணா. அவர் இலங்கை வங்கி கொழும்புக் கிளையில் வேலை செய்கின்றார். ரெலிபோன் லைன் வேலை செய்யத் தொடங்கியதும், தேவலிங்கம் அறைக்கு வெளியே போய்விட்டார்.

“லஞ் எண்டபடியாலை ஒருத்தரும் நிக்கேல்லைப் போல கிடக்கு.”

“அம்மா இரண்டுகிழமைக்கு முதல் இறந்துவிட்டா. செத்தவீடு எல்லாம் முடிஞ்சு தாம். எப்பிடி இறந்தா, ஆர் கொள்ளி வைச்சது ஒண்டும் தெரியேல்லை. நாட்டுநிலைமைகள் படு மோசமா இருக்கிறதாலை, இண்டைக்குத் தான் செய்தி வந்தது. நீ எப்ப கொழும்பு வாறாய்?”

“என்ன செய்கிறது எண்டு தெரியேல்லை. யாழ்ப்பாணம் போய்வரலாம் எண்டு நினைக்கிறேன்.”

“உனக்கென்ன விசரே! இப்ப இருக்கிற நிலையிலை நீ என்னண்டு யாழ்ப்பாணம் போக முடியும்? கடல் வழியா போனாலும் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. போனாலும் உடனை திரும்பி வர முடியாது. பிறகு உன்ரை வெளிநாட்டுப் பயணம் எல்லாம் தடங்கலாகிவிடும். நீ உடன டியா வெளிக்கிட்டு கொழும்பு வா.”

அண்ணா சொன்னதைத்தான் வங்கியில் வேலை செய்த அனைவரும் சொன்னார்கள்.

ஒருவருடத்திற்கு முன்பதாக யாழ்ப்பாணம் சென்று, உறவுகளைச் சந்தித்துவிட்டு வந்திருந்தேன். கிளாலிக் கடலேரியை ஊடறுத்து, மரணத்தை எதிர்கொண்டு சென்று வந்த பயணம் அது. அந்தப் பயணத்தின்போது கூட ஒரு தத்துக் கழிந்திருந்தது. படகுக்கு ஏறுவதற் காக பற்றைகளுக்குள் பதுங்கியிருந்தபோது, சகடை ஒன்று வந்து போட்ட குண்டுகள் எமக்கு அருகே விழுந்து சிதறிப் பாய்ந்தன. நான் ஒரு திக்கிலும் மனைவி ஒரு திக்கிலுமாகத் தூக்கி எறியப்பட்டோம்.

“வெளிநாடு போற எண்ணத்தைக் கைவிடு. நான் இறந்துபோய்விட்டால் எனக்கு யார் கொள்ளி வைப்பது?” அம்மா தனக்குள் முணு முணுத்தார். கேட்காதது போல இருந்து கொண்டேன். விடை பெறும்போது, “அம்மா ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். நாட்டு நிலைமைகள் இப்படியே தொடர்ந்து இருக்கப் போவதில்லை. தீர்வு ஒன்று வந்துவிடும்” என்று சொல்லி வைத்தேன்.

வங்கியை விட்டுக் கிளம்பி, டிப்போவை நோக்கிப் புறப்பட்டேன். செக்யூரிட்டி கூண்டைச் சுற்றி தொழிலாளர்கள் நின்றார்கள். என்னைக் கண்டதும் சூழ்ந்து கொண்டார்கள். கவலை தெரிவித்தார்கள். நாதனிற்கு ஏற்கனவே செய்தி எட்டியிருந்தது. ஒஃபிஷிற்குள் அவனும் நிர்வாக உதவியாளர்களும் வேலையில் மும்மரமாகியிருந்தார்கள். இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

“நியூசிலாந்துக்குப் போனால் பிறகு உடனை இலங்கைக்குத் திரும்பி வர வாய்ப்பு இருக்காது.ஊருக்குப் போய் உறவினரைச் சந்தித்துவிட்டுப் போவது தான் நல்லது” என்றான் நாதன்.

“நான் குழம்பிப் போய் இருக்கின்றேன். ஊரில் அப்பா அக்கா அண்ணா எல்லாரும் இருக்கின்றார்கள் தான். ஆனால் எப்படிப் போவது? போனாலும் உடனடியாகத் திரும்பி வாறதுக்கு சாத்தியம் இல்லை.”

சிறிது நேரம் உரையாடிவிட்டு, “இண்டைக் குத்தான் கடைசி. நாளைக்கு வர மாட்டேன். அனேகமாக எல்லாம் சரி என்று நினைக்கின்றேன்” சொல்லிவிட்டு எனது கொம்பனி வாகனத்தின் சாரதி பாலகுமாரைக் கூப்பிட்டேன்.

“பாலகுமார்... நீ நாளைக் காலை வீட்டுக்கு வந்து, வீட்டில் இருக்கும் பொருட்களை வாகனத்திற்குள் ஏற்றிக் கொண்டு இரவே கொழும்பிற்குப் புறப்பட்டுவிடு. நாளை மறுநாள் கொழும்பில் சந்திப்போம். இதில் ஏதாவது மாற்றங்கள் இருந்தால், நாளை வரும்போது சொல்கின்றேன்.”

பாலகுமார் ஆமாம் போட்டான். கடந்த மூன்று வருடங்களாக எனது பிரத்தியேக சாரதி அவன். நீண்ட திறந்த பெட்டி கொண்ட, ஒருவருடன் இன்னொருவர் மாத்திரம் அமரக்கூடிய ‘டாட்டா’ றக் வாகனத்தைத் திருப்பி ஒப்படைக்க வேண்டியிருப்பதால், பாலகுமார் இனி டிராக்டர்தான் ஓட்ட வேண்டி வரும். விடைபெறும்போது, யோகன் என்னைக் கவலையுடன் பார்த்தான்.

“யோகன்... சைக்கிளை நாளைக்கு ஸ்டேஷனில் வந்து வாங்கும்” எனது சைக்கிளை அவன் தனக்குத் தரும்படி கெஞ்சிக் கொண்டிருந்தான். ஆயிரத்தி ஐநூறு ரூபாய்கள் தருவதாகச் சொல்லியிருந்தான்.

நித்திரையில் நடப்பதைப் போலவே எல்லாம் நடந்தன. புகையிரதத்திற்காக நானும் மனைவியும் காத்திருந்தோம். சற்றுதூரத்தில் யோகன், பாலகுமார் இன்னும் சில தொழிலாளர்கள். கடைசியில், “சார்... மன்னிச்சுக் கொள்ளுங்கோ. ஆயிரம் ரூபாய்கள் மாத்திரமே என்னால தரமுடியும்” என்று சொல்லி சைக்கிளை வாங்கிக் கொண்டான் யோகன். கடைசி நிமிடத்தில் என்னை ஆச்சரியப்படுத்தும் விதத்தில் நாதனும் மனைவியும் வந்து வழியனுப்பி வைத்தார்கள்.

“மச்சான்... ஒண்ணுக்கும் கவலைப்படாதே. எல்லாம் நல்லபடி நடக்கும்” தோளில் அரவணைத்தான்.

புகையிரதம் புறப்பட்டதும் நானும் மனைவியும் ஒருவரையொருவர் பார்த்தபடி இருந்தோம். அம்மாவின் இழப்பின் துயரத்தை, நேற்றிலிருந்து நாம் இருவரும்தான் பகிர்ந்து கொண்டிருக்கின்றோம். சொந்த வாழ்விடத்தை விட்டு வெளியேறி ஐந்து வருடங்களாகி விட்டன. அயலில் உற்றார் உறவினர் நண்பர்கள் என யாரும் இல்லை. எமது இருப்பிடத்திலிருந்து 140 கி.மீட்டர்கள் தூரத்தில் நடந்த இழப்பைத் தெரிந்து கொள்ள இரண்டு வாரங்கள் தேவைப்பட்டிருக்கின்றன.

புகையிரதம் தலைநகரைச் சேர்ந்தது. அண்ணாவும் மகளும் எமக்காகக் காத்து நின்றார்கள். துக்கத்தைப் பகிர்ந்து கொண்டோம். இரவில் உறக்கம் வரவில்லை.

(17ஆம் பக்கம் பார்க்க)

# பரம்பரை ஆட்சியை அகற்றிய நிக்கரகுவா: பொருளாதார வீழ்ச்சியில் இலத்தீன் தேசம் !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் தொட்டு, பல இலத்தீன் அமெரிக்க நாடுகளைக் குடும்ப ஆட்சிகள் தலைமுறை தலைமுறையாக ஆண்டன.

மிக நீண்ட காலமாக நிக்கரகுவா, ஒரு பரம்பரை ஆட்சியில் சிக்கித் தவித்தது. இன்றைக்குச் சரியாக 44 ஆண்டுகளுக்கு முன்னர், மத்திய அமெரிக்காவின் சின்னஞ் சிறிய நாடுகளில் ஒன்றான நிக்கரகுவாவில் நீண்ட காலப் புரட்சியின் விளைவால், சர்வாதிகார ஆட்சி ஒழிக் கப்பட்டது.

1979 ஆம் ஆண்டில் சன்டினிஸ்ட் படைகள் ஆட்சியைக் கைப்பற்றி 44 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைக் கொண்டாடும் நிகழ்வுகளால் நிக்கரகுவா தேசம் மீண்டும் விழாக் கோலம் கொண்டுள்ளது.



**கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்த நிக்கரகுவா புரட்சி சாத்தியமானது. நிக்கரகுவா 44 ஆண்டுகள் புரட்சியின்மூலம் விடுதலை பெற்றுள்ளதை தற்போது கொண்டாடுகிறது.**

**ஸ்பானிய ஆதிக்கம் :**

கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்த நிக்கரகுவா புரட்சி சாத் தியமானது. தனக்கெனத் தனித்தன்மைகளைக் கொண்ட இப்புரட்சி தற்போது பாரியளவில் நினைவு கூரப்படுகிறது.

மத்திய அமெரிக்காவின் மிகப் பெரிய நாடாக நிக்க ரகுவா, வடக்கே ஹெண்டூரஸ்ஸையும் தெற்கே கோஸ்டரீ காவையும் மேற்கே பசுபிக் கடலையும் கிழக்கே கரீபியக் கடலையும் எல்லைகளாகக் கொண்டது. ஆறு மில்லியன் மக்கள் தொகையையுடைய நாடு, முதலில் ஸ்பானியர்களின் காலனியாதிக்கத்துக்கு உட்பட்டது.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அமெரிக்கா வின் நேரடியான கட்டுப்பாட்டுக்குள் வந்த நிக்கரகுவா, 1979இல் புரட்சியினூடாகச் சர்வாதிகாரி துரத்தப்படும் வரை, அமெரிக்காவின் கைப்பாவை அரசாகவே இருந்தது.

இலத்தீன் அமெரிக்காவில், சுமார் மூன்று நூற்றாண்டுகள் ஸ்பானிய காலனியாதிக்கத்தின் கீழ் இருந்து பின்னர் 1821-ல் நிக்கரகுவா விடுதலை அடைந்தது. ஸ்பானியர் காலத்தில் நிலையூன்றிய நிலபிரபுத்துவமும் சமூக அடிமை முறையும் சுதந்திரத்தின் பின்னரும் வளர்ந்து சென்றது. அரசியல் ரீதியாக லிபரல், கன்சவேட்டிவ் என நாடு பிளவுண்டிருந்தது. இதனால் தொடர்நது பல காலமாக நாட்டின் ஆட்சி பாரிய அளவில் சீர்குலைவுக்குள்ளாகி இருந்தது.

**பரம்பரை ஆட்சியில் நிக்கரகுவா:**

அதைப்போலவே, நிக்கரகுவாவில் சோமோசா பரம்பரையின் ஆட்சி 1936 முதல் இருந்தது. அமெரிக்க ஆதரவுடன் நிகரகுவாவில் சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்த அனஸ்டேசியோ சோமோசாவின் ஆட்சிக்கு எதிராக சன்டினிஸ்ட் தேசிய விடுதலை முன்னணி வீரஞ்செறிந்த போராட்டத்தை நடத்தியது. மக்களின் ஆதரவுடன் அந்த ஆட்சியைத் தூக்கி எறியவும் செய்தது.

1970 களில் நிக்கரகுவாவில் பொருளாதார முரண்பாடுகள் மோசமடைந்தன. 1970-ல் 1.7 வீதமாக இருந்த பணவீக்கம் 1977-ல் 11 வீதமாக அதிகரித்தது. கடுமையான வேலைநிறுத்தம் நிலவியதால் நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டது. தேசியக்கடன் என்றுமில்லாத உசக்கட்டத்தை அடைந்தது. 1972-ல் தலைநகரான மனாகுவாவில் சர்வதிகாரி சோமோசா மக்களின் சொத்துக்களை சூறையாடினான். இதன் பின் மக்கள் எழுச்சியால் சன்டினிஸ்ட் தோற்றம் பெற்றது.




1977 செப்டம்பரில் வாஷிங்டனின் கோரிக்கைக்கு இணங்க அவசர நிலை நீடிக்கப்பட்டதுடன் பின் சன்டி னிஸ்ட் தன் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. சன்டினிஸ்ட் தேசிப்படைகளின் மீதான தாக்குதல் இராணுவ ரீதியான பாதிப்பை ஏற்படுத்தியது. அடக்குமுறை எந்தப் பிரச்சினையையும் தீர்க்கவில்லை என்பதன் மூலம் ஆட்சிக்கெதிரான வெகுஜன எதிர்ப்பைக் கிளப்பிவிட்டது.

**அமெரிக்க ஆக்கிரமிப்பு தலையீடு :**

1979 ஜூன் 4-ல் சன்டினிஸ்ட் பொது வேலைநிறுத் தத்திற்கான அழைப்பை விடுத்தது. அடுத்தநாள் நாடு முற்றாகச் செயலிழந்தது. ஒன்றின் பின் ஒன்றாக முக்கிய நகரங்கள் கிளர்ச்சிக்கான கட்டளையைப் பெற்றன. ஜூன் 10-ம் திகதி மனாகுவா வாசிகளைம் சன்டினிஸ்ட் குறிப் பிட்ட திகதிக்கு முன்னதாகவே தம் மிச்சையாகக் கிளர்ந்தெழுந்தனர். அரச படைகள் தலைநகரை நோக்கிப் பின்வாங்க நேரிட்டது. ஜூன் 14-ல் சாஸ்யோசிலுள்ள கோஸ்டா ரிக்கா என்ற நகரில் ஒரு அரசாங்கம் அமைக்கப்பட்டது. இவ்வரசாங்கத் தின் பெரும்பான்மைப் பலத்தை சன் டினிஸ்ட் படை பெற்றது. சமாதானப் படையை அனுப்பும் சைரஸ் வான்ஸ் (அமெரிக்க இரா ஜாங்க அமைச்சர்)ன் திட்டமும் பின்னர் கைவிடப்பட் டது.




அமெரிக்கா வின் எவ்வித தலையீடும் இருக்கக் கூடாது என அறிவிக்கப்பட்டது.

ஜூன் 16-ம் திகதி நாட்டின் முக்கிய நகரங்கள் கட்டுப் பாட்டின் கீழ்வந்தன. 19-ம் திகதி சர்வதிகாரி அனஸ்டாசியோ சோமோசா டீபேய்ல் நாட்டை விட்டு ஓடினான். தேசியப்படையானது சோமோசா தப்பியோடியதும் சீர்குலையலாயிற்று. பல போராட்டங்களின் நெருக்கடிகளிலும் உடையாத இப்படை அதன் தலைவனின் வீழ்ச்சியோடு உடையத் தொடங்கி, உடனடியாக இறுதித் தாக்குதலை நடத்தவதற்கான அழைப்பை விடுத்தது.




யூன் 19-ம் திகதி சன்டினிஸ்ட் படைகள் வெற்றிகரமாக மனாகுவா நகருள் பிரவேசித்தன. தேசியப் படை சிதறுண்டது. 7,000 வீரர் கைதிகளாக்கப்பட்டனர். மற்றவர்கள் ஹொான்ரோசிற்குத் தப்பியோட முயற்சித்தனர். மக்களின் பழிவாங்கலுக்குப் பயந்த எல்லா அதிகாரிகளும் மனாகுவாவை விட்டு வெளியேறினர்.

சன்டினிஸ்ட் முழுமையாக நாட்டை வெற்றியீட்டிக் கொண்டது. ஆனால் 50,000 உயிர்கள் பலியானதோடு (சனத்தொகையில் 2 வீதம்) அளப்பரிய இழப்புகளும் ஏற்பட்டன. ஏனெனில் நாட்டின் தொழிற்சாலைகள் யாவற்றையும் சர்வதிகாரி சோமோசா குண்டுவீசித் தகர்த்திருந்தான். இறுதியாக 1979 யூன் 19இல் சன்டினிஸ்ட் ஆட்சிப் பொறுப்பைக் கையேற்றது.

**புரட்சி நடந்து 44 ஆண்டுகள் நிறைவு:**

1979 ஆம் ஆண்டில் சன்டினிஸ்ட் படைகள் ஆட்சியைக் கைப்பற்றின. புரட்சி நடந்து 44 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளதைக் கொண்டாடும் வகையில் பல்வேறு நிகழ்ச்சி களுக்கு நிகரகுவாவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

அந்நாட்டின் தலைநகர் மனாகுவாவில் நடந்த விழாவில் லட்சக்கணக்கான மக்கள் பங்கேற்றனர். புரட்சி நிகழ்வுகள் மற்றும் அதன் பலன்களைக் காட்சிப்படுத்தும் வகையிலும் பல்வேறு கண்காட்சிகள் மற்றும் நிகழ்வுகள் நடைபெற்றன.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தலைவர்கள், பல அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வுகளில் பங்கேற்றனர். ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற கூட்டத்தில் நிகரகுவா ஜனாதிபதி டேனியல் ஓர்டேகா உரையாற்றினார்.




**தாமஸ் சங்கராவிற்கு புகழாரம் :**

இரண்டு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசிய அவர், புரட்சியின் நாயகர்கள் அகஸ்டோ சீசர் சாண்டினோ, ரிகோபெர்ட்டோ லோபஸ் பெரஸ் மற்றும் கார்லோஸ் ஃபொன்சேகா உள்ளிட்டோரின் முக்கியத்துவத்தை நினைவு கூர்ந்தார். பர்கினோ ஃபசோவில் இருந்து நிகரகுவாவுக்கு வந்து புரட்சிக்கான பங்களிப்பை செலுத்திய தாமஸ் சங்கராவிற்கு புகழாரம் சூட்டினார்.

கியூபப் புரட்சிக்குப் பிறகு, இலத்தீன் அமெரிக்காவில் இன்னொரு புரட்சிக்குச் சாத்தியமே இல்லை எனச் சொல்லப்பட்ட நிலையில், இந்தப் புரட்சி சாத்தியமானது என்பது அமெரிக்காவிற்கு பாரிய அதிர்ச்சியை உருவாக்கியது எனலாம்.




தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடந்த வாராந்த நிகழ்வின்போது இன்னிசைக்கச்சேரி நடத்தியபாடகர் ஜே. மதுசிகனுக்கு ஆச்சிரம முதல்வர் அமுதகலாசுரபி செ.மோகனதாஸ் சுவாமிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் இன்னிசைக் கச்சேரிநடைபெறுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : எஸ்.தில்லைநாதன்)

# மனிதம்

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

புது இடம் என்பதனாலா? அல்லது?

மறுநாள் காலை ஒன்பது மணியளவில் பாலகுமார் வீட்டுக்கு வந்துவிட்டான். பொருட்களை இறக்கிவிட்டு, கொலன்னாவ மெயின்ரனஸ் டிப்போ போய்ச் சேர்ந்தோம்.

"பாலகுமார்... வாகனத்தை நிப்பாட்டிப் போட்டு திறப்பை என்னட்டைத் தாரும். நான் ஜனாவுடன் கதைத்துக் கொண்டிருக்கிறேன்." பாலகுமார் போகும்போது, அவனது கையிற்குள் இரண்டு நூறு ரூபாய்த்தாள்களை வைத்தேன். அவன் கண்கள் கலங்க விடை பெற்றுக் கொண்டான்.

"ஏழெட்டுத் தொழிலாளர்கள் கையொப்பமிட்டு பாக்ஸ் ஒன்று, வவனியா டிப்போவிலிருந்து ஹெட் ஆபீஸிற்கு, ஜெனரல் மானேஜரின் பெயருக்கு வந்திருக்காம். உன்னுடைய வாகனம் ஆக்ஸிடென்ட்பட்டிருக்கின்றது, வலதுபக்க முன்பாகம் சேதமடைந்து திருத்தப்பட்டிருக்கின்றது என்றும் எழுதியிருக்காம்" ஜனா வெடிகுண்டு ஒன்றைத் தூக்கிப் போட்டார்.

"டிப்போ மானேஜர் வாகனத்தை வடிவாகச் செக் பண்ணச் சொல்லியிருக்கின்றார். எது மச்சான்... உன்ரை திருகுதாளியின்ரை வேலை".

"ஜெனரல் மானேஜர் ரொம்பப் பொல்லாத வராயிற்றே! இனத்துவேஷம் பிடிச்சவர் எண்டும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஜனா... தெரியும்தானே! முந்தி இரண்டு மூண்டு இஞ்சினியரைக் கையும் களவுமாப் பிடிச்சு 'செக்' பண்ணினவரல்லவா அவர்?"

"நீ ஒன்றுக்கும் பயப்படாதே. முதலில் ஹெட் ஆபீஸ் போய் டிப்போ மானேஜரைச் சந்தி".

எப்படியாவது வெளிநாடு போவதைத் தடுத்தேயாகவேண்டும் என்று குறியோடு இருக்கின்றான் நாதன். சரியான விளக்கம் கொடுக்கப்படாவிட்டால் எனது பதவி விலகலை நிர்வாகம் நிராகரிக்கக்கூடும், அல்லது காலதாமதமாக்கக் கூடும்.

தலைமையகத்திற்குச் சென்றேன். எல்லாமே சிங்கள முகங்கள். டிப்போ மானேஜரைச் சந்தித்தேன்.

"ஜனா உங்களுக்கு எல்லாத்தையும் சொல்லியிருப்பார். உம்முடைய வாகனத்தை நீர் எப்பொழுதாவது நாதனுக்கு ஓடக் கொடுத்திருக்கின்றீரா?"

"இல்லை.ஆனால்... நான் யாழ்ப்பாணம் லீவில் போய் நின்றபோது, நாதன் எனது வாகனத்தை பாவித்து சுற்றுலா போயிருக்கின்றார் என்று கேள்விப்பட்டிருக்கின்றேன். யாழ்ப்பாணத்திலிருந்து வந்ததும், வாகனத்தின் ஓட்டோ மீட்டரைப் பார்த்தேன். அதில் எவ்வித மாற்றமும் இல்லாதது கண்டு பேசாமல் விட்டு விட்டேன்."

சிரித்துக்கொண்டே, ஜனாவிற்கு டெலிபோன் செய்தார் டிப்போ மனேஜர்.

"ஜனா... உம்முடைய நண்பர் என்னுடன் இருக்கின்றார். வாகனத்தை 'செக்' பண்ணும் போது, ஓட்டோ மீட்ட ரைக் கழற்றி நம்பரைப் பின்னோக்கிச் சுற்றியிருக்கின்றார்களா என்றும் பாருங்கள்."

"வாருங்கள்... ஜெனரல் மானேஜரைச் சந்திப்போம்" கூட்டிக்கொண்டு பல மேசைகளைத் தாண்டிச் சென்றார். பல தலைகள் ஆணும் பெண்ணுமாக எங்களைப் பார்த்தன. எனக்குச் சற்று பயமாகவும் இருந்தது. கதவைத் தட்டி, அனுமதி பெற்றுக் கொண்டதும் உள்ளே சென்றோம். எதிரே இருந்த இருக்கைகளில் அமரும்படி சொன்னார் ஜெனரல் மானேஜர்.

"அம்மாவின் இழப்பிற்கு ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கின்றேன்" பேசத் தொடங்கினார்.

"நாதனின் கடிதம் எழுதும் ஆங்கிலப் புலமைதான் அவனை எனக்குக் காட்டித் தந்தது. சுத்த மோசம். உங்களுக்கெதிரான குற்றச் சாட்டை நாதன் தன் கைப்பட எழுதி. தொழிலாளர்களின் கையொப்பத்தைப் பெற்று பாக்ஸ் செய் திருக்கின்றார். அவரைப் பற்றிய பல குற்றச்சாட்டுகள் ஏற்கெனவே எம்மிடம் உள்ளன.

நீங்கள் நாளைக் காலை வாருங்கள். உங்கள் பதவி விலகலை ஏற்றுக் கொண்டதற்கான கடிதமும், உங்களுக்குரிய நற்சான்றிதழ், மற்றும் இந்த மாதம் நீங்கள் வேலை செய்ததற்கான சம்பளப் பணமும் காத்திருக்கும். நீங்கள் இது வரை காலமும் திறம்பட வேலை செய்ததற்கு, நிர்வாகத்தின் சார்பில் எமது நன்றிகள். உங்கள் வெளிநாட்டு வாழ்க்கை சிறப்புற எனது வாழ்த்துகள்."

நான் இருக்கையை இறுகப் பற்றிக் கொண்டேன். டிப்போ மானேஜர் புன்முறுவல் பூத்தபடி, தலையை மேலும் கீழும் ஆட்டி ஜெனரல் மானேஜரின் உரையை ஆமோதித்தார்.






# உலகின் பெருங்கதை!

கிரேட்டா துன்பர்க்
(தமிழில்: நா.மணி)




தற்போதைய நிலையில், 700.9 கோடி மக்கள், அழகிய நீல நிற புவி கோளத்தில் வசித்து வருகிறோம். பால்வெளி மண்டலத்தில், நமக்குள்ள சின்னஞ்சிறு மூலையில், உட்கார்ந்து கொண்டு, அமைதியாக சூரியனை சுற்றி வந்து கொண்டு இருக்கிறோம். உலகில் உள்ள மற்ற உயிரினங்களைப் போலவே, நாம் ஒருவரோடு ஒருவர் பிணைக்கப்பட்டவர்கள். நமது தோற்றத்தையும், வாழ்வாதாரங்களையும் தேடிப் பார்த்தால், இயற்கையில் இருந்து எவ்வளவு தூரம் விலகி நின்றாலும், இயற்கையிலிருந்து நம்மை பிரிக்க இயலாது.

### பருவநிலை பாதுகாப்பு

புவியின் புனிதமான கதையை துண்டு துண்டாக்கியது யார்? இதற்கு முழுமையான தீர்வை தாருங்கள் என்று நாம் யாரை அழைப்பது? பல்கலைக்கழகங்களுக்கு மேம்பட்ட பல்கலைக்கழகங்களையா? நமது அரசுகளையா? உலகத் தலைவர்களையா? வணிக உலகத்தையா? ஐக்கிய நாடுகள் சபையையா? பதில் ஒன்றுதான்.

அது, ஒருவரும் இல்லை அல்லது நாம் ஒவ்வொருவரும். துரிதமாக அதிகரித்து வரும் பருவநிலை மாற்றம் மற்றும் சூழலியல் நெருக்கடிகளுக்கு நாமே தொடக்கம். நீடித்த நிலைத்த நெருக்கடியிலிருந்து, தொழில்நுட்பம் மட்டுமே நம்மை பாதுகாக்க முடியாது. துரதிருஷ்டவசமாக, நமது எதிர்கால வாழ்வையும் புவியையும் பாதுகாக்க தக்க சட்டங்கள் இன்றளவும் இல்லை. நமக்கு தேவையான மாற்றத்தை உறுதி செய்து, எதிர்காலத்தை பாதுகாக்கும் சூழல் இப்போதைக்கு நம் கண்ணுக்கு தெரியவில்லை.

பொது கருத்தொற்றுமை வழியாக இதனை மாற்றி அமைக்க முடியும். இந்த மாற்றம் நம்மால் உருவாக்கப்பட வேண்டும். ஏதேனும் வலுவான கருவியை பயன்படுத்தி இதனை செய்தே ஆக வேண்டும். பருவநிலை மாற்றம் என்னும் இப்பெருங்கதையை, எவ்வாறு மக்களிடையே எடுத்துச் செல்வது என்பதில் தான் இருக்கிறது. எப்படி, ஒரே அளவு எல்லோருக்கும் பொருந்தாதோ, அதுபோல, எல்லோரிடமும் ஒரே மாதிரி இந்தச் செய்தியை எடுத்துச் செல்ல இயலாது. ஆயிரமாயிரம் அணுகுமுறைகள் நமக்கு தேவை. தற்போதைக்கு நம்மிடம் இருக்கும் வளங்கள் மிகவும் குறைவானதே. நம்மிடம் இருப்பதை வைத்து தொடங்க வேண்டும்.

### சர்வாதிகாரத்தின் வழியாக தீர்வா?

நாம் என்ன செய்யலாம் என்றால், அறநெறி, பிறர் துன்பங்களை தனதானதாக பாவித்தல், அறிவியல், ஊடகம், இன்னும் ஜனநாயகம் உயிர்ப்புடன் வாய்க்கப்பெற்றவர்கள் ஆகியவற்றை வைத்து தொடங்க வேண்டும். இவற்றை பேராயுதங்களாகக் கொண்டு இப்பணியை தொடங்க வேண்டும். இந்த விசயத்தில் அறநெறியை ஈடுபடுத்த கூடாது. அறம் ஒருவிதமான குற்ற உணர்ச்சியை தூண்டும் என்று கூறுவோர் உண்டு. இந்தக் குற்ற உணர்வு பெரிய மாற்றத்தை சாதிக்க பயன்படாது என அவர்கள் வாதிடலாம். அறநெறியை தவிர்த்து விட்டு வேறு என்ன செய்ய முடியும்? யாரையும் குற்ற உணர்வுக்கு ஆட்படுத்தாமல் இந்த அசௌகரியமான விசயத்தை எப்படி கையாள முடியும்?




தொழிலாளர்களின் மீதான உழைப்பு சுரண்டல், இயற்கை வளங்கள் மற்றும் நில மோசடி, இனப்படுகொலைகள், கட்டற்ற நுகர்வு ஆகியவற்றின் விளைவாக உருவான கடுமையான ஏற்றத் தாழ்வுகள். இதனால் உருவாக்கப்பட்ட மனித சமூகத்தின் இருத்தலியல் நெருக்கடி. அற உணர்வை தூண்டாமல் எப்படி இதனை சுட்டிக் காட்ட முடியும்? இதுவரை நாம் சந்தித்திராத நெருக்கடியை நாம் சந்திக்கிறோம். இதனை பெரும் வாய்ப்பாக பயன்படுத்தி, எந்தவித பாதிப்பும் இன்றி, புதிய பசுமை வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று பாசாங்கு செய்யலாமா? கொஞ்சம் பேர் மிகவும் சிறிய எண்ணிக்கையிலானவர்கள் தான். இவர்கள், சர்வாதிகாரத்தின் வழியாக உலக நெருக்கடிக்கான தீர்வை கண்டறிந்து விடலாம் என்று நினைக்கிறார்கள்.

சர்வாதிகாரத்தில் நல்ல சர்வாதிகாரம் என்று ஒன்று இல்லை. இதற்கு சீனாவும் ரஷ்யாவின் புடினுமே உதாரணம். ஜனநாயகத்திற்கு குறைவான வேறு வடிவங்கள் சரியென்று நம்புவது மூடநம்பிக்கை. நீதியும் சம உரிமைகளுமே பிரச்சினைகளை தீர்க்க சரியான தீர்வு. இது எந்தவித சர்வாதிகாரத்தையும் தானாகவே செயல் இழக்கச் செய்யும். நம்மிடம் உள்ளவற்றில் ஜனநாயகமே மிகவும் மதிப்புமிக்கது. ஆனால் இது கட்டுறுதியற்றது என பல முறை கண்டுள்ளோம். எல்லா



விசயங்களையும் நன்கு அறிந்த, நன்கு பயிற்றுவிக்கப்பட்ட மக்களால் தான் தங்கள் வாழ்வாதாரத்தையும் ஜனநாயகத்தையும் நன்கு பயன்படுத்திக் கொள்ள முடியும். இல்லையெனில், மிக எளிதாக அவர்களுக்கான ஜனநாயகமாக மலினமாக்கி விடுவார்கள்.

இங்கு பேசப்படும் அறிவுசார் விசயங்களோ அல்லது அறிவியலோ நமது வாழ்வா சாவாவிற்கானது. இது நமக்கானது மட்டுமல்ல. நமது சந்ததியினர் மற்றும் புவியில் உள்ள சில ஜீவராசிகளுக்கானது. நாம் கவனம் செலுத்த வேண்டிய, தீர்க்க வேண்டிய, பல முக்கிய பிரச்சினைகள் உள்ளன. ஆனால் பருவநிலை மாற்றம் என்ற பிரச்சினை அப்படிப்பட்டதல்ல. இப்போது தவறவிட்டால் இனி எப்போதும் செய்து முடிக்கவே முடியாத பிரச்சினை. மற்ற அனைத்து பிரச்சினைகளையும் எப்படி தீர்க்கப் போகிறோம் என்பது, இந்தப் பிரச்சினையை எப்படி தீர்க்கப் போகிறோம், என்பதில் தான் அடங்கியுள்ளது.

பருவநிலை மாற்றம் மற்றும் சூழலியல் நெருக்கடிகள் பிறகு செய்து கொள்ளலாம் என்று தள்ளிப் போடக் கூடிய ஒன்று அல்ல. யாரோ செய்யட்டும், நாம் அமைதியாக இருந்து விட்டு செல்லலாம் என்று நினைக்கும் காரியமும் அல்ல. இன்றே தொடங்க வேண்டிய வேலை இது. நாம் செய்ய கற்றுக் கொள்வோம். அடிப்படை உண்மைகளை புரிந்து கொள்வோம்.

### பருவநிலை மாற்றம் உரக்கப் பேசுவோம்

வரிகளுக்கு இடையில் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டும். இது இப்படி இருக்கிறது என்று கற்றுத் தரும் நிலைக்கு நாம் ஒவ்வொருவரும் தயாராக வேண்டும். எதையும் மிகைப் படுத்தி கூற வேண்டியதில்லை. ஏற்கனவே நம் பெருங்கதை மிக மோசமான கதையாகி விட்டது. இதற்கு சர்க்கரை தடவி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த உண்மையை கையாளும் பக்குவத்தை அடைய வேண்டும். எல்லாம் முடிந்து விட்டது என்று நம்பிக்கை இழக்க தேவையில்லை. மிகவும் காலம் கடந்து விட்டது என்று அஞ்சத் தேவையில்லை. இப்போது தொடங்கினாலும் எவ்வளவு தூரம் சேமிக்க முடியுமோ அவ்வளவு தூரம் சேமிக்க முடியும்.

பருவநிலை மாற்றம், எனும் ஆபத்தே, இவ்வுலகின் பெருங்கதை. இதனை உரக்கப் பேசுவோம். புத்தகங் களில், கட்டுரைகளில், சினிமாக்களில், பாடல்களில், சிற்றுண்டி மேஜைகளில், மதிய உணவு நேரங்களில், குடும்ப சந்திப்புகளில் மின் தூக்கிகளில், பேருந்து நிறுத்தங்களில், பயணங்களில், கிராமப் புற கடைகளில், பள்ளிகளில், தொழிற்சாலைகளில், உடற்பயிற்சி கூடங்களில், பணியிடத்தில் வயல்களில் சங்கக் கூட்டங்களில், அரசியல் பயிற்சி வகுப்புகளில், மழலையர் வகுப்புகளில், முதியோர் இல்லங்களில், மருத்துவ மனைகளில், கார் பைக் பழுது பார்க்கும் மையங்களில், வாட்ஸ்அப், இன்ஸ்டாகிராம் இன்னபிற சமூக ஊடகங் களில், புழுதி படிந்த கிராமப் புற சாலைகளில், நகரப் புற சாலைகளில், சந்து பொந்துகளில் எல்லா இடங்களி லும் எப்போதும் பருவநிலை மாற்றம் என்னும் இப்பெருங்கதையை உரக்கப் பேசுவோம்.

இதுவரை வாழ்ந்து மடிந்த நம் மனித மூதாதையர்களான ஹோமோ சேபியின்களில் நாம் ஏழு விழுக்காடு. நாம் அனைவரும் காலத்தோடும் வெளியோடும் தொடர்புடையவர்கள். காலத்தே நமது பொதுவான எதிர்காலத்தை கட்டமைத்துக் கொள்ள முன்னேறுவோம். நமது உற்று நோக்கல், படித்தல், ஞாபகசக்தி, படிப்படியாக வளர்ச்சி அடைதல், ஏற்றுக் கொள்ளல், கற்றுக் கொள்ளுதல், மாற்றத்திற்கு உட்படுத்தி கொள் ளல், கதை கூறுதல் போன்ற திறன்கள் வழியாக நாம் நிறைய தரவுகளை சேகரித்து உள்ளோம். நிறைய அறிவை சேகரித்து உள்ளோம். இதன் மூலம் நம்மை நாம் பாதுகாத்து கொண்டு, நமது வாழ்வாதார நிலைமைகளையும் மேம்படுத்தி உள்ளோம்.

### பேரழிவை தடுக்க வேண்டிய தருணம்

இது நமக்கு அளவற்ற சாத்தியப்பாடுகளையும், போதுமான வளமிக்க உலகையும் உருவாக்கி கொடுத் துள்ளது. இவை எல்லையற்ற கூட்டு முயற்சியின் சாதனைகள். இந்தப் பால்வெளி மண்டலத்தில் இது தனித்துவமானது. இவை கை நழுவிப் போகப் போகிறது. இது இதை பாதுகாப்பதில் இன்னும் தோற்றுக் கொண்டுதான் இருக்கிறோம். நமது பொது நலத்திலும், நல்வாழ்விலும் குறுக்காக நிற்கும் ஒரு சிறு பகுதி மக்கள், நினைத்துக் கூட பார்க்க முடியாத சொத்துகளை சேர்க்கவும், அவர்களது பேராசை, சுயநலம் ஆகியவற்றை அனுமதித்துக் கொண்டு தான் இருக்கிறோம்.

ஆனால், இப்போது உங்களுக்கும் எனக்கும் இதனை சரிசெய்ய வேண்டிய வரலாற்று பொறுப்பும் கடமையும் இருக்கிறது. மனித குலத்தின் இந்த கெடுவாய்ப்பான நேரத்தில், பங்காற்றிட நமக்கு ஓர் அரிய வாய்ப்பு. இந்தப் பெருங்கதையை மக்கள் முன் எடுத்துரைக்கவும், இந்தப் பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வரவும் நமக்கான தருணம் வந்துள்ளது. நாம் அனைவரும் இணைந்து இன்னும் மிக மோசமான சூழல் உருவாகாமல் தடுக்க இயலும். இப்போதும், பருவநிலை மாற்றம் மூலம் நிகழவிருக்கும் பேரழிவை தவிர்க்க முடியும்.

நாமே உருவாக்கிய பூமிப்பந்தின் காயங்களுக்கு நாமே மருந்திட முடியும். நாம் ஒன்றிணைந்தால் செய்ய முடியாததை செய்ய இயலும். ஒரு சிறு தவறும் நிகழாமல் நம்மால் இதனை செய்து முடிக்கவே முடியாது. இந்தக் காரியத்தை செய்து முடிப்பது நம்மை பொறுத்ததே. நீங்களும் நானும் இணைந்து இங்கே இப்போதே செய்யத் தொடங்க வேண்டிய காரியம்.

குறிப்பு: 2003 ஆம் ஆண்டு ஸ்வீடனில் பிறந்த கிரேட்டா துன்பர்க் 2018 ஆம் ஆண்டு பருவநிலை மாற்றத்திற்கான போராட்டத்தை தனது நாட்டு பாராளுமன்றத்தின் முன் தொடங்கினார். “விடியலுக்கான வெள்ளிக்கிழமை” போராட்டத்தை முன் வைத்தார். அவரது போராட்டம் ஐக்கிய நாடுகள் சபை வரை அறியப்பட்டது. “தி கிளைமேட் புக்” என்ற தலைப்பில் அவர் தொகுத்துள்ள நூலின் ஒரு அத்தியாயம் இது. உலகின் உள்ள தலைசிறந்த விஞ்ஞானிகள், பருவநிலை மாற்றத்திற்காக பாடுபட்டு வருபவர்களிடம் கட்டுரைகள் பெற்று இந்த நூலை தொகுத்து உள்ளார்.

# இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் சதி!

## பிரசன்ன ரணதுங்க குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக. 13

நீதித்துறையை சிதைத்து அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு சில அரசசார்பற்ற அமைப்புகள் வெளிநாடுகளில் இருந்து கொண்டு கங்கணம் கட்டிக்கொண்டு செயற்படுவதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட யோசனையொன்றை நீதிமன்றம் சவாலுக்கு உட்படுத்த முடியாதென்ற சபாநாயகரின் அறிவிப்பு தொடர்பாக நேற்று முன்தினம் சபையில் நடைபெற்ற காரசாரமான வாத விவாதங்களுக்கு பின்னர் அது தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் செயற்பட்டுள்ள விதம், மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக பலரும் சபையில் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

நீதிமன்றம் ஒரு உத்தரவை பிறப்பித்து அதை விலக்கிக்கொண்டமை, சபாநாயகர் வழங்கிய உத்தரவை அடிப்படையாகக் கொண்டு அல்லவென்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

அவ்வாறு நீதிமன்றத்தால் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த விவகாரத்தை வைத்து இதனை வேறு கோணத்தில் கொண்டு செல்ல சில தரப்பினர் முயற்சிக்கின்றனர். கொடுக்கின்றதென்ற போர்வையில் இதனை முன்னெடுக்கப் பார்க்கின்றனர். அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு அரசசார்பற்ற அமைப்புகள் சில வெளிநாடுகளிலிருந்து கங்கணம் கட்டிக்கொண்டு செயற்பட்டு வருகின்றன எனும் கூற்றும் முன்வைக்கப்பட்டு வருகிறது.

அந்த வகையில், ஒரு சமயம் பாராளுமன்றத்தில் 225 உறுப்பினர்களையும் நிராகரிக்கும் நிலை காணப்பட்டது. எனினும், அந்த 225 பேரில் சிலரை ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்திலும் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. கடந்த காலங்களில் நிறைவேற்றுத்துறையை சிதைப்பதற்கும் இவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள்.

நிறைவேற்றுத்துறை மீது நம்பிக்கை இல்லையெனக் காட்டி அரசாங்கத்தை வீழ்த்தவும் நடவடிக்கை எடுத்தார்கள்.

மீண்டும் இப்போதும் நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையை சீர்குலைத்து அரசாங்கத்தை வீழ்த்துவதற்கான சூழ்ச்சிகளையே மேற்கொண்டு வருகின்றனர் அதற்கு இடமளிக்க முடியாது-என்றார். (அ)

## அடிகாயங்...

கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, உயிரிழந்தவரின் சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும், இதனால் குறித்த குடும்பஸ்தர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் 52 வயதான கணபதிப்பிள்ளை மகேந்திரன் என்ற குடும்பஸ்தரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## தமிழ்க்...

எனவே, அரச தலைவர் என்ற ரீதியில் ஜனா திபதி முன்னெடுக்கவுள்ள சகல வேலைத் திட்டங்களுக்கும் தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கவேண்டும். அப்போதுதான் அனைத்துப் பிரச்னைகளுக்குமான தீர்வுகளை நாம் விரைந்து காண முடியும்-என்றார். (அ)

## மக்களின்..

எதிராக தொடர்ந்தும் சுழற்சி முறையில் கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகின்ற பொது மக்களுக்கு ஆதரவு தெரிவித்து அப்போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தே போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்-

பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராமத்தில் சீமெந்து தொழிற்சாலைக்கான

மூலபொருளான சுண்ணக் கல் அகழ்வை மேற்கொள்ளவதற்கான ஆரம்பக் கட்ட பணிகள் நிறைவுற்றுள்ளது. குறித்த நிறுவனம் ஒன்று கடற்கரை கிராமங்களான மேற்படிகிராமங்களில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழம் வரை சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இது மிகப்பெரும் ஆபத்தை வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு கிராம மக்களுக்கு உடனடியாகவும் ஏனைய அயல் கிராம மக்களுக்கு படிபடியாகவும் பாதிப்பை ஏற்படுத்த போகிறது. பொது மக்கள் தங்களின் வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை உரு வாகும்.

ஏனெனில் கடல் நீர் நிலத்தடி நீரில் கலந்து குறித்த பிரதேசத்தில் உள்ள நன்னீர் உவர் நீராக மாற்றமடையும், பின்னர் நிலம் உவராக மாறும் இதன்போது மக்கள் அங்கு வசிக்க முடியாத நிலை உருவாக்கும். மேலும் தற்போது கிராஞ்சி குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு இந்த பிரசேத்தின் நிலத்தடி நீரை மூலமாக கொண்டே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது. சுண்ணக்கல் அகழ்வு காரணமாக இந்தநிலத்தடி நீர் வளம் பாதிக்கப்பட்டு குறித்த குடிநீர் விநியோகம் நிறுத்தப்படும், தொழிற்சாலை கழிவுகள், தூசுகளால் பொது மக்கள் நோய்த் தொற்றுக்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இப்படி ஏராளமான பாதிப்புக்கள் ஏற்படும். குறிப்பாக அதனால் ஏற்படும் நன்மைகளை விட பாதிப்புக்களே அதிகமாக ஏற்படும்.

ஆகவே இந்த திட்டம் நடைமுறைப் படுத்தப்படுவதனை எமது சமத்துவக் கட்சியும் அந்த மக்களுடன் இணைந்து எதிர்க்கிறது. என்பதனை இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்- என்றார். (அ)

## 13 தொடர்பில்...

பாதகமான விதத்தில் விக்கிரமசிங்க-ராஜபக்ஷ அரசாங்கம் செயற்பட முயல்வதால் கோட்டாபய தொடர்ந்தும் அமைதியாகயிருக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

2019 நவம்பரில் கோட்டாபய வென்ற ஐந்து வருட பதவிக் காலத்தை பூர்த்தி செய்வதற்காக பாராளுமன்றம் ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தது என தெரிவித்துள்ள சன்ன ஜெயசுமண, பயங்கரவாதத்திற்கு எதிரான வெற்றியை பிரதிபலிக்கும் புதிய அரசமைப்பு என்ற வாக்குறுதியின் அடிப்படையில் வெற்றி பெற்ற கோட் டாபய தனது மக்கள் ஆணை துணிச்ச லாக ஒற்றையாட்சியை இல்லாமல் செய்வதற்காக பயன்படுத்தப்படும் போது முன்னாள் பாதுகாப்பு செயலாளர் எவ்வாறு மௌனமாகயிருக்க முடியும் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி இந்த விடயத்தில் தெளிவான நிலைப்பாட்டை எடுக்காவிட்டால் தற்போதைய நிகழ்ச்சி நிரலுக்கு அவர் மறைமுக ஆதரவு என்ற தவறான கருத்தைஅது ஏற்படுத்தலாம் என தெரிவித்துள்ள அவர் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் எவ்வாறு தனது மக்கள் ஆணையை தவறாக பயன்படுத்த அனுமதிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார். (அ)

## இலங்கை...

சீனாவுடன் பல ஒப்பந்தங்களை மேற்கொள்ளவுள்ளது. இந்த ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அடுத்த மாதம் சீனாவுக்கு பயணிக்கவுள்ளார்.

இதன் போது, சொத்துக்களை விற்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஏற்கனவே, இந்தியாவுக்கான, விஜயத்தின் போது ரணில் விக்கிரமசிங்க பல ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்தார்.

இந்த ஒப்பந்தங்கள் இந்தியாவை சந்தோஷப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்டவை.

அவர் தனது பதவியை காத்துக் கொள்வதற்காகவும் பலப்படுத்துவதற்காகவும் மேற்கொண்ட நடவ டிக்கைகள்.

இலங்கை தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளை சர்வதேச நாணய நிதியம் மற்றும் இந்தியா, சீனா ஆகிய நாடுகள் தமது சொந்த நலனுக்காக பயன்படுத்திக் கொள்கின்றன. சர்வதேச நாடுகளுடன் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கொள்ளும் ஒப் பந்தங்களை நாம் முறியடிக்க வேண்டும். அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்த்து நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

மேலும் மக்கள் ஆணையற்ற ரணில் விக்ரமசிங்கவுக்கு எவருடனும் எந்த ஒப்பந்தங்களையும் மேற்கொள்ள முடியாதென்பதை அவர் நினைவில் கொள்ள வேண்டும் - என்றார். (அ)

## மின் உற்பத்தி...

அடி வரை அதிகரித்துள்ளது.

நேற்று மாலை வேளையில் இடது கரைக்கு விநாடிக்கு 12.26 கன மீற்றர் நீர் திறந்துவிடப்படும் என கடமை நேர பொறியியலாளர் தெரிவித்தார்.

வலது கரைக்கு விநாடிக்கு 9.69 கன மீற்றடர் நீர் திறந்துவிடப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, தென் மாகாணத்தில் மின் பரிமாற்ற கட்டமைப்பின் கொள்ளளவை அதிகரிக்கும் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 05 நாட்களுக்குள் நிறைவு செய்யப்படுமென இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

திட்டத்தின் இறுதிக் கட்டத்திற்கு தடையாக காணப்பட்ட பகுதியில் நிர்மாணப் பணிகளை முன்னெடுப்பதற்கு நிலத்தின் உரிமையாளர் இணக்கம் தெரிவித்துள்ளமையினால், இந்தப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளன.

இதற்கமைய, பொல்பிட்டியவில் இருந்து அம்பாந்தோட்டை வரையிலான மின் பரிமாற்ற கட்டமைப்பில் மின் கம்பிகளை காணிக்கு மேலே அமைக்கும் பணி இன்று ஆரம்பிக்கப்பட்டது.

இதேவேளை, நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் செயலிழந்துள்ள இரண்டாவது மின்பிறப்பாக்கி பழுது பார்க்கப்பட்ட பின்னர் எதிர்வரும் புதன் கிழமை இரவிற்குள் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படுமென இலங்கை மின்சார சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

## அதிகார...

நடைமுறைக்கு வரும் எனவும் இத னால், ஜனாதிபதியின் யோசனைகள் முற்றாக தோற்கடிக்கப்படவேண்டியவை எனவும் உத்தர லங்கா சபாகய கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இந்த யோசனைகளை தோற்கடிப்பதற்காக முழுமையான மக்கள் நிலைப்பாட்டை நாட்டில் உருவாக்க வேண்டியது அவசியம். இதற்காக ஐக்கிய மக்கள் சக்தி, சுதந்திர மக்கள் காங்கிரஸ் உட்பட எதிரணிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயங்கள் தொடர்பான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தை களை உத்தர லங்கா சபாகய அண்மையில் நடத்தியது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனையை தோற்கடிக்க பௌத்த பிக்குமார், ஏனைய சமய தலைவர்கள், புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள்,சிவில் சமூக பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களை நாடு முழுவதும் ஏற்படுத்த வேண்டும் என இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நாட்டில் பல பிரச்னைகள்உருவாகியுள்ள சந்தர்ப்பத்தில் ஜனாதிபதி தேவையற்ற பிரச்னைகளை நாட்டில் ஏற்படுத்தி வருவதாகவும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அவர் இதனை செய்யவில்லை எனவும் நாட்டின் பிரச்னைகள் தொடர்ந்தும் நீடிக்கவே அவர் இதனை செய்து வருவதாகவும் உத்தர லங்கா சபாகயவின் பாராளுமன்ற உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (அ)

## சர்வதேச...

உறுதியாக இருக்கின்றதா என்பதை சர்வதேச நாணய நிதியம் அவதானித்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மத்திய வாங்கி, நிதி அமைச்சு மற்றும் நிதி அமைச்சர் ஆகியோருடன் இந்த மீளாய்வுக் கூட்டம் நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளதுடன், சர்வதேச நாணய நிதியத்துடன் 9 இணக்கப்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்படி, முதற்கட்டமாக 2.9 பில்லியன் டொலருக்கான இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ள நிலையில், குறித்த நிதியானது 2027 ஆம் ஆண்டு வரை 8 தவணைகளில் பெறப்படுமெனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய சுட்டிக்காட்டினார். (அ)

## தேடல்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட **பெந்தர ஹபுருகல** (Benthara, Haburugala) பிரதேசத்தில் 1979, 1980 களில் சேவையாற்றிய **வைத்தியர் சின்னத்தம்பி தர்மலிங்கம்** அவர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றோம். அவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் கீழ் தரப்பட்ட தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளவும். அவரது உறவினர்கள் அவரைத் தொடர்புகொள்ள விரும்புகின்றனர்.

**தொடர்பு:071 404 0640**
**வைத்தியர் சஜிதரன்**

ஈழநாடு
Eelanadu

## மனநலம் பாதிக்கப்பட்டோர் இரண்டு மடங்காக அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 13

பொருளாதார பிரச்னையினால் ஏற்பட்டுள்ள மனநல பிரச்னைக்கு சிகிச்சை பெறுவதற்காக, மனநலம் பாதிப்பு தொடர்பான வைத்தியர்களைச் சந்திக்க வருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக காலி, கராப்பிட்டிய போதானா வைத்தியசாலையின் விசேட மனநல வைத்திய நிபுணர் ரூமி ரூபன் தெரிவித்தார்.

அதேபோன்று, சிகிச்சைக்காக வரும் அவ்வாறான நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், பொருளாதார பிரச்னை மற்றும் எதிர்காலம் தொடர்பான உத்தரவாதம் இன்மை போன்ற காரணங்களினாலேயே மனநல பாதிப்பு அதிகரித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். (அ)

## 7 மீனவர்களை மீட்ட கடற்படை

கொழும்பு, ஒக. 13

நீர்கொழும்பு மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து பயணித்த நிலையில், தீ பரவலுக்கு உள்ளான பல நாள் மீன்பிடி படகிலிருந்த ஏழு மீனவர்களும் நேற்று காலை கடற்படையினரால் காலி கடற்படைத் தளத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.



அவர்கள் நேற்று முன்தினம் நீர்கொழும்பில் இருந்து கடற்றொழிலுக்கு சென்றிருந்தநிலையில், நேற்று குறித்த பலநாள் மீன்பிடி படகு தீப்பரவலுக்கு உள்ளாகி இருந் தது.

இதன்போது இந்த படகுக்கு அருகில் பயணித்த வர்த்தக கப்பல் ஒன்றின் மூலம், குறித்த 7 மீனவர்களும் மீட்கப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்தநிலையில, அவர்கள் நேற்று காலி கடற்படைத் தளத்திற்கு அழைத்து வரப்பட்டதாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

## வெளிநாட்டுத் தொழிலாளர்களால் 3 பில்லியன் டொலர்கள் வருமானம்

கொழும்பு, ஒக. 13

2023 ஆம் ஆண்டில் இதுவரை வெளிநாட்டிலுள்ள இலங்கை தொழிலாளர்களிடமிருந்து இலங்கைக்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப் பட்டுள்ளது.

ஜூலை மாதத்தில் மட்டும் 541 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

இது 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் உடன் ஒப்பிடுகையில் 261 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூலை வரையில் மொத்தம் 3,363.6 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார மேலும் கூறினார். (அ)

## வைத்தியசாலைக்குள் ஊசி செலுத்தி உயிர் மாய்த்த தாதிய உத்தியோகத்தர்!

கொழும்பு, ஒக. 13

ஹலவத்த பொது வைத்தியசாலையில் பணிபுரிந்து வந்த தாதி ஒருவர் ஊசி மருந்து செலுத்தி உயிர் மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மரணம் நேற்று முன் தினம் இரவு 8.40 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக ஹலவத்த பொலிஸார் தெரிவித்தனர்.

ஹலவத்த, ஈபர்ட் சில்வா வத்த பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய தாதியே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

ஹலவத்த பொது வைத்தியசாலையின் பல் சத்திர சிகிச்சையின் ஓய்வறையில் உயிரிழந்த நபரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

முதற்கட்ட விசாரணையில், இந்த தாதியர் சில மருந்துகளை உடலில் செலுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த மரணம் தொடர்பில் வைத்தியசாலைக்குள் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

# போலிக்கடவுச்சீட்டில் நெதர்லாந்து செல்ல முற்பட்ட இரு இந்தியர்கள்!

### கட்டுநாயக்காவில் வைத்து கைது

கொழும்பு, ஒக. 13

போலியாக தயாரிக்கப்பட்ட சீன நாட்டின் கடவுச்சீட்டை பயன்படுத்தி நெதர்லாந்து செல்ல முயற்சித்த இரண்டு இந்திய பிரஜைகளை நேற்று சனிக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் முனையத்தில் வைத்து விமான நிலையத்தின் குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைதான இருவரும் திபெத் வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் ஆவர். 43 வயதான ஆண் இந்தியாவின் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர் எனவும், அவருடன் கைது செய்யப்பட்டுள்ள 39 வயதான பெண் உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்தவர் எனவும் விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் சுற்றுலா விசாவில் கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதி இலங்கை வந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று சனிக்கிழமை அதிகாலை 4.45 மணிக்கு புறப்பட்டுச் செல்லும் அல் ஜசீரா விமானத்தில் குவைத் செல்ல கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு சென்றுள்ளனர்.

இவர்கள் குவைத்தில் இருந்து துருக்கியின் இஸ்தான்புல் நகருக்கு சென்று அங்கிருந்து நெதர்லாந்து செல்ல திட்டமிட்டுள்ளனர்.

விமானத்தில் ஏறுவதற்கான அட்டையை பெறுவதற்காக அல் ஜசீரா விமான சேவையின் கரும பீடத்துக்கு சென்றுள்ள நிலையில், அவர்களின் கடவுச்சீட்டை ஆராய்ந்த அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டதையடுத்து, இவருவரையும் குடிவரவு மற்றும் குடிய கல்வுப் பிரிவின் அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதனையடுத்து, சந்தேக நபர்களின் பயணப் பொதிகளை சோதனையிட்ட அதிகாரிகள் அதிலிருந்து இந்திய கடவுச்சீட்டுக்களை கைப்பற்றியுள்ள நிலையில், கைதான இந்திய பிரஜைகளிடம் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், இரண்டு போலி கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள தரகருக்கு 6 ஆயிரம் அமெரிக்க டொலர்களை வழங்கிய தாகவும், கடவுச்சீடுக்களை இலங்கைக்கு வந்த விமானத்தில் வைத்து தரகர் வழங்கியதாகவும் இந்திய பிரஜைகள் அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, அவர்களை கைதுசெய்த அதிகாரிகள், மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையத்தின் குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீரங்காவின் விபத்து வழக்கை சோடித்த பொலிஸ் அதிகாரிக்கு ஆறு மாதச் சிறை

கொழும்பு, ஒக. 13

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீரங்காவால் ஏற்பட்ட விபத்தின் சாட்சியங்களை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்டு அப்போது செட்டிகுளம் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய பிரதம பொலிஸ் பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவ என்பவருக்கு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் 7 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டார்.

உயிரிழந்த பொலிஸ் சார்ஜன்ட்டின் மனைவிக்கு 500,000 ரூபா நட்டஈடாக வழங்கப்பட வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

சாட்சிகளை மிரட்டிய குற்றச்சாட்டில் தற்போது விளக்கமறியலில் உள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவை, நவம்பர் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கவும் உத்தரவிட்டார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி (மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம்) மதவாச்சியிலிருந்து செட்டிகுளம் நோக்கி பதிவு செய்யப்படாத ஜீப் வண்டியில் பயணித்தபோது செட்டிகுளம் வைத்தியசாலைக்கு எதிரே விபத்து ஏற்பட்டது. அளவ்வ, நவத்தல்வத்தையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஜி. உதய ஜயமினி புஷ்பகுமார என்ற பொலிஸ் சார்ஜன்ட் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின்போது கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொய்யான தகவலை தெரிவித்ததாகவும், உயிரிழந்த சார்ஜன்ட் வாகனத்தைச் செலுத்தியதாக குறிப்பிட்டு விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாகவும் நீதிமன்றில் அறிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்த சார்ஜன்ட்டின் மனைவி செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அப்போது சார்ஜென்ட் உயிரிழந்த சம்பவத்தில் வாகனத்தை செலுத்தியது முன்னாள் எம்பி ஜே.ஸ்ரீரங்கா என்பது தெரியவந்தது.

சட்டமா அதிபர் வவுனியா மேல் நீதிமன்றத்தில் 11 குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி, தொலைபேசியில் செல்வாக்கு செலுத்த முயன்றதாக குற்றம் சாட்டப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மீது பாதிக்கப்பட்டோர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

குறித்த விசாரணையில் சாட்சியங்களை வழங்கிய இருவரை வாகனத்தில் ஏற்றி வேறு இடத்திற்கு அழைத்துச் சென்று சாட்சியமளிக்கக்கூடாது என அச்சுறுத்தியுள்ளனர்.

செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் சுகத் ரொஷான் சஞ்சீவ, தகவல்களை மறைத்ததாக குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜராகி அனைத்து குற்றச்சாட்டுகளையும் ஒப்புக்கொண்டதாக அறிவித்தார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை பரிசீலித்த நீதிபதி, தலைமை பிரதம பரிசோதகர் சஞ்ஜீவவுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். (அ)

# துருக்கி பஸ் விபத்தில் 27 இலங்கையர் காயம்

கொழும்பு, ஒக. 13

துருக்கியில், இஸ்தான்புல் விமான நிலையத்தில் பணிபுரியும் இலங்கையர்களை ஏற்றிச் சென்ற பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 27 பேர் காயமடைந்துள்ளனர்.

விபத்து இடம்பெற்றபோது பஸ்ஸில் 39 இலங்கையர்கள் இருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது

துருக்கியின் இஸ்தான்புல் விமான நிலையத்தில் அபிவிருத்தித் திட்டமொன்றில் பணிபுரியும் இலங்கையர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளது.

பணி நேரத்தை முடித்துக்கொண்ட இலங்கையர் குழு, பஸ் ஒன்றில் தங்கியிருந்த இடத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, யூப்சுல்தான் பகுதியில் பஸ் கவிழ்ந்துள்ளது.

சுரங்கப்பாதையில் பயணித்த பஸ் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதியில் இருந்து விலகி சுமார் 6 மீற்றர் பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சாரதியுடன் 39 இலங்கையர்கள் பஸ்ஸினுள் இருந்ததாகவும் அவர்களில் 27 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, விபத்தில் காயமடைந்த இலங்கையர்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் பிரதிநிதி ஒருவரை இஸ்தான்புல் நகருக்கு அனுப்பவுள்ளதாக துருக்கியிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.